5-1
A.No. 15765
031:1

சித்ர கவிகள்




வண்ணச்சரபம்

ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் அருளியது

வெளியீடு

சால்பகம்

தஞ்சாவூர்



5-1

சித்திரகவிகள்

...OOR ANDAVAR ...
A. No. 15765
0311.1
...BRARY, KOVILOOR

வண்ணச்சரபம்
ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள்
அருளியது.

[மூலம்—உரை—படவிளக்கங்களுடன்]

உரையாசிரியர்
தவத்திரு தி. செ. முருகதாச சுவாமிகள்
(வண்ணச்சரபம் சுவாமிகளது பெயரர்)
கௌமார மடாலயம், திருவாமாத்தூர்.

பதிப்பு
சால்பகம்
10, இரண்டாவது தெரு, ராஜப்பா நகர்
தஞ்சாவூர்—613 007

முதற்பதிப்பு—1987

சால்பகம் சார்பில்
திரு. ப. சுப்ரமணியன் அறக்கட்டளை
நிதியிலிருந்து வெளியிடப்பெற்றது

கிடைக்குமிடம் :
வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்
35, முருகப்ப முதலித் தெரு,
திருவல்லிக்கேணி (ஐஸ் ஹவுஸ்)
சென்னை—600 005

தேர்வடிவ மேலட்டை மற்றும்
வரைபடங்கள் ஓவியம் : குமார் (நாராயணன்)

விலை : ரூ. 7-00

அச்சிட்டோர் : ஜீவன் பிரஸ், சென்னை-600 005

5-1

பதிப்புரை

தமிழ் மொழியின் செய்யுள் வகைகளில் ஒன்றான பாட்டு (கவி) ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என நான்கு வகைப்படும். இந்நான்கு கவிவகைகளில், சித்திர கவி தமிழ் மொழிக்கே உரித்தானதாகக் கூறலாம்.

கூற்றிருக்கை, மாலைமாற்று, சதுரங்கபந்தம் முதலியன சித்திரகவியின் கீழ் வருபவை.

கடைச்சங்க புலவர் நக்கிரர் பாடிய 'திருஎழு கூற்றிருக்கை' முதலாவதாகும். கி. பி. 7-ஆம் நூற்றாண் டைச்சேர்ந்த சைவ சமயாசாரியாரான திருஞான சம்பந்தர் திருஎழுகூற்றிருக்கைப் பதிகம், மாலைமாற்றுப் பதிகம் அருளியுள்ளார். அதே காலத்துத் திருமாலடி யாரான திருமங்கை ஆழ்வார் 'திருஎழுகூற்றிருக்கை அருளிச் செய்துள்ளார். திருமங்கை ஆழ்வார் நான்கு வகை கவிகளும் பாடியுள்ளதால், அவருக்கு "நாலுகவிப் பெருமாள்" என்ற சிறப்புப் பெயருமுண்டு. கி. பி. 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அருணகிரிநாதரும் திருஎழுகூற்றி ருக்கை அருளிச்செய்துள்ளார். இவ் அருளாளர்களைப் பின் பற்றி, கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய வண்ணச் சரபம் ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் கூற்றிருக்கை, மாலை மாற்று, சதுரங்க பந்தம் ஆகிய சித்திரகவிகளை இயற்றிள்ளார்.

அருளாளர் வண்ணச்சரபம் ஸ்ரீ தண்டபாணி சுவாமி களின் சித்திரகவிகளில் உள்ள இலக்கிய நயத்தையும் சமய உணர்வுகளையும் தமிழர்கள் அறிந்து, மகிழ்ந்து பயனடைய வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு இந்நூல் வெளியிடப் படுகிறது. இனிய நண்பர், ஆராய்ச்சியாளர், முருக பக்தர் வலையப்பேட்டை திரு ரா. கிருஷ்ணன் அவர்கள் இந்நூலை அச்சிடப்படுவதை மேற்பார்வை செய்தும், இந்நூல் நல்ல முறையில் அமைவதற்கான நடவடிக்கை எடுத்தும் அரும் பணி ஆற்றியுள்ளார்கள், அவர்களைப் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். அவர்களுக்கு எனது அன்பு கூடிய வணக்கத்தையும் உளமார்ந்த நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

'சால்பகம்' — **யு. சுப்ரமணியன்**

10, இரண்டாம் தெரு — *9-10-87*

ராஜப்பாநகர், தஞ்சாவூர்—7

பாராட்டு வாழ்த்து

வெண்பா

வண்ணச் சபர மகான்தண்ட பாணிமுனி
எண்ணத்திற் செவ்வேள் இனிதியற்றும்—வண்ணமியற்
செந்தமிழ்ப்பாட் டானுலும் சித்திரப்பாட் டானுலும்
வந்தமையும் என்கை வழக்கு. 1

புத்தம் புதிய முறை போற்றிச் செயும் பாடல்
இத்தரை யோர் கண்டுணர ஏட்டெழுதி—வைத்த
கருவூல மாக்கவிதை கட்களவு கூற
வருவார் எவரே வழுத்து. 2

எக்கவிதை யானுலும் ஏட்டில் ஒருதடவை
கைக்கண் எழுத் தாணிக்குக் கந்தவேள்—அக்கால்
சருவசா தாரணியாச் சாற்ற விளங்கும்
அருமையதில் வேறெதுவுண் டா. 3

தண்டபா ணிப்பேர்த் தவமுருக தாசமுனி
விண்டகவி யாவும்செவ் வேள்தனதாக்—கொண்டதால்
எத்தகைத்தா னுலும் இயற்றல் எளிதன்றே
வித்தகர் போற் றும் சிறப்பா மே. 4

எழுகூற் றிருக்கை யெனமுன்னோர் சொன்னார்
வழுவறஎட் டொன்பதுடன் மாண்பு—தழுவு
தசாங்கமட்டும் ஆறு சமயக்கட வுட்கும்
விசாரமின் றிச் சொல்லல் வியப்பு. 5

பேதவா தங்கடந்த பேரூர் பொதுப் பொருட்கும்
ஓதருமை கண்டார் உவப்புறுவார்—ஈதனைத்தும்
ஒன்ருத் தொகுத்திட் டுரையுடனே சித்திரமும்
நன்ருய் அமைத்தனர் இந் நாள். 6

வலேய பேட் டைக் கிருஷ்ண மாண்பெயரைக் கொண்டோர்
தலேயாய அச்சிட்டுத் தந்து—நிலேயாம்
புகழ்பெற்ற நண்பு பொருந்தவுற்ற மேன்மை
திகழ் சீலர் வாழ்க சிறந்து. 7

சால்பகத்தின் சார்புகொண்டு சாற்று சுப்ர மண்யர் அன்
பால்நிலவ றக்கட்ட ளேப்பயனுய் —வேல் பொருந்து
கையான் அருளாற் கவினப் 'பதித்தமைக்குக்
கைமாறும் உண்டோ கழறு. 8

தண்டபா ணிக்குரவன் சாற்றுபல நூலிடத்துட்
கொண்ட கனிவுளத்திற் கூடலால்—தண்டமிழ்ச்சீர்ப்
பற்றதனுற் சீர்வலேயப் பட்டிக் கிருட்டிணனுர்
நற்பணியைப் போற்றிடுவோம் நாம் 9

நூலாசிரியர் பெயரர்
முருகதாச சுவாமிகள்
கௌமார மடாலயம்
திருவாமாத்தூர்,
விழுப்புரம் (வழி)

அணிந்துரை

'சித்திரக் கவிகள் திரட்டு' என்ற இந்நூலுள் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளிய பல்விதமான சித்திரக்கவிகள் அடங்கியுள்ளன. முதலாவதாக எழு கூற்றிருக்கை என்றுள்ளது. ஒன்றுமுதல் ஏழுகட்டங்கள் கொண்டவற்றுள் எண்கள் அமையும் வண்ணம் ஏறியும் இறங்கியும் அமைத்து அதற்கேற்பத் தலைவன் அருளியல்பைக் கூறுவது முறையாகும். இது போலமைத்து சமயாச்சாரியர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர், ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கையாழ்வார், ஆகியோர் பாடியுள்ளார்கள். அருணகிரிநாத சுவாமிகளும் இயற்றிய பாடல் ஒன்றுண்டு. இவை யாவும் 1, 2, 1 எனவருவனவாகும். உச்சியில் அதாவது முதலில் தனியே 1 என வருவதாயில்லை.

ஆனால் இந்நூலாசிரியரான வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் அம்முறையில் எழுகூற்றிருக்கை ஒன்று இயற்றியுள்ளனர். இதனை ''ஏனோர் விதி தொட்டு'' (பக்-11) என்பதால் அறியலாம். பின்னர் முருகப்பெருமான் உணர்த்தியபடி மற்ற பாக்களை இயற்றும் போது முதலில் (உச்சியில்) 1 அமைத்துப் பின் 1, 2, 1 என முறையே வருமாறு எண் அமையப் பாடியுள்ளனர். இது ஒரு புதிய முறையாகும். சூரியன், சிவன், அம்பிகை, திருமால், விநாயகர், முருகன் என்ற ஆறு சமயக் கடவுளர் மீதும் தனித்தனியே கூற்றிருக்கைப் பாடல் இயற்றியுள்ளது மேலும் புதுமை. மேலும் முன்னோர் அனைவரும் எழு கூற்றிக்கை மட்டும் பாடியிருக்க, இவர் எண், ஒன்பது, தசாங்கக் கூற்றிக்கை என்று அருளியிருப்பது மிகப்பெரும் புதுமையாகும். இவ்வாறு சுவாமிகள் அருளியதின் மூலம் அவர் தம் புலமையும் புதுமையும் அறிவதோடு இவர் தம் தெய்வ அருட் சிறப்பையும் அறிய முடிகிறதன்றோ.

அருணகிரிநாதர் இயற்றிய கந்தரந்தாதி நூலில் 54வது பாடலில் 'த' என்ற வருக்கத்தை அமைத்து பாடியிருப்பது போல இந்நூலாசிரியர் சுவாமிகளும் 'க' என்ற வருக்கத்தில் அமைந்துள்ள ஒருவருக்கப்பாவுள்ளது குறிப்பிடத்துத் தக்கது. இதற்கு உரைக்குறிப்பு சுவாமிகளே எழுதி

யுள்ளர். ஏகபாதம் என்ற பாடலில் நான்கடிகளும் ஒருவரி போல சொல்லால் அமைத்து நான்கு வரிகட்கும் நான்கு பொருளமைய வந்து சிறப்பைத் தந்து கற்றோர்க்குக் களிப் பூட்டுவதாகும். இவைபோல மாலை மாற்று, சதுரங்க பந்தம், தனிக்குறில் வெண்பா, தனி நெடில் வெண்பா முதலியனவும் குறிப்பிடத்தக்கவை. குவிபா, மோழை வெண்பா என்பனவும் புதிய முறையினதாகும். சுவாமிகள் தமது நூலுள் ஓரிடத்தில் ''முதுநெறிப் பனுவல் பல, புது நெறிப் பனுவல் பல'' எனக் குறிப்பிடுகிறார். அம்முறையில் இவை அமைந்தவை போலும் எனக் கருத இடம் தருகிறது.

இந்நூலாசிரியர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளிய இத்தகைய சித்திரக்கவிகளின் சிறப்பைத் தெரிந்து அவற்றைத் தொகுத்து வெளியிட விரும்பியவர் வலையப்பேட்டை திருமிகு ரா. கிருஷ்ணன் அவர்களாவர். சுவாமிகளின் பெயரர் அவர்கள் தெள்ளத் தெளிந்த முறையில் எழுதியுள்ள உரை பலவாற்றாலும் சிறப்பூட்டு வதாக உள்ளது.

தஞ்சை, சால்பகம் சார்பில் திருமிகு யு. சுப்ரமணியன் அறக்கட்டளை நிதியிலிருந்து இவ்வரிய நூல் பதிப்பித்து வெளிவருது 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்றவாறு பெருஞ்சிறப்பினதாகும். எனவே நூல் பதிக்க நிதி வழங்கிய திரு. யு. சுப்ரமணியன் அறக்கட்டளை நிதிக் குழுவினர்க்கும், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் சித்திரக் கவிகளைத் தொகுத்து உரையெழுதி வாங்கி பெருமுயற்சி யுடன் வெளியிட்டுதவிய வலையப்பேட்டை திருமிகு. ரா. கிருஷ்ணன், அவர் சகோதரர் திருமிகு. டாக்டர் ஆத்ரேய ராமசேஷன் அவர்கட்டும், அவர்தம் குடுமபத்தினருக்கும், சித்திரக்கவி படங்களை வரைந்து உதவிய திரு. நாராயணன் (குமார்) அவர்கட்கும், எல்லாம் வல்ல இறைவன் திருவருள் நலமருள வேண்டுமெனத் தமிழகமே வாழ்த்துகிறது என்றால் அதில் நானும் ஒருவன் தானே.

இன்னணம்

தி. மு. சங்கரலிங்கம்

21-8-87 தமிழாசியர், கௌமார மடாலயம்

திருவாமாத்தூர்

அணிந்துரை

வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் இற்றைக்குச் சற்றேறக் குறைய நூற்றைம்பது ஆண்டுகட்கு முன் பிறந்த திகழ்ந்த ஓர் அருட்கவி. இவர் திருநெல் வேலியைச் சேர்ந்தவர். சைவ வேளாள மரபினர். இவரது காலம் 1839 முதல் 1898 வரை இவர் விழுப்புரத்தையடுத் துள்ள திருவாமாத்தூர்ச் சிவதலத்தில் அருட்சமாதி கொண் டார்கள்.

செங்கோட்டைக் கருகிலுள்ள திருமலையில் எழுந்தருளி யுள்ள முருகனருளாலே உயிர் பிழைத்துக் கவிபாடுந்திறம் பெற்ருர். இதனை இந்நூற்ருெகுப்பில் வரும்.

''இருப் புறம் கருங்கல் ஏறி வீழ்நாள்
ஒரு சுடர் அறியப் புரந்தோன்'' (செ-11)
''திருமலை முகட்டிற் சென்று வீழ்கால்
உருவழி வெய்தாது உய்யக் காத்ததும்'' (செ-11)

என்றவரிகளால் அறியலாம்.

மற்றும் தம்மை ஆறுவயதினில் முருகன் ஆட்கொண் டான் என்பதனை ''எழுமையும் என்னை ஆறதில் ஆண்டோன்'' (செ-2) என்பதனுல் பெறவைக்கின்ருர்.

தமது ஊரை ''நெல்லையில் வேண்டிடும் புலவன்'' (செ-2) என்று குறிக்கின்ருர். மேலும் திருச்செந்தூரில் கடலில் வீழ்ந்து இறக்க நினைத்தபோது, தம்மைச் சூரிய மூர்த்தி அங்ஙனம் செய்ய வொட்டாது காத்தான் என்பதை—

''சூர் கெடத் தடிந்த சுடர் வேலான்
மேய ஊர் வழி வேலையில் அமிழப்
போயநாள் புரந்து ஓர் புத்துணர் வளித்தும்'' (செ-11)

என்ற அடிகளால் உணரலாம். இங்ஙனம் தமது வாழ்க் கையில் நிகழ்ந்த வற்றை ஆங்காங்குக் குறிப்பாகக் காட்டி யுள்ளமை தேறலாம்.

இனி, இந்நூற்றொகுப்பில் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் தமிழ்க்கவி பாடுந்திறனையும் சிறப்பாக சித்திரகவிகள் பாடுஞ்சீர்மையினையும் காண்கிறோம். இத் தொகுப்பில் மொத்தம் பன்னிரண்டு கூற்றிருக்கைகள் உள்ளன. அவற்றுள்,

எழுகூற்றிருக்கைகள் —எட்டு (யானைமுகனுக்கு 1; திருமாலுக்கு—1; முருகனுக்கு—2; பாராசக்தி—1: திருவரங் கத்திற்கு—1; திருவல்லிக்கேணிக்கு—1; சூரியனுக்கு—1)

எண்கூற்றிருக்கை —ஒன்று (சண்முகனுக்கு)

ஒன்பது கூற்றிருக்கை —ஒன்று (சிவபொருமானுக்கு)

ஒன்பது கூற்றிருக்கை —ஒன்று (திருமாலுக்கு)

தசாங்கக் கூற்றிருக்கை —ஒன்று (பொதுவாகக் கடவுளர்க்கு)

இனி இந்நூற் றொகுப்பில் சிறப்பாகக் காண வேண்டிய அம்சங்கள்.

I. சில பேர்களைக் குறிக்கும் அருந்தொடர்கள்

ஔவையார்— "இருநீல முழுதும் ஒரு திருவாக்கால் வென்றுளா பெரியாள்" (செ—1)
"மூப்புறு காரிகை" (செ—12)

சிவபிரான்— ஐந்தலைக் கிழவன்" (செ-2)

அருணகிரிநாதர்— "ஒரு கிளி" (செ—2)

ஆதி சங்கராசார்யர்— "மூவிரு சமயமும் ஒன்றெனத் தேறும் ஒரு சங்கரன்" (செ—6)

மாணிக்க வாசகர்— "இருபிறப்பாண்மை முத்தமிழ் அமைச்சன்" (செ—12)

மற்றும், திருமுருகாற்றுப்படை— "அறுபுதுப்பா" (செ—2)

சாயுச்சியம்— "நாலாம்கதி" (செ—3)

II. காப்பு வெண்பாக்கள்

எடுத்த கடவுளுக்கு ஏற்ப அமைந்துள்ள பெற்றிமையை யும், சைவ சித்தாந்தக் கருத்துக்களை ஆங்காங்குப் பொதிய வைத்துள்ள பெற்றிமையையும் காணலாம், (உ-ம்;செ—4)

III. சுவை மிக்க தொடர்கள்

1. நான்மறை வகுத்தோன் அஞ்சத்தாக்கினே(செ—3)
2. ஐம்முகன் வணங்க அறுமுகம் படைத்தனே (செ—3)
3, ஒருபரணருகில் ஒருநாள் இருகை முக்காற் கூப்பி (செ—4)
4. ஐம்முகத்தயனே நான் முகனுக்கினே (செ—5)
5. ஐம்முகச்சிவனுக்கு ஆறுதருவான் ஏழு லோகமும் தாள்கொடு துளைத்தனே (செ—7)
6. எழுத் தெட்டாக்கினே (செ—10)
7. ஆறு படை வீடுகளைக் குறிக்கும் ஓர் வெண்பா (பக்கம்—14)

IV. ஆழ்வார்களைப் பற்றிய குறிப்புகள்

1. திருமங்கையாழ்வார்— 'ஆறலைத் துவக்கும் அஞ்சனமேனி நாற்கவி நம்பி' (செ—7)
2. நம்மாழ்வார்— 'நளிர் புனே நிழற் கீழ், விதிமறை தெளிந்த வியன் தமிழ் ஆயிரம் மொழி தருமுனிவோன்' (செ—7)
3. திருமழிசை யாழ்வார்— 'மூன்று தமிழ்க்கும் நால் வகைக் கவிக்கும் ஐந்திலக்கணந்தெரி ஆரும் புலமையன்' (செ—10)

V. ஷண்மதக் குறிப்புகள்

1. மூவிரு சமயத்து ஒன்றும் தேவரும்யான் ஒருவனேயென இரங்குபு மூன்றும் மைத்துனற் குணர்த்தினே (செ—9)
2. 'குருவும் கணபதியும்' என்று தொடங்கி 'மூவிரண்டாக்காட்டும் முகம்' என்று முடியும் வெண்பா (பக்கம்—55)
3. எறிகதிர் ஒன்றும் சிவனும் பரையும் நாரணனும் ஒற்றைக் கொம்பனும் குகனும் ஒரு பொதுவாகி யிருக்கவைத்தும் (செ—12)

VI கதைக் குறிப்புகள்

1. 'ஓர் மகள் அழக்கண்டு உடன்கரம் அளித்தோன். (செ—2) அதாவது வணிகமாது முருகம்மை யென்பவள் கணவனுல் தாக்கப்பட்டு வருந்திய போது வெட்டப்பட்ட கையினை மீண்டும் விளங்குமாறு உடனே தந்தருளியமை.

2. 'தனைத் தொழும் புலவற்கு ஆறுமாதம் அடிசில் இட்டு அவன் பின்னர் அஞ்சொற் பிடியென நடந்து. (செ—6) அதாவது பராசக்தியானவள் கவிராச பண்டிதர்க்கு, அவர் காசிக்குப் போய்த் திரும்புமளவும் ஆறுமாத காலம் மகளுருக் கொண்டு சோறு சமைத்து உண்பித்துப் பின்னர் அவர் பின்னே நடந்து வந்தமை. (குறிப்பு—விவரம் வல்லார் வாய்க்கேட்டறிக).

இனி, கூற்றிருக்கை நீங்கலான சித்திரகவிகள்

1. மாலைமாற்று— ஸ்ரீரங்கநாதன் (பக்கம் 35), முருகன் மூன்று (பக்கம் 67, 68, 70) இவர்கள் விஷயமாக அமைந்தவை.

2. ஒருவருக்கப்பா— இது தகர வருக்கத்தில் அமைந்துள்ளது (பக்கம்—39)

3. சதுரங்கபந்தம்—திருவரங்கத்தின்மேலது (பக் 72)
4. மும்மண்டில வெண்பா— இதுவும் திருவரங்கத்தின் மேலது (பக்கம்—74)

5. எண்வகைச் சந்தமும் இயைந்த பாடல்—(பக்கம்—76) எண் வகைச்சந்தமும் இன்னவென்பதைத் தண்டபாணி சுவாமிகள் பின்வரும் நூற்பாவால் பெறவைக்கின்றார்.

''தத்தவும் தாத்தவும் தந்தவும் தாந்தவும்
தனவும் தானவும் தன்னவும் தய்யவும்
தத்தாவென் பதி னீடலும் அடங்கும்
எண்வகைச் சந்தமென்பர் பெரியோர்''

(வண்ணத்தியல்பு)

6. ஏகபாதம்— கலிவிருத்தத்தில் அமைந்தது. (பக்-69)
7. தனிக்குறில் வெண்பா, தனிநெடில் வெண்பா (பக்—76)
8. நிரனிறைப் பொருள்கோள் வெண்பா (பக்-76)

இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய இந்நூற்ருகுப்புக்கு இந்நூலாசிரியர் சுவாமிகளின் திருப்பேரனார் தவத்திரு தி. செ. முருகதாச சுவாமிகள் அவர்கள் சீரிய பொருள் விளக்கம் தந்துள்ளார். இவ்விழுமிய நூலினைத் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றி வரவேற்கும் என்று கருதப் படுகின்றது.

இச்சீரிய பதிப்பினை முருகன் திருவருளாலே திரு. U. சுப்ரமணியன் அறக்கட்டளை நிதியிலிருந்து வெளியிடப் பெறும் பாக்கியத்தைப் பெறும் அந்த அறக்கட்டளையை நிறுவிய பெருந்தகைக்கே நன்றிக்கடன் செலுத்த கடமைப் பட்டுள்ளோம்.

திருவாளர் U. சுப்ரமணியன் I. A. S. அவர்கள் இந்து சமய அற நிலையத்துறை ஆணையராக இருந்த காலத்து அவர் தமிழ்த்தாய்க்கு செய்த சேவை பேச்சுக்கு நிலமன்று. சுரும்பார் குழற்கோதை பாடிய திருப்பாவைப் பாடல் களுக்கு ஆங்கிலத்தில் எழுதிய ஆராய்ச்சி நூலை திருவல்லிக் கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி தேவஸ்தானத்தின் சார்பிலே வெளியிட்டமை போற்றத்தக்கது. திருமயிலை கபாலீச்சரர் தேவஸ்தானத்தின் சார்பில் முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் நூலை உரையுடன் கொணர்ந்த சேவையும் குறிப்பிடத்தக்கது. உலகத் தமிழர் மாநாட்டை யொட்டி மதுரையில் நக்கீரர் எழுதிய திருஎழு கூற்றிருக்கை

யையும், அங்ஙனமே சுவாமிமலை, திருவண்ணாமலை திருக்குடந்தை ஆகிய தலங்களில் சலவைக்கல்லில் ரதபந்தத்தில் திருஎழு கூற்றிருக்கைப் பாடல்களை அமைத்துள்ளமை பெரிதும் பாராட்டற்பாலது. இதனைக்காட்டிலும் பொது மக்கட்கு தமிழின் பெருமையையும் சீர்மையையும் அறிவிக்கும் திறன் உண்டோ? தமிழ்த்தாய் என்றும் இந் நற் செயலை உகந்து போருவள் என்பது சரதம். முருகன் திருவருளாலேயும் தமிழ்த்தாயின் தன் அருளாலேயும் திரு. ப.சுப்ரமணியன் அவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து தமது அறக்கட்டளையின் மூலம் மேலும் பல தமிழ்ப்பூண் அணிகளைச் செய்து அனைவர் பாராட்டுதலுக்கும் உரித்தாக வேண்டும் என இறைவன் திருவடிகளில் இறைஞ்சுகின்றேன்.

இச்சிறந்த நூலினை அடியேனை ஒருபொருட்டாக மதித்துப் பார்வையிடும்படி செய்த வலையப்பேட்டை சிரஞ்ஜீவி ரா. கிருஷ்ணன் அவர்களுக்கு நல்லாசிகள் செய்து என்றும் முருகன் திருவருள் அவருக்கு பல சிறப்புகளையும் நல்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

திருவல்லிக்கேணி
சென்னை-5
24-8-87.

இங்ஙனம்
C. ஜெகந்நாதாசார்யர்.

முன்னுரை

ஏழுழுதற் பத்துவரை ஏற்றகூற் றெண்ணமையச்
சூழும் புலவர்மகிழ் தொன் முறையும்—வாழும்
புதுமுறையும் தோயப் புகல் தண்ட பாணி
அதுலனருட் பேற்றின் அணி (தி.மு. சங்கரலிங்கனுர்.)

வண்ணச்சரபம், திருப்புகழ் சுவாமிகள், முருகதாச சுவாமிகள் என்றெல்லாம் போற்றப் பெறும் மகான் அருள் மிகு தாண்டபாணி சுவாமிகளை அறியாதார் சமய உலகில் இலர். திருநெல்வேலியில் 1839-ஆம் ஆண்டு அவதரித்த நம் சுவாமிகள் முருகன் அருள் பெற்ற தமிழ் மாமுனிவராய்த் திகழ்ந்தார். அறுவகைச் சமயங்களான சௌரம், சைவம், சாக்தம், வைணவம், காணுபத்தியம், கௌமார நெறிகளில் பலநூல்களையும், சமய பேதமற்ற பொது நூல்களையும் அருளிய நம் சுவாமிகள் நாடெங்கும் கொல்லா நெறி வளரத் தவமியற்றினுர். சுவாமிகள் அருளிய பாடல்களில் 49,722 தற்போது கிடைத்துள்ளன. பலதலங்களையும் பரவிப் பலநூல்களையும் அருளிய சுவாமிகளைச் சிந்திக்கும் போது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர், அருணகிரிநாதர், முதலியோர் பணிகள் நம் நினைவிற்கு வருகின்றன. சுவாமிகள் அருளிய ஏழாம் இலக்கணம் வண்ணத்தியல்பு, புலவர் புராணம் போன்றவை நம் தமிழ் மொழிக்குப் புதிய அணிகலன் களாகும்.

சுவாமிகள் பால் ஞானேபதேசம் பெற்றவர்களுள் கோயம்புத்தூரை அடுத்த சிரவணபுரத்தில் கௌமார மடாலயம் நிறுவிய தவத்திரு இராமானந்த சுவாமிகளும் ஒருவர் என்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது பல செந்தமிழ் இன்கவிகளைப் பாடியருளி, தெய்வத் தமிழ்க்களஞ்சிய மாகத் திகழ்ந்த நம் கவாமிகள் விழுப்புரத்தையடுத்த திருவா மாத்தூரில் கௌமார மடாலயத்தை நிறுவி 1898 இல் திருவருளில் கலந்தார். சுவாமிகளின் நூல்களைப் பாது காத்துப் பதித்திடும் பணியில் சுவாமிகளின் பெயரர் தவத் திரு. முருகதாச சுவாமிகளும், அவர்களது குமாரர் புலவர், திருமிகு தி. மு. சங்கரலிங்கனுர் அவர்களும் அயராது உழைத்து வருவது போற்றற்குரியது.

வண்ணச்சரபம் ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் அவர்கள் அருளிச்செய்துள்ள சித்திர கவிகள் அனைத்தையும் ஒரே நூலாக உரையுடன் வெளிவரும் பேறுகிட்டியுள் ளது. இப்பனுவல்களைப் பிரதிசெய்து உரையுடன்

உதவிய சுவாமிகளின் பெயரர் தவத்திரு தி. செ. முருகதாச சுவாமிகள் அவர்களும் அவர்களது குமாரர் புலவர் தி. மு. சங்கரலிங்கனுர் அவர்களும் நம் நன்றிக்குரிய நன்மக்களாவர். இந்நூலில் வரும் இப்பனுவல்களை அமைப்பு முறையுடன், மூலமும் உரையும் தந்து அத்துடன் வரை படத்தையும் தனியே அச்சிட்டு இந்நூலை அமைத்துள்ளோம். தேர்வடிவில் பன்னிரண்டு படங்களை அற்புதமாக வரைந்து உதவியுள்ள திரு. குமார் (நாராயணன்) அவர்களுக்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரித்தாகும்.

தமிழன்னை இப்பனுவல்களை அச்சுவடிவில் இப்போது ஏற்றருள முன் வந்துள்ளமை நமது நற்பேறு ஆகும். இந்நூலை வெளிவரத் தூண்டிய இந்து சமய அறநிலையத் துறை முன்னுள் ஆணையர், நம்மதிப்பிற்குரிய திருமிகு U. சுப்ரமணியன், I. A S. (Retd) அவர்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய வல்லேம். அவர்கள் இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையராக இருந்த காலத்தில் வெளிவந்துள்ள திருக்கோயிற் பனுவல்களும், திருப்பணி களும், கல்வெட்டுக்களும் தமிழ்ச்சமய உலகில் புதிய அத்தியாயமாக அமைந்துள்ளன. இந்நூலையும் அவர்களது பெயரில் அமைந்துள்ள அறக்கட்டளை நிதியிலிருந்து அவர் அமைத்துள்ள ''சால்பகம்'' என்னும் கலாசார நிறுவனத்தின் வாயிலாக வெளிவர ஏற்பாடு செய்துள்ளார். அவர்களுக்கு எவ்வாறு நன்றி சொல்வதென்று தெரியவில்லை. தமிழ் இலக்கியத்தில் இம்மாதிரியான அரும் பெறும் மணிகளைத் தேடி எடுத்து பட்டைதீட்டி பிரகாசிக்க அவர் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கு துணை நிற்போம். முருகன் திருவருளால் அவர் வாழ்க பல்லாண்டு என்று போற்றிடுவோம். வண்ணச்சரபம் அருளிய ஏனைய அச்சேருத நூல்களும் விரைவில் வெளிவரத் திருவருளை வாழ்த்து வோம். இந்நூலுக்கு அழகான அணிந்துரை வழங்கிய பேராசிரியர் ஸ்ரீ C. ஜகந்நாதாசார்யர் அவர்களுக்கு எங்களது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேம். சிறப்பான முறையில் அச்சிட்ட ஜீவன் பிரஸ் நிறுவனத்தாருக்கும் எங்களது நன்றி உரித்தாகும்.

ஸ்ரீ ராமநிலையம் — இங்ஙனம்

வலையப்பேட்டை Po — டாக்டர் சேக்கிழார் தாசன்,

கும்பகோணம் — வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்

1-8-1987

இதிலடங்கியன

பதிப்புரை
வாழ்த்துரை, அணிந்துரை
முன்னுரை

1.	யானைமுகன் எழுகூற்றிருக்கை	— 1
2.	முருகவேள் எழுகூற்றிருக்கை I	— 6
3.	முருகவேள் எழுகூற்றிருக்கை II	— 11
4.	சண்முகன் எண் கூற்றிருக்கை	— 15
5.	சிவபெருமான் ஒன்பதுகூற்றிருக்கை	— 20
6.	பராசத்தி எழுகூற்றிருக்கை	— 26
7.	திருமால் எழுகூற்றிருக்கை	— 30
8.	திருமால்—திருவரங்க எழுகூற்றிருக்கை	— 36
9.	திருமால்—திருவல்லிக்கேணி எழுகூற்றிருக்கை	— 40
10.	திருமால் ஒருபது கூற்றிருக்கை	— 45
11.	சூரியன் எழுகூற்றிருக்கை	— 51
12.	பொது—தசாங்கக்கூற்றிருக்கை	— 56
13.	திருவரங்க மாலைமாற்று	— 35
14.	ஒருவருக்கப்பா	— 39
15.	முருகன் மீது மாலைமாற்று	67, 68, 70
16.	ஏகபாதம்	— 69
17.	சதுரங்க பந்தம்	— 72
18.	திருவரங்க மும்மண்டில வெண்பா	— 74
19.	எண்வகைச்சந்தமும் இயைந்த பாடல்	— 76



வண்ணச்சரபம்

ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள்

திருவாமாத்தூர்

சித்ரகவிகள்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று தமிழிலக்கணங்கள் ஐந்து. அவற்றுள் அணி இயலை வடமொழி நூலார் ''அலங்கார சாஸ்திரம்'' என்பர். அலங்கார சாஸ்திரத்தைப்பற்றி அக்னிபுராணம் சிறப்பாகப் புகழ்ந்து பேசுகிறது. இந்த வடமொழிப் பெயரைப்பற்றியே தமிழ்மொழியில் எழுந்த அணியிலக்கண நூல்கள் தண்டியலங்காரமும் மாறனலங்காரமும் ஆகும். இந்த அலங்காரநூலுள் ஒரு பகுதியில் சித்ரகவிகள் பற்றி விவரிக்கப்படுகின்றன.

பொருளமைதியும், யாப்பமைதியும் கொண்டனவாய்ச் சித்திரங்களுள் அமைக்கப்படுமாறு பாடப்பெறும் கவிகள் ''சித்திர கவிகள்'' எனப்படும். இவை மிறைக்கவி வகையைச் சேர்ந்தனவாம். இத்தகைய சித்ரகவிகள், அவற்றிற்கான சித்திரங்களுடனும், பாடல்களுக்குரிய பொருள்களுடனும் விளக்கத்துடனும் தண்டியலங்காரத்திலும், மாறனலங்காரத்திலும் காணப்படுகின்றன. மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய திருநாகைக்காரோண புராணத்திலும் இத்தகைய சித்ர கவிகள் காணப்படுகின்றன.

சித்ரகவிகள் வகைகளில் ஏகபாதம், மாலைமாற்று, சதுர பந்தம், சக்கரமாற்று, சுழிகுளம், நாகபந்தம், மத்தள பந்தம், கோமூத்திரி, எழுகூற்றிருக்கை முதலியன பல உள்ளன. ஏழாம் நூற்றாண்டில் அவதரித்த திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச்செய்துள்ள ஏகபாதம், மாலை மாற்று, திருச்சக்கரமாற்று, ஆவின் பாய்ச்சல் (கோமூத்திரி), திருஎழுகூற்றிருக்கை முதலியன மூல இலக்கியங்களாகத் திகழ்கின்றன. சித்ரகவிகளுக்கு இலக்கணம் கூறும் மாறனலங்காரம் பதினாறும் நூற்றாண்டில் ஏற்பட்டது.

திருஎழுகூற்றிருக்கை :- சித்திர கவிகளுள் ஒன்றான திருஎழு கூற்றிருக்கையில் திரு என்பது சிறப்புப்பற்றி வரும் அடைமொழி ஏழுகூறு அமைந்திருத்தலின் எழுகூற்றிருக்கை எனப்பட்டது. இது 96 வகை பிரபந்தங்களில் ஒன்று. இதனை

ரதபந்தத்தில் அமைப்பது கவிமரபு. இந்த வகையில் திருஞானசம்பந்தரது சீர்காழிக்குரியதும் திருமங்கை யாழ்வாரது திருக்குடந்தைக் (கும்பகோணம்) குரியதும், நக்கீரரது திருஆலவாய் (மதுரை)க்குரியதும், அருணகிரி யாரது சுவாமிமலைக்குரியதும் ஆக திருஎழுகூற்றிருக்கைகள் பழைமையானவையும் முதன்மையானவையும் ஆகும்.

நக்கீரர் அருளியதை மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேச்வரர் திருக்கோயிலிலும், திருமங்கையாழ்வார் அருளியதைக் கும்பகோணம் ஸ்ரீ சார்ங்கபாணி சுவாமி திருக்கோயிலிலும், திருஞானசம்பந்தர் அருளியதைக் கும்பகோணம் ஸ்ரீஆதி கும்பேச்வரர் திருக்கோயிலிலும், அருணகிரிநாதர் அருளி யதைச் சுவாமிமலை, திருவண்ணாமலை ஆகிய இருகோயில் களிலும் சலவைக்கல்லில் தேர்வடிவில் அமைத்து ஓர் ஒப்பற்ற தமிழ்ப்பணியைச் செய்துள்ளவர் நமது போற்று தலுக்குரிய முன்னாள் இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் **திரு U. சுப்ரமணியன், I. A. S.** அவர்கள். அவர் களது முயற்சியினால் மேற்கூறிய எல்லா எழுகூற்றிருக்கைப் பாடல்களுக்கும் படவிளக்கத்துடன் பேராசிரியர் திரு. C. ஜகந்நாதாசார்யர் அவர்களது உரையுடன் ஓர் அருமையான நூல் திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேச்வரர் கோயில் வாயிலாக 1982-இல் வெளிவந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரதபந்தமாவது:- தேரின் உருவம் தோன்றும்படி நேர்க் கோடிட்டுக் கட்டங்களோடு அவற்றில் எண் முறையைப் பின்பற்றி வரும் பாசுரப்பகுதிகளை அடக்க வேண்டும். தேருக்கு மேற்பாகம், கீழ்ப்பாகங்கள் இருப்பனபோல் இந்த ரதபந்தத்திலும் இருபாகம் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாகத்திலும் ஏழு கூறுகள் இருக்குமாறு அமைக்க வேண்டும். அப்படி அமைக்கும்போது முதற்கூறு ஒரு அறையும், இரண்டாம் கூறு மூன்று அறையும், மூன்றாம் கூறு ஐந்து அறையும், நான்காம் கூறு ஏழு அறையும், ஐந்தாம் கூறு ஒன்பது அறையும், ஆறாம்கூறு பதினொரு அறையும், ஏழாம்

கூறு பதின்மூன்று அறையும் உடையதாக இருக்கும். இப்படி நோக்க ஒவ்வொரு அறையும் ஒன்றற்கொன்று இரண்டிரண்டு அறைகள் மேற்படக் காணப்படும்.

திருஞானசம்பந்தர், திருமங்கையாழ்வார், நக்கீரர் ஆகியோர் அருளிச்செய்த எழுகூற்றிருக்கைகளில் முதற் கூறு மூன்று அறைகளும், இரண்டாவது ஐந்தும், மூன்ருவது ஏழும், நான்காவது ஒன்பதும், ஐந்தாவது பதினொன்றும், ஆறு, ஏழாம் கூறுகள் பதின்மூன்று அறையும் உடையனவாக உள்ளன. அருணகிரிநாதர்தான் முதன்முதலில் முதல்கூறு ஒருஅறை என்ற அமைப்பை உருவாக்கியவர். அவருக்குப் பின் அந்த முறையினை வண்ணச்சரபம் கையாண்டுள்ளார்.

மேற்கூறிய அடைவினைப் பின்பற்றித் தேரின் கீழ்ப் பாகத்தையும் அமைக்க வேண்டும். அப்போது மேற் பாகத்தில் உச்சி (Top)யிலிருந்தும், கீழ்ப்பாகத்தில் அடி (Base)யிலிருந்தும் இந்த அமைப்பு முறையைக் காணலாம்.

எண்களின் நிரப்பு: மேற்பாகத்தில்

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1


கீழ்ப்பாகத்தில்

1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 2 1
1 2 1
1


மேற்கூறிய நிரப்புப் படத்தை உற்றுநோக்கின் 1^2, 11^2 (121), 111^2 (12321), 1111^2 (1234321), 11111^2 (123454321), 111111^2 (12345654321), 1111111^2 (1234567654321) என்ற கணித நுண்மையை (Square) of Numbers) ஏறி இறங்கும் முறையினில் காணலாம். மற்றும் ஒவ்வொரு கூறிலுள்ள அறையின் எண்கள் மொத்தத் தையும் கூட்டினால் 1, 4, 9, 16, 25, 36, 49, என ஆகும். அவை முறையே 1^2, 2^2, 3^2, 4^2, 5^2, 6^2, 7^2, என அமையும் நுண்மையையும் சுவைக்கலாம். மேலும் இந்த எண்கள் தேரைச் சூழநின்று தொங்கல் மாலைகள் போலத் தூக்கி நிற்கின்ற பாங்கினையும் ரசிக்கலாம்.


வண்ணச்சரபம் ஸ்ரீதண்டபாணி சுவாமிகள் திருஎழு கூற்றிருக்கை தவிர எண்கூற்றிருக்கை, ஒன்பது கூற்றிருக்கை, ஒருபது (தசாங்கக்) கூற்றிருக்கை என பன்னிரண்டு பாடல்களை அறுவகைச் சமயங்களுக்கும் அருளி யுள்ளார். விநாயகர் (1), சூரியன் (1), பராசக்தி (1), திருமால் (3), முருகன் (3), ஆகிய எழுகூற்றிருக்கைகளும், சண்முகன் எண்கூற்றிருக்கை, சிவபெருமான் ஒன்பது கூற்றிருக்கை, திருமால் ஒருபது கூற்றிருக்கை, பொதுக் கடவுள் (ஷண்மத) தசாங்கக் கூற்றிருக்கை ஆகப் பன்னிரண்டு உள்ளன.

எட்டு, ஒன்பது, ஒருபது கூற்றிருக்கை ஆகிய வகைகள் இதுவரை வண்ணச்சரபம் தவிர வேறு ஒருவராலும் இயற்றப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பொதுக் கடவுள் தசாங்கக் கூற்றிருக்கை மேலே ஆரம்பித்துக் கீழ்ப் பாகம்வரை தொடர்ந்து ஒரே பாடலாகச் சென்று முடிகிறது என்பது சிறப்புடையதாகும். இவைகளின் விவரமான விளக்கப்படங்கள் இந்நூலில் தனியே இணைக்கப் பெற் றுள்ளன. மேலும் இந்நூலில் வண்ணச்சரபம் அருளிய மாலை மாற்று, சதுரங்கபந்தம் ஆகியவைகளும் படத்துடன் சேர்க்கப்பெற்றுள்ளன.




யானைமுகன் எழுகூற்றிருக்கை





முருகவேள் எழுகூற்றிருக்கை I



முருகவேள் எழுகூற்றிருக்கை II

```
            1
          1 2 1
        1 2 3 2 1
      1 2 3 4 3 2 1
    1 2 3 4 5 4 3 2 1
  1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
```

உ

கணபதி துணை

யானைமுகன் எழுகூற்றிருக்கை

காப்பு: வெண்பா

யானை முகனுக்(கு) எழுகூற் றிருக்கை சொல்லிப்
பூனை அனையார் புலைநீக்கி—ஏனையரும்
கொண்டாடும் வண்மைக் குருவா விளங்கஅவன்
தண்டாம ரைத்தாள் சரண்.

எழுகூற்றிருக்கை அமைப்பு:

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

எழுகூற்றிருக்கை:

ஒருபிர ணவத்தின் ஓர்பொரு ளாயினை,
இருபெருங் கோட்(டு)ஒன் றிறுத்துல களித்தனை,
ஒற்றைக் கொம்பன் என்று உரைப்பினும் மகிழ்ந்தனை,
இருபதம் கருதி முந்நவை தவிர்ந்துய்ந்து

இருநில முழுதும் ஒருதிரு வாக்கால்
வென்றுள பெரியாள் மிகும்உவப் பெய்த
ஒருபெரும் பனைபோன்று இருபுழையாய
மூக்கொடு நாலும் கைகொடு மூவா
இருள் பொழிற் சாரல் வெண்மலை ஒன்றில்
ஓரத்து இருவர் நாணுற உய்த்தனை,
முக்கண் ணன்கருத்து அஞ்சுபு நாற்றிசை
அறியப் போற்று ததுகுறித்து அந்நாள்
முப்புரத் தினர்மேல் முரணொடு செலுத்தும்
இரதத்து அச்சொன்று இம்மென ஒசித்தனை,
ஒருகவி பாடும் இருவர்க் கருளினை,
முத்தீ ஓம்பும் நான்மறைப் பனவன்
அஞ்சலித்து உதவும் அறுகொன் றருந்தினை,
அஞ்சன மலைநேர் நால்வாய் அவுணனை
மூவுல கறியக் கொன்றனை, இருகைக்
கனல்வரை போலும் ஒருவன் துய்த்தனை,
ஒரு பொது முதலாய் இருமையில் மேவினை,
முத்தமிழ்ப் புலமையில் நாற்கவிச் சீரும்
ஐஞ்ஞிறச் சொல்லோடு அருள்வார்க் கருளினை,
ஆறு போலும் எழும்ஒலி மதத்தினை,
ஆறுமுகத்து இளையோன் ஐங்கணை மதனால்
மெலிவுறீஇப் புனத்தில் முன்னச் சென்றனை,
இருதரம் என்றற்கு உறுதி சொற்றனை
ஒருவிசை இகல்போன்று உரிமைபா ராட்டினை,
எளியனேன் முயலும் எவ்வித நலத்தினும்
இடையிடை தோன்றும் இடையூறு யாவும்
தீர்தரப் புரிந்து திருவருட் கடலில்
முழுகச் செய்து மோசமில் வலிமைச்
சித்திமிக் குதவித் திரும்பிப் பிறவா
முத்தியிற் கூட்ட முன்னுதி இன்னே !

பாடல் பொருள் விளக்கம்

ஒரு - ஒப்பற்ற, பிரணவத்தின் - பிரணவம் என்ற எழுத்தின், ஓர் பொருள் ஆயினே - உருவமும் பொருளுமாயிருத்தாய், இரு - இரண்டாயுள்ள, பெருங்கோட்டு - பெரிய கொம்பையுடைய நீ, ஒன்று - ஒருவலக் கொம்பை, ஒசித்து- ஒடித்தெடுத்து, உலகு அளித்தனே-உலகைக் காத்தருளினுய், ஒற்றைக் கொம்பன் - ஒரு கொம்பினையுடையான், என்று - என்பதாக, உரைப்பினும் - கூறினுலும், மகிழ்ந்தனே - உவப் படைகின்ருய், இருபதம் கருதி - இரண்டு திருவடிகளையும் சிந்தித்து, முந்நவை தவிர்ந்து - ஆணவம், மாயை, கன்மம் என்ற மூன்று குற்றமும் அற்று, உய்ந்து - உமது திருவருள் பெற்று, இருநிலமுழுதும் - பரந்துள்ள இவ்வுலக முற்றும் ஒரு திருவாக்கால் - ஒப்பற்ற வாக்குவன்மையால், வென்றுள - யாரும் ஒப்பும்படியான அருள் மொழியால் சிறப்புற்ற, பெரியாள் - முதியவளான ஔவையார், மிகும் உவப்பெய்த - பெருமகிழ்வடையும்படி, ஒரு பெரும்பனே போன்று - பனைபோல் பருமனுனதும், இரு புழையாய- இரண்டு துவாரங்களையுடைய, மூக்கொடு - மூக்கினதும், நாலும் - தொங்குகின்ற, கைகொடு - கையின் துணையால், மூவா - கெடுதலற்ற, இருள் பொழில் - இருண்ட குழலை யுடைய, சாரல் - சோலைமிக்க, வெண்மலை ஒன்றில்- வெள்ளி மலையான ஒன்றில், ஓரத்து - ஒருதலை பட்சமாகச் சென்ற, இருவர் - சேரமான் பெருமாள் நாயனுர், சுந்தர மூர்த்தி சுவாமிகள் என்ற இருவரும், நாணுற - வெட்கம் அடையும்படி, உய்த்தனே - அவர்கட்கு முன்னேயிருக்கும்படி எடுத்துவிட்டனே.

முக்கண்ணுன் - முக்கண்ணுடைய சிவபிரானது, கருத்து - மனம், அஞ்சுபு- பயமடையுமாறு, நாற்றிசை - நான்கு திக்கிலும் உள்ளவர், அறிய - தெரியும்படி, போற்ருதது குறித்து - வணங்காமை கருதி, அந்நாள் - அக்காலத்தில் முப்புரத்தினர்மேல் - திரிபுரத்து அசுரர்மீது, முரணெடு-

சினம் எய்தி, செலுத்தும் - செலுத்திய, இரதத்து-தேரினது, அச்சு ஒன்று - ஒரு அச்சினை, இம்மென - இம் மென்ற ஒலி எழும்படி, ஒசித்தனை - ஒடியும்படி செய்தாய்.

ஒருகவி - பாடல் ஒன்றினை, பாடும் - பாதி பாதியாகப் பாடுபவரான, இருவர்க்கு - இரட்டைப் புலவர்கட்கு, அருளினை - அருள் புரிந்தாய்.

முத்தீ-காருகபத்தியம், தக்கணுக்கினியம், ஆகவனீயம் என்ற மூவித நெருப்பினுல், ஓம்பும்-வேள்வி செய்கின்ற, நான்மறைப்பனவன் - நான்கு வேதத்துக்குரிய அந்தணன், அஞ்சலித்து உதவும் - அன்புடன் வணங்கிக்கொடுத்த, அறுகு ஒன்று- அறுகு ஒன்றினை, அருந்தினை - உண்டருளினுய்.

அஞ்சனமலைநேர் - கரியமலை போன்றுள்ள, நால்வாய் - தொங்குகின்ற வாயினையுடைய, அவுணனை - கயமுகத்த சுரனை, மூவுலகறிய - மூன்று உலகமும் அறியும்படி, கொன்றனை - அழிவு செய்தாய்.

இகுகை - இரண்டு கையுடைய, கனல்வரை போலும் - நெருப்புமலை போன்ற, ஒருவன் - அனலாசுரனை, துய்த்தனை-உண்டருளினுய்.

ஒரு - ஒப்பற்ற, பொதுமுதலாய் - எவரும் போற்றும் பொதுக்கடவுளாக, இருமையில் - மனித வடிவும் விலங்கு வடிவமுமான, மேவினை - திருவுருவுடையனுனுய்.

முத்தமிழ்ப்புலமை - மூவிதத் தமிழ்ப்புலமை பெற்று, நாற்கவி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நான்கு விதக் கவிச் சிறப்பும், ஐஞ்ஞிற - கருப்பு, சிவப்பு, வெள்ளை, பளிங்கு, பொன் என்ற ஐந்து வகையான, சொல்லோடு - சொற்றமிழ்ப் பாடலை, அருள்வார்க்கு - பாடித்துதிப்பவர் கட்கு, அருளினை - திருவருள் புரிகின்ருய்.

ஆறு போலும் - ஆற்றின் வெள்ளம் போல, எழும்ஒலி-ஓசையுடன் பெருகும்படியான, மதத்தினை - மதநீருடையாய்

ஆறு முகத்து - ஆறுமுகமுடைய, இளையோன் - முருகப் பெருமான், ஐங்கணை - ஐந்து மலரம்புடைய, மதனல் - மன்மதன் கணையால், மெலிவுறீ - வள்ளி நாயகியின் மோக முற்றபோது, முன்ன - எண்ணியசமயம், சென்றனை - யானை யாகப் போயினுய்.

இருதரம் - இரண்டு தடவை, என்றற்கு - அடியேனுக்கு உறுதி சொற்றனை - திடமான அருளுரை கூறினுய்.

ஒருவிசை - ஒரு தடவை, இகல் போன்று - பகைமை யுடையார் போலத் தோன்றி, உரிமை பாராட்டினை - அன்பு காட்டினுய்.

எளியனேன் முயலும், எவ்வித நலத்தினும் - செய்யும் எத்தகைய தவமுயற்சியிலும், இடையிடைத் தோன்றும் - கடையிடை மத்தியில் தோன்றுகின்ற, இடையூறுயாவும் - தடைகள் எல்லாவற்றையும், தீர்தர - இல்லாமற்போம்படி புரிந்து - திருவருள் பாலித்து, திருவருட்கடலில் - பேரின் பத்தில், முழுகச் செய்து - அமிழும்படி அருளி, மோசமில் - தாழ்வற்ற, வலிமை சித்திமிக்கு உதவி - வல்லமைமிக்க திருவருளாடலைக் கொடுத்து திரும்பிப் பிறவா - மறுபடியும் பிறவாதவாறு, முத்தியில் கூட்ட-வீடுபேற்றில் சேரும்படி, முன்னுதி இன்னே - இப்போதே திருவுள்ளத்தில் எண்ணு வயாக.

❀

உ

முருகக் கடவுள் துணை

முருகவேள் எழுகூற்றிருக்கை I

காப்பு-வெண்பா

தொழுவார்க் கிரங்கும்அயிற் றோளாஊை நாடி
எழுகூற் றிருக்கை இயம்பக் - குழுவாய
தொண்டரொடு பாருலகைச் சூழுந் தொழிற்பெரியோர்
புண்டரிகப் பூந்தாள் புகல்.

எழுகூற்றிருக்கை அமைப்பு :

					1	2	1					
				1	2	3	2	1.				
			1	2	3	4	3	2	1			
		1	2	3	4	5	3	3	2	1		
	1	2	3	4	5	6	5	4	3	2	1	
1	2	3	4	5	6	7	6	5	4	4	2	1
1	2	3	4	5	6	7	6	5	4	3	2	1

எழுகூற்றிருக்கை

ஒருவேல் ஏந்தினன், இருமகட் புணர்ந்தோன்,
ஒருபரி நடத்தினன் , ஓர்வார்க்கு எளியான்,
இருமையும் விளக்கி மும்மலம் கெடுப்போன்,
இருந்திறற் கூற்றை ஒருவும் புகழோன்,
ஓரை நூல் ஈர்ப்ப முக்குணத் தயர்ந்து

நாற்பயன் கருதார் முத்தமிழ் பாடும்
ஈரமில் மனத்தார் ஒன்ரு அருளினன்,
ஓரம் ஆர்ந்த இருள்படும் நெறியார்
மூவா நான்மாடக் கூடலிற் புக்கன்று
ஐந்தலைக் கிழவனை நாலடிக் கவியால்
மூவிசை ஏத்தி இராதறத் தடிந்தோன்,
ஓர்மகள் அழக்கண்டு உடன்கரம் அளித்தோன்,
ஒருபேய் இருபிள வாக நூறி
முந்நீர் உடைந்தெனச் செந்நீர் பெருக்கி
நால்வாய்க் கரியுறழ் ஐவகை இலக்கணப்
புலவன் பகர்அறு புதுப்பாப் புனைந்தோன்,
ஐயம் தீர்தர நான்கொளும் பிறப்பின்,
பயன்றனை முக்காற் பகர்ந்த பண்ணவன்,
இருப்புறழ் கருங்கல் ஏறி வீழ் நாள்
ஒருசுடர் அறியப் புரந்தோன், அகவும்
ஒருமயில் ஈரக் கலாப நிழலில்
மூவகைப் பொழுதினும் நாலு கரணமும்
ஐந்து பொறிகளும் அடங்கஆ றெழுத்தும்
அறுநெறி முதல்என் றறிந்துஇனி துரைப்பார்க்கு
அஞ்சல் நல்கும் நாற்றேுட் குமரன்
முத்தொழிற் றேவர் முறைமுறை வணங்கும்
இருதாட் சரவணன், இளமை நீங்கா
ஒருவன், ஒருகிளி ஈர்ங்கவி வினவும்
முருகன், மூன் றுலகும் படைத்த நான்முகன்
அஞ்சுமாறு இடித்தோன், எழுமையும் என்னை
ஆறதில் ஆண்டோன், அஞ்சனக் கருங்கண்
நாற்குணம் மும்முலை நலங்கொடன் றுதித்தாள்
இருகரத்து ஒருசேய் எனவும் வந்து
பாண்டிநா டுய்யப் பரிந்தோன் நெல்லையில்
வேண்டிடும் புலவனை வெறுக்கலன் ருனே.

பாடல் பொருள் விளக்கம்

ஒருவேல் - ஒப்பற்ற வேற்படையை, ஏந்தினன் - கையிற் கொண்டனன், இரு மகட் புணர்ந்தோன் - வள்ளி தெய்வ யானை என்ற இரு சக்திகளையுடையவன், ஒரு பரி நடத்தினன் - அழகிய மயிலைக் குதிரையாக (வாகனமாக) செலுத்துவோன், ஓர்வார்க்கு-தன்னையறியும் அன்பர்கட்கு, எளியான் - எளிதில் அருள்பவன், இருமையும் விளக்கி - இவ்வுலகம் மறுஉலகம் என்ற இரண்டின் பயன்களை அறிவித்து, மும்மலம் கெடுப்போன் - ஆணவம் முதலிய முக்குற்றங்களையும் அகற்றுபவன், இருந்திறல் - மிக்க வலிமையுடைய, கூற்றை - எமவாதனையை, ஒருவும் - போக்கும், புகழோன் கருணையை உடையவன், ஓரை நூல் ஈர்ப்ப-இராசி லக்கின வகை கூறுகின்ற சோதிட நூல்வழி சென்றும், முக்குணத்து அயர்ந்து - தாமத, ராசத, சத்துவம் என்ற குணங்களின் தொடர்பால் துன்பம் உற்றும், நாற்பயன் கருதார் - அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பேறுகளை எண்ணாதவர், முத்தமிழ்ப் பாடும் ஈரம் இல் மனத்தார் - மூவிதத் தமிழ் பாடியும் அன்பற்ற மனம் உடையவர் (ஆகிய இன்னோர்), ஒன்று அருளினன் - பொருந்த பெருத் திருவருளை உடையவன், ஓரம் ஆர்ந்த - ஒருபக்கமான கருத்துடன், இருள் படும் நெறியார் - மயக்கமான சமயத்தினரான சமணர்களை, மூவா நான்மாடக் கூடலில் - என்றும் விளங்கும் மதுரையம் பதியில், அன்று புக்கு - முன்பு திருஞான சம்பந்தராகச் சென்று, ஐந்தலை - ஐந்து திருமுகங்களையுடைய, கிழவனை-தலைவரான சிவபிரானை, நாலடிக்கவியால் - நான்கு அடிகளைக்கொண்ட தமிழ்ப்பாக்களால், மூவிசை ஏத்தி - மும்முறை துதித்து, இராது அற தடிந்தோன் - (அச்சமண சமயம்) மறையும்படி அழித்த பெருமான், ஓர் மகள் அழக் கண்டு - வணிக மாதான முருகம்மை கணவனால் தாக்கப் பட்டு வருந்தியபோது, கரம் - வெட்டப்பட்ட கையினை, உடன் அளித்தோன் - மீண்டும்விளங்குமாறு உடனே தந்தருளியவன், ஒரு பேய் - ஆயிரவரைச் சிறை செய்த பூதம்,

இருபிளவாக - இரண்டு கூறாய் விழும்படி, நூறி - கொன்று, முந்நீர் என - ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்ற மூன்றும் கூடிய கடலானது, உடைந்தென - கரையற்றது போன்று, செந்நீர் பெருக்கி - இரத்தம் பெருகுமாறு, நால்வாய்க்கரி உறழ் - தொங்கும் துதிக்கையையுடைய யானைக்கு ஒப்பானவரும், ஐவகை இலக்கண - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, என்ற ஐந்திலக்கணமும் அறிந்த வருமான, புலவன் - நக்கீரர், பகர் - பாடிய, அறுபுதுப்பா - ஆறுதலங்களினியல்பு கூறிய திருமுருகாற்றுப்படையை, புனைந்தோன் - ஏற்றருளியவன்.

ஐயம் தீர்தர - சந்தேகமில்லாதபடி, நான் கொளும் - அடியேன் எய்திய, பிறப்பின் பயன்தனை - பிறவியினது தன்மையை, முக்கால் - மூவிசை, பகர்ந்த - என்னிடம் கூறியருளிய, பண்ணவன் - முருகவேள் - இரும்பு உறழ் - இரும்பினை ஒத்த, கருங்கல் - கருங்கல் மலையான திருமலையின் மீது, ஏறி வீழ்நாள் - ஏறி உயிர்விடச் சென்று உருண்ட போது (என் உடல் இறவாதவாறு), ஒரு சுடர் அறிய - ஒப்பற்ற சூரியன் அறிய, புரந்தோன் - காத்தருளியகடவுள், அகவும் - கூவுகின்ற, ஒருமயில் - ஒப்பில்லாத மயில் வாகனத்தின், ஈரகலாப - குளிர்ந்த தோகையின், நீழலில் - அடியில் இருக்கும்படி, மூவகைப் பொழுதினும் - காலை உச்சி மாலை என்ற மூன்று வேளையும், நாலு கரணமும் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்தகரணம் நான்கும், ஐந்து பொறியும் - மெய், வாய், கண், மூக்கு- செவி என்ற ஐம்பொறிகளும், அடங்க - தம் செயலிழந்த நிட்டையில், ஆறெழுத்தும் - சடாட்சர மந்திரமும், அறு நெறி - ஆறு சமய முறைகளும், முதல் என்று அறிந்து- இன்றியமையாததென உணர்ந்து, இனிது உரைப்பார்க்கு - அன்புடன் செபிப்பவர்கட்கு, அஞ்சல் நல்கும் - அபயம் அருளும், நாற்றோள்குமரன் - நாற்புயமுடைய குமாரக் கடவுள், முத்தொழில் தேவர் - படைத்தல், காத்தல், துடைத்தல் என்ற மூவகைச் செயலுடைய பிரமன்,

திருமால், உருத்திரர் என்பவர், முறை முறை வணங்கும் - வரிசைப்பட வணங்கக்கூடிய, இருதாள் சரவணன் - இரு திருவடிகளைக்கொண்ட சரவணப் பெருமான், இளமைநீங்கா ஒருவன் - என்றும் இளமை மாருதவன், ஒருகிளி-அருணகிரி நாதரான கிளி கூறிய ஈர்ங்கவி - உயர்ந்த சந்தப்பாடலை. வினவும் - கேட்டருளிய, முருகன் முருகப்பெருமான் மூன்று உலகமும் படைத்த நான்முகன் - மண், விண், பாதலம் என்ற மூன்று உலகங்களையும் உண்டாக்கிய பிரமதேவன், அஞ்சு மாறுஇடித்தோன் - அஞ்சும்படி குட்டிய கடவுள்,

எழுமையும் - எழுவகைப் பிறப்பிலும், என்னை, அடியேனை, ஆறதில் ஆண்டோன் - ஆறு வயதளவிலேயே ஆட்கொண்டருளிய பெருமான், அஞ்சன - மைதீட்டப் பெற்ற, கருங்கண் - விழியுடையவளும், நாற்குண - நாணம் அச்சம் மடம் பயிர்ப்பு என்ற நான்கு குணமுடையவளும்- மும்முலை நலங்கொடு அன்று உதித்தாள் - மூன்று தனங் களோடு அங்கயற் கண்ணம்மையாக வந்தவதரித்த உமைய வளது, இருகரத்து - இரண்டு கைகளிடத்தும், ஒரு சேய் எனவும் வந்து - ஒப்பற்ற குழந்தை வடிவாகி வந்து, பாண்டி நாடு உய்ய பரிந்தோன் - தென்னுடு உய்வடையும்படி உக்கிர குமார பாண்டியனுகத் தோன்றி ஆண்டவன், நெல்லையில் - திருநெல்வேலியில், வேண்டிடும் புலவனை - தன்னை வழிபடும் புலவனுகிய அடியவனை, வெறுக்கலன் - வெறுப் பின்றி ஏற்றுக்கொள்வான் (எ - று. தானே - அசை.)

அப்பனே ! என்குருவே ! ஆறுமுகத்தானே !
கைப்பரசு கொண்டபிரான் கண்மணியே—துப்பனைய
மேனியனே ! வென்றிவடி வேலானே ! நின்னடிக்கீழ்
நானியலு மாறு நவில்.

முருகக் கடவுள் துணை

முருகவேள் எழுகூற்றிருக்கை II

காப்பு : வெண்பா

ஏனோர் விதிதொட்(டு) எழுகூற் றிருக்கைசொல்லி
யானோர்ந்த வாறும் இசைக்கின்றேன்-வானோர்நேர்
ஒண்டகைய நெஞ்சம் உடையார் உலகில் உண்டேல்
கண்டறிந்து கொள்ளல் கடன்.

எழுகூற்றிருக்கை அமைப்பு :

						1						
					1	2	1					
				1	2	3	2	1				
			1	2	3	4	3	2	1			
		1	2	3	4	5	4	3	2	1		
	1	2	3	4	5	6	5	4	3	2	1	
1	2	3	4	5	6	7	6	5	4	3	2	1

எழுகூற்றிருக்கை :

ஒன்றாய்ப் பலவாய் ஒழிவற நிறைந்தனை,
ஒருபெரும் பொருளாய் இருசுடர் ஆனாய்,
ஒன்றி ஒன்றாது இருவகை வடிவும்
மூவகைத் தேவரொடு இருக்கையும் தானாய்
ஓர் ஓர் இருடிகள் முப்பயன் துய்த்து

நாலாம்கதியிடை மூவா து இருக்க
ஒருமையில் நிறுவினை, ஒருவா அருளினை,
இருநில முதலா மூன்றுல கினுக்கும்
நான்மறை வகுத்தோன் அஞ்சத் தாக்கினை,
நான்மூன் றடற்றேள் இருமருங்கு ஒன்றினை,
ஒருமகத் தெழுந்த இருகோட்டு ஆடும்
மும்மதம் நால்வாய் ஐவன மஞ்ஞை
ஆறு தோறும் அஞ்சா து ஒச்சினை,
நான்மணி மாலை மும்மணிக் கோவை
இரட்டைமணி மாலை முற் பகர்ஒருங் கணிந்தனை,
ஒருமா இருபிளப் பாகச் செற்றனை,
மும்நவை களைந்து நால்வர்க் கருளிய
ஐம்முகன் வணங்க அறுமுகம் படைத்தனை,
ஏழுவா ரத்து இயல்எனக் குணர்த்தினை,
ஆறிலக் கணத்தூடு அஞ்சல் நல்கினை,
நால்வகைக் கவிதரும் முத்தமிழ் வகுத்தோன்
இருபதம் தொழக்கண்டு இனிதருள் புரிந்த
ஒருமொழிப் பயனையும் உதவென இரப்பான்
மலைதொறும் சென்று வருவதென் வழக்கே.

பாடல் பொருள் விளக்கம்

ஒன்றாய் - கடவுள் ஒன்றென்பதற்கும், பலவாய் - பல என்பதற்கும் ஏற்ப, ஒழிவுஅற - பார்க்குமிடமெல்லாம் நீக்கமற, நிறைந்தனை - நிறைந்து விளங்குகின்றாய்; ஒரு பெரும் பொருளாய் - இணை ஒன்று கூற இயலாத பரம் பொருள் ஒன்றேயாகி, இருசுடர் ஆனாய் - சூரியன் சந்திரன் என்ற இரண்டு சுடராகத் திகழ்கின்றாய்; ஒன்றி - எல்லாப் பொருளிடத்தும் கலந்தும், ஒன்றாது - கலவாமலும், இரு கை வடிவும்- (இயங்குயிர், நிலையுயிர்) ஆண், பெண் என்ற இருவகையிலும், மூவகைத் தேவர்- சிவன், மால், பிரமன் என்ற மூவர்கள் வடிவிலும், இருக்கையும் தானாய் - விளங்கு

வது நீயே என்று உணரும்படி, ஓர் ஓர்-ஒவ்வொரு, இருடிகள்-முனிவர்கள், முப்பயன் - அறம், பொருள், இன்பம் என்ற மூன்றினையும், துய்த்து - நுகர்ந்து, நாலாம் கதியிடை - சாயுச்சியம் என்ற வீடு பேற்றில், மூவாது இருக்க - மீண்டும் பிறவியில் வராமல், ஒருமையில் நிறுவினை - பரத்துடன் ஒன்றும்படி திருவருள் புரிந்தாய்; ஒருவா - விலக்கப்படா துள்ள, அருளினை - திருவருளினை உடையாய்.

இருநிலா முதலா - பரந்த இவ்வுலக முதலான, மூன்று உலகினுக்கும்-மண் விண் பாதலம் என்ற மூன்று உலகுக்கும்-நான்மறை வகுத்தோன் - நான்கு வேதங்களை முறைபடச் செய்த பிரமன், அஞ்ச - பயப்படும்படி, தாக்கினை - குட்டிச் சிறையிட்டாய்; நால் மூன்று - பன்னிரண்டாயுள்ள ,அடற் றோள் - வலிமையான தோள்களை, இருமருங்கு ஒன்றினை - வலம், இடம் என்ற இரண்டு பக்கங்களிலும் விளங்கக் கொண்டுள்ளாய்; ஒரு மகத்து எழுந்த - நாரதர் செய்த யாகத்திலிருந்து தோன்றியதான, இருகோட்டு ஆடும்-இரண்டு கொம்புடன் உள்ள செம்மறியாடும், மும்மதம்-கன்னமதம், கபோலமதம், கோசமதம் என்ற மூன்றுடன், நால்வாய் - தொங்குகுன்ற துதிக்கையுடைய யானையும், ஐவன-ஐந்து வண்ணங்களைக் கொண்ட, மஞ்ஞை - மயிலும் (என்றுள்ள மூவித வாகனங்களை) ஆறு தோறும் - எல்லா இடங்களிலும் செல்லும்படி, அஞ்சாது ஒச்சினை - தைரியத் துடன் செலுத்துகின்றாய்;

நான்மணிமாலை, மும்மணிக்கோவை, இரட்டை மணி மாலை - நான்மணிமாலை, மும்மணிக்கோவை, இரட்டை மணி மாலை, முற்பகர் - முதலாயுள்ள பாமாலைகளை, ஒருங்கு அணிந்தனை - முழுமையாக அணிந்தருளினாய்; ஒருமா-சூரபன்மனான மாமரம் ஒன்றை, இருபிளப்பாக - இருகூறாக விழும்படி, செற்றனை- வேலாயுதத்தாற் கொன்றருளினாய்; முந்நவை - ஆணவம் கன்மம் மாயை என்ற மும் மலங்களையும், களைந்து - இல்லாமற்போக்கி, நால்வர்க்கு-

பரமான்மாக்களான சனகாதி முனிவர்களுக்கு (சமயா சாரியார் நால்வர்கட்கு), அருளிய திருவருள்புரிந்த, ஐம் முகன் வணங்க - சிவபிரான் போற்றும்படி, அறுமுகம் படைத்தனை - அறுமுகச் சிவனாக விளங்குகின்றாய்; ஏழு வாரத்து - ஞாயிறு முதலான ஏழு கிழமைகளின், இயல்- சூரியன் முதலிய கடவுளர்களும் அதீதமான பரமும் என்ற அமைப்பை, எனக்கு உணர்த்தினை - அடியேனுக்கு அறிவுக் கறிவாயிலிருந்து அறியச் செய்தாய்; (அல்லாமலும்), ஆறு இலக்கணத்தாடு - சூரியன், சிவன், அம்பிகை, திருமால், கணபதியுடன் முருகன் என்ற ஆறு சமயக் கடவுளர் வடிவில் தோன்றி, அஞ்சல் நல்கினை - அபயம் அளித்தருளினாய்.

நால்வகை கவிதரும் - ஆசு, மதுரம், சித்திரம், வித்தா ரம் என்ற நால்வகைக் கவிகள் பிறப்பிடமாகிய, முத்தமிழ் வகுத்தோன் - இயல் இசை நாடகம் என்ற முத்தமிழையும் இலக்கணவகைப்படுத்திய அகத்திய முனிவர் இருபதம் தொழக்கண்டு - இரண்டுதிருவடிகளையும் வணங்கியபோது, இனிது அருள் புரிந்த - கருணையுடன் உபதேசித்ததான, ஒரு மொழி பயனையும்-பிரணவப் பொருளையும், உதவுஎன - உபதேசித்தருள வேண்டும் என, இரப்பான் - வேண்டிக் கொள்ளும் பொருட்டு, மலைதொறும் சென்று, உனது இருப்பிடமான மலைக்கோயில்கள் தோறும் சென்று, வருவது என் வழக்கு-வருவது நலம் என்று எண்ணுவதும் அதன்படி நடப்பதும் எனது வேண்டுகோளும் செயலுமாகும். எ-று ஏ - அசை.

பழனியப்பா! ஏரகத்தப் பா! செந்தில் அப்பா
அழகுமலி சோலைமலை யப்பா!— கழகம்
புகழ்பரங்குன் றப்பா! பொருப்பினங்கள் தோறும்
திகழும்அப்பா! நீகருணை செய்.

—வண்ணச்சரபம்

உ

முருகக் கடவுள் துணை

சண்முகன் எண்கூற்றிருக்கை

காப்பு : வெண்பா

பெண்கூற் றுருவுடைய பித்தன்விழிப் பிள்ளையன்பால்
எண்கூற் றிருக்கை யிசைப்பதற்குக்-கண்கூற்றுத்
தோகை மயிலும் சுடர்வேலும் சூரரஞ்சும்
வாகைமலி சேவலுங்கா வல்.


எண்கூற்றிருக்கை அமைப்பு :

							1							
						1	2	1						
					1	2	3	2	1					
				1	2	3	4	3	2	1				
			1	2	3	4	5	4	3	2	1			
		1	2	3	4	5	6	5	4	3	2	1		
	1	2	3	4	5	6	7	6	5	4	3	2	1	
1	2	3	4	5	6	7	8	7	6	5	4	3	2	1

எண்கூற்றிருக்கை :

ஒருபே ராணவம் ஒழுங்கறக் களைந்தார்க்கு
இருவினைப் பயன் இன்று என்னநன்கு ஓர்ந்தேன்,
ஓரை நூ லினர்பால் உண்மைநன் குணர் ஈர்
மூன்று காலத்து ஈர் முதல்வன் ஒருவன் என்று
ஒருமையொ டுரைத்திட்டு உளபொழு திரண்டும்
மூவா நான்மறை மூங்கிலை யினர்தம்
இருபதம் போற்றி யாரும் இகழா
ஒருபிர ணவத்தால் ஒன் றிரண் டற்று
மூன்னிலை யின்றி மொழியும் நாற் கதியில்
ஐயம் தீருமெய் அவிர்தரு நாலாம்


முத்தியொடு எல்லாம் முடிக்கத் தக்க
சித்தி யென்னத் திகழ் பயன் இரண்டும்
ஒன்றவேட் டுள்ளேன் உதவுவது உணரின்
ஒருதனிச் சுடரோ ? ஊன்றி ஊன்ரு
இருபதத் தானோ ? ஏந்திழை வடிவம்
மூன்று கொள் அருளோ? முரண்மலி நாற்றோள்
முகத்தைம் படையணி முதுகெடு மாலோ ?
ஆறணி சடிலம் ஐந்துகை நால்வாய்
மும்மதம் இருதாள் மூக்குறு பனைக்கை
ஒன்ருல் ஒருத்தியை உன்னு இருவர்
முக்கணன் மாட்டு முன்விடும் பெருஞ்சீர்
தொக்கவான் களிறோ ? தொடுகடல் முழவோற்கு
அஞ்சா உரனும் அறுமுக மலரும்
எழுதா வாறே இலங்குபே ரழகும்
ஐவணம் பவளம் அழல்வணம் செக்கர்
என்னும் நான் காதிய ஏங்கும் நிறமும்
மூவிரு குமுத முகிழ்மலர் வாயும்
ஒருபர ணருகில் ஒருநாள் இருகை
முக்காற் கூப்பி மொய்யினுல் எய்யும்
ஐங்கணைக் கொடுந்தீ ஆறிய புகழும்
எழுவகை நிலைமையும் எண்வகை வண்ணமும்
எழை உயிர்கட்கு இரங்கும் உணர்வுடன்
முன்னுநர்க் கருளும் மொய்ம்பும் உள்ளானோ?
ஆறலைத் தொழுகும் அஞ்சன வேடரொடு
நான்முந் நெறியுடை நரரும் நானிலத்தில்
கொலைபுலை யெனும்இரு கொள்கையும் நீங்கல்
குறித்திவண் இயற்றொரு குருபரன் ருன்என
நண்ணுகின் றேன்அவன் நவில்வன பிறவும்
யானே யாம் என்று இசைத்துளன், இனிஅவன்
செயநினைத் துள்ளன தெரிந்திலன் அன்றே !





சண்முகன் எண்கூற்றிருக்கை

[illegible]

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 7 6 5 4 3 2 1




சிவபெருமான் ஒன்பதுகூற்றிருக்கை


பராசக்தி எழுகூற்றிருக்கை

பாடல் பொருள் விளக்கம்

ஒரு - மும்மலங்களில் ஒன்ருன, பேராணவம் - பெரிய ஆணவத்தை, ஒருங்கு அற - முற்றிலும் இல்லாமல், களைந்தார்க்கு- நீக்கப் பெற்ற தவசிகளுக்கு, இருவினைப் பயன்- நல்வினை தீவினை என்ற இரண்டும், இன்று என்ன - இல்லை என்பதாக, நன்கு ஓர்ந்தேன் - தீர்க்கமாக உணர்ந்தேன்;

ஓரை நூலினர் பால் - கால இயல்பையறிந்த சோதிட நூலாரிடம் (அவற்றின்) உண்மை நன்கு உணர் - உள்ள நிலையில் உள்ளபடி நன்கு உணர்ந்தறிந்து, ஈர்மூன்று காலத்து - ஆறு பொழுதையும், ஈர் - வேறுபாடாகக் கருதாத ஒப்பற்ற நிலையைத் தருகின்ற, முதல்வன் ஒருவன் - தலைவன் ஒருவனேயாம், என்று - என்பதாக, ஒருமையோடு உரைத்திட்டு - மன ஒருமைப்பாட்டுடன் சொல்லி, உள பொழுது இரண்டும் - உண்டான வேளை பகல் இரவு என்ற இரண்டிலும், மூவா - கேடற்ற, நான்மறை - நான்கு வேதங்களிற் கூறப்பட்ட, முந்நிலையினர் தம் - சகல, கேவல, சுத்தமென்ற மூவித நிட்டையினரது, இருபதம் போற்றி - இரண்டு திருவடிகளையும் துதித்து, யாரும் இகழா – எவராலும் தூற்றப்படாத, ஒரு பிரணவத்தால் - ஒப்பற்ற ஓரெழுத்தின் அநுபவம் பெற்று, ஒன்று இரண்டு அற்று - தான் வேறு தலைவன் வேறு என்ற இரண்டாகவும் இருபாலின்றித் தானே பரமாகவும் பரமே தானுகவும் உள்ள ஒன்ருகவும் உள்ள நிலைமாறி, முன்னிலை இன்றி - முன்னே காண்பதென ஒன்றின்றி, எல்லாம் ஒன்றேயாய் உள்ள நிலைபெற்று (காண்பான், காட்சி, காணப்படு பொருள் என்றற்று ஒன்றேயான பேரநுபவம்), மொழியும் நாற்கதியில் - சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியமென்று கூறப்பட்ட நால்விதப் பேறுகளில், ஐயம் தீரும் - மீண்டும் பிறவிக்கு வராது என்று சந்தேகமறவுள்ள, மெய் அவிர் தரும் - உண்மை விளக்கப் பெற்ற, நாலாம் முத்தியொடு - சாயுச்சியமென்ற மேலான வீடுபேற்றுடன், எல்லாம் முடிக்கத்தக்க - உலக நன்மைக்கு வேண்டிய அனைத்தை

யும் செய்து —முடிக்கத்தக்க, சித்தி என்ன - திருவருட் சத்தி எனப்பட்ட, திகழ்பயன் இரண்டும் - இருவிதப் பேற்றையும்,. ஒன்ற - பொருந்தப்பெற வேண்டுமென்று, வேட்டுள்ளேன் - விரும்பித்தவம் புரிகின்றேன், உதவுவது உணரின் - அப்படி நான் பெறுதற்கு உதவும் கடவுள் யார் என்று அறியப் புகுந்தால்,

ஒரு தனிச் சுடரோ, சமானமற்ற சுடரானசூரிய மூர்த்தியோ; ஊன்றி - ஒரு திருவடியை ஊன்றியும், ஊன்ரு - ஒரு திருவடியைத் தூக்கியும் காண நடிக்கின்ற, இருபதத்தானோ - சிவபெருமானோ? ஏந்திழை வடிவம் - பெண்மைத் திருவுருவம், மூன்றுகொள் அருளோ - பாலை புவனை, திரிபுரை என்ருே (கலைமகள் மலைமகள் அலைமகள் என்ற) மூவிதமான திருவருட் சக்தியோ? முரண்மலி - வலிமைமிக்க, நாற்ருேள் முகத்து - நான்கு புயத்தின்கண், ஐம்படையணி - சங்கு, சக்கரம், வில், வாள், கதை என்றிவற்றைத் தரித்த, முது நெடுமாலோ - தொன்மையான திருமாலோ? ஆறணி சடிலம் - கங்கையை அணிந்த சடை, ஐந்து கை - ஐந்துகரம், நால்வாய் - தொங்குகின்ற துதிக்கை, மும்மதம் - ஞானம் விநோதம் அருள் என்ற மூவித மதம், இருதாள் - இரண்டு திருவடிகள் (ஆகியவற்றுடன்), மூக்குறு பனைக்கை ஒன்ருல்- மூக்காகிப் பனைமரம் போல் பருத்துள்ள துதிக்கை ஒன்ருல், ஒருத்தியை - ஒப்பற்ற ஔவையை, உன்னு - சற்றும் நினையாமல், இருவர் - கயிலை சென்ற சுந்தரர், சேரமான் என்ற இருவரும், முக்கணன் மாட்டு - சிவபெருமான் விளங்கும் கயிலைமலையில், முன் விடு - அவ்விருக்கும் முன்பே தூக்கிவிடுத்த, பெருஞ்சீர் - பெரிய சிறப்பு, தொக்க - சேரப் பெற்ற, வான்களிருே - கணேசப் பெருமானோ? தொடுகடல் - பெரிய கடலினை, முடிவோற்கு - முரசமாகவுடைய மன்மதனுக்கு , அஞ்சா உரனும் - அச்சமுருத அருளாண்மையும், அறுமுகமலரும்- ஆறுதிருமுகத் தாமரையும், எழுதாவாறே இலங்கு பேரழகும் - தூரிகை கொண்டு எழுத வொண்ணு அழகும், ஐவணம் - மருத்தோன்றி, பவளம் - பவளம், அழல்வணம் -

நெருப்பு நிறம், செக்கர் - மாலைக் காலச் சூரியன், என்னும் நான்கு ஆதிய ஏங்கும் நிறமும் - என்னும் நான்கு செந் நிறமும் நாணும்படியான செந்நிறத் திருமேனியும், மூவிரு - ஆறுயுள்ள, குமுத மலர் முகிழ்வாயும் - செவ்வாம்பல் மலர் போன்ற திருவாயும், ஒரு பரண் அருகில் - பரண் ஒன்றின் பக்கமாகப் போய், ஒருநாள் - ஒருநாள், இருகை முக்காற் கூப்பி - இரண்டு கைகளையும் மூனறு முறை குவித்து வணங்கி யும் (வள்ளி நாயகியிடம் மையலுற்ற போது) மொய்யினுல் எய்யும் - வண்டுகளால் அமையப் பெற்ற நாணிமூலம் எய்யப்பெற்ற, ஐங்கணை - ஐந்து மலரம்புகளின், கொடுந்தீ- காமத் தீயானது, ஆறிய புகழும் - அணையப் பெற்ற சிறப் பும், எழுவகை நிலைமையும் - சண்மதமும் சமயாதீதமுமான எழுவித நிலையுடன், எண்வகை வண்ணமும் - எட்டு வித மான சந்தத்தமிழும், ஏழை உயிர்கட்கு—எளிய உயிர் களுக்கு, இரங்கும் உணர்வுடன் - இரக்கம் கொள்ளத்தக்க உணர்வுடன், முன்னுநர்க்கு அருளும் - தியானிப்பவர் களுக்குத் திருவருள் புரிகின்ற, மொய்ம்பும் - கருணையும், உள்ளானே - உடைய முருகப் பெருமானே? ஆறலைத்து ஒழுகும் - வழிப்பறி செய்து வாழ்கின்ற, அஞ்சன வேட ரொடு - கருப்பு நிறமுடைய வேடர் இனத்தோடு, நான் முந்நெறியுடை நரரும் - அகம்புறம் என்ற பன்னிரு சமய மக்களும், நானிலத்தில் - இவ்வுலகில், கொலை புலை எனும்- கொல்லல் ஊன் உண்ணல் என்ற, இரு கொள்கையும் நீங்கள் குறித்து - இருதீயசெயல்களும் அறவே தொலை யும்படி கருதி, இவண் இயற்று ஒரு குருபரன் தான் என - இவ்வாறு தவம் புரிகின்றகுருநாதனே உதவுவான் என, நண்ணுகின்றேன் - விரும்பி வாழ்கின்றேன்;

அவன் - அம்முருகப்பெருமான், நவில்வன - மேலே கூறிய ஆறு சமயக் கடவுளரே யன்றி, பிறவும் - ஏனைய சமயக் கடவுளராயும், யானே யாம் என்று - தானொருவனே ஆவேன் என்பதாக, இசைத்துளன் - என்னிடம் கூறி யுள்ளான். (ஆனல்) இனி - இனிமேல், அவன் - அப் பெருமான், செய நினைத்துள்ளன - செய்வதற்கு எண்ணி யுள்ளனவற்றை, தெரிந்திலன் - யான் அறிந்தேனில்லை, எ - று. அன்றே - அசை.

உ

சிவமயம்

சிவபெருமான் ஒன்பதுகூற்றிருக்கை

காப்பு – வெண்பா :

கழுவேற்றிச் சாரணர்தம் கட்டறுத்த வாய்சொல்
எழுகூற்றிருக்கைபுனை யீசன்—தொழுவேனுள்
உன்னுகின்ற வாழ்வளிப்பான் ஒன்பது கூற்றிருக்கை
பன்னுகின்றென் கேட்கும் படி.

ஒன்பது கூற்றிருக்கை அமைப்பு :

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 5 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 9 8 7 6 5 4 3 2 1

ஒன்பதுகூற்றிருக்கை :

ஒருமகள் ஒருபால் இருக்க வைத்தனை,
ஒருமகம் தரும்ஓர் இருகோட்டு யானை
மும்மதம் சிதைய ஈர்ந்(து) அதட்போர்வை ஒன்று
ஒன்ற நின்றனை, இருவர்முக் குணத்தால்

நான்மேல் மேலென நவின்றமுப் பொழுதினும்
அடிமுடியெனும் இரண்(டு) அறியத் தேடியும்
காணு ஒருவரை யாகிக் கவின்றனே,
ஓரோட்டு இரவல னுயும் முத்தலைவேல்
மழுமுத லாவன நாற்றேட் கணிந்தனே,
ஐம்முகத்(து) அயனை நான்முகன் ஆக்கினே,
முந்நீர் விடம் அயின்று இருநிலத் துள்ளோர்
வானோர் எனும் இரு வகையினர்ப் புரந்தனே
மூவகை முரசமும் நாற்பெரு வாயிலொடு
ஐங்கணை வேள்கொடி அமைதரும் வழுதி
ஆறருகு அடிப்ப அஞ்சினர் போன்று
மறைந்தும் அவ்வடிநால் வகை உயிர்க்கு ஊட்டினே,
முத்தமிழ் விரகற்கு இருபொற் றுளமும்
ஒருமணிப் பந்தரும் ஒரு திருச் சின்னமும்
உதவி ஆண்டனே; இரு மூன்று கண்ணுல்
அஞ்சனமயிலூர் அறுமுகற் பயந்தனே,
ஏழ்பவம் கடக்கும் ஆறெனை மறை சொல்
ஐம்பொறி களினுல் முப்பயன் வழங்கி
இரண்டற ஒன்ருக் கலக்கும் மாண்பினே,
ஓரார் இருவினே மூவாது ஓம்பியும்
நால்வருக்கு ஐவினே அறஎழுந் தருளினே,
எண் ஏழ் தேயமும் மாறின்றி அடக்கும்
ஐவேல் ஏந்தி அணி நான்மாடக்
கூடல் ஆள்வாள் மும்முலைக் கூட்டத்து
இரண்டுற மற்றென்று இரியப் பார்த்தனே,
ஒருபா வெளியாய் இருதிரு உருவாய்
மூவித உயிர்க்கும் நாற்கதி அளிப்பான்
ஐந்தொழில் நடவினே, ஆருதாரம் என்று
ஏழையர்க் கவிர்ந்திட்டு எட்டொரு மூர்த்தியும்
ஒன்பது பேதமும் ஆய்ச் சிலர்க் கொளிர்ந்தனே,

எண் தோளினன் முன் எழத்தாள் தூக்கினை,
ஆறமர் சடையுடன் ஐவாய் அரவும்
நாலக்காட்டினை, நாட்டம் மூன்றும்
முகந்தொறும் கொண்டனை, முரண் இருள் நிலையோர்
இகழ் வொருங் கயிலும் எளிய னேற்கும்
சித்தி யாவும் தெரிதர அமைத்து
முத்தியிற் சேர்க்க முன்னுதி இன்னே !

பாடல் பொருள் விளக்கம்

ஒருமகள் ஒருபால் - பார்வதி தேவியைத் திருமேனியின் ஒரு பாதியில், இருக்க வைத்தனை - விளங்கும்படி வைத்துக் கொண்டாய்; ஓர் மகம் தரும் - தாருகாவனத்து முனிவர் இயற்றிய ஆபிசார வேள்வியில் வந்த, ஓர் இருகோட்டு யானை - ஒப்பற்ற இரண்டு கொம்பினையுடைய யானையின், மும்மதம் சிதைய - கன்னம் கபோலம் கோசம் என்ற இடத்துத் தோன்றுகின்ற மும்மதமும் அழியும்படி, ஈர்ந்து - கொன்று உரித்த, அதட் போர்வை ஒன்று - தோற் போர்வை ஒன்றை, ஒன்ற - பொருந்தும்படி யணிந்து நின்றனை - காட்சியளித்தாய்;

இருவர்-பிரமனும் திருமாலும், முக்குணத்தால்-தாமதம், ராசதம், சத்துவம் என்ற முக்குண வசப்பட்டு, நான் மேல் மேல்என - நானே பெரியவன் என்று ஒவ்வொருவரும் நவின்ற முப்பொழுதினும் - கூறிடும் மூன்று வேளையும், அடி முடி எனும் இரண்டு - திருவடியும் திருமுடியும் என்ற இரண்டினையும், அறியத் தேடியும் - காணத்தேடி முயன்றும், காணு - காணமுடியாது விளங்கி, ஒருவரை ஆகி - ஒப்பற்ற நெருப்பு மலையாகி, கவின்றனை - காட்சியளித்தாய்;

ஓர் ஓட்டு, ஒப்பற்ற பிரப கபாலத்தைக் கொண்டு, இரவலனும் - பிட்சாடனராயும், முத்தலை - மூன்று சிகர முடைய, வேல் - சூலப்படை, மழு - மழுப்படை முதலாவன -முதலியவற்றைக் கொண்டு, நாற்ருேட்கு

அணிந்தனை - நான்கு தோள்களில் பூண்டாய்; ஐம்முகத்து அயனை - ஐந்து முகத்துடனிருந்த பிரமனை (ஆணவ முற்றபோது ஒன்றைக் களைந்து) நான்முகன் - நான்கு முகமுடையவனாக, ஆக்கினை - அடக்கி ஆண்டாய்; முந்நீர் - மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர் என்ற மூன்றினாலான கடலிற்றோன்றிய, விடம் அயின்று - கொடியவிடத்தை (கருணையால்) உண்டு, இருநிலத்துள்ளோர் - விரிந்த இப்பூவுலகத்தோரும் வானோர் - தேவர்களும், எனும் இருவகையினர்ப் புரந்தனை - என்ற இரண்டு உலகத்தவரும் வாழும்படிக் காத்தருளினாய்;

மூவகை முரசமும் - மணம், கொடை, போர் என்ற மூவகையில் ஒலிக்கின்ற பறையும், நாற்பெருவாயிலொடு - நான்கு திசைகளிலும் உள்ள வாயில்களுடன், ஐங் கணைவேள் - ஐந்து மலர்கணைகளையுடைய மன்மதனது, கொடி - கொடியிலுள்ள மீனை, அமைதரும் - பொருந்தப் பெற்ற, வழுதி – பாண்டியன், ஆறு அருகு அடிப்ப - வைகைக் கரையினருகே பிரம்பால் அடித்தபோது; அஞ்சினர் போன்று - பயந்தவரைப் போல, மறைந்தும் - தன் இயல்பை அறியாவாறு மறைந்திருந்தும் கூட, அவ்வடி - அந்த அடியானது, நால்வகை உயிர்க்கு - முட்டை, கரு, வியர்வை, வித்து என்ற நால்வகையிற் றோன்றும் உயிர்கள் பெறுமாறு, ஊட்டினை - பரத்துவ இயல்பினை அறிவித்தாய்;

முத்தமிழ் விரகற்கு - முத்தமிழ் விரகனாகிய திருஞான சம்பந்தருக்கு, இரு பொன் தாளமும் - பொற்றாளம் இரண்டும், ஒரு மணிப்பந்தரும் - முத்துப் பந்தல் ஒன்றும், ஒரு திருச்சின்னமும் - திருச்சின்னம் ஒன்றும், உதவி ஆண்டவனை - கொடுத்து அருளினாய்; இரு மூன்று கண்ணால் - பெரிய நெற்றிக்கண்ணிலிருந்து, அஞ்சன - மைபோன்றுள்ள, மயில் ஊர் அறுமுகன் பயந்தனை - மயிலைச் செலுத்தும் ஆறுமுகப் பெருமானைத் தந்தருளினாய்;

ஏழ்பவம் கடக்கும் - ஏழு பிறவியை அறச் செய்கின்ற, ஆறு என - வழி என்று, மறைசொல் - வேதம் கூறும், ஐம்பொறிகளினுல் - ஐம்புலன் துணைகொண்டு, முப்பயன் வழங்கி - அறம் பொருள் இன்பம் என்ற மூன்றையும் அருளி, (பின்பு) இரண்டற - தான் வேறு தலைவன் வேறு என்ற இரு பேதம் அறும்படியாக, ஒன்ருக்கலக்கும் - உன்னுடன் பேதமின்றி ஐக்கியமடையச் செய்யும், மாண்பினை - பெரிய சிறப்பினை உடையாய்;

ஓரார் - உமது பெருமையை அறியாதவருக்கு, இருவினை - நல்வினை தீவினைகளை, மூவாது - விலகாதபடி, ஓம்பியும் - வளர்த்தும், நால்வருக்கு - சனகாதியர் நால்வருக்கும், ஐவினை - மனம் ஒடுக்கம் பெருத ஐயப்பாட்டினை அற - நீக்கும் பொருட்டு, எழுந்தருளினை - தென்முகக் கடவுளாகிய (தெட்சிணுமூர்த்தியாகி) எழுந்தருளினுய்;

எண் ஏழ் தேயமும் - ஐம்பத்தாறு தேச மக்களும், மாறின்றி அடக்கும் - மாறுபடாதவாறு ஆட்சிபுரியும் பொருட்டு, ஐவேல் ஏந்தி - அழகிய வேலைக் கொண்டு, அணி நான் மாடக்கூடல் ஆள்வாள் - அழகு மிகுந்த மதுரையம்பதியினை அரசு புரிந்த தடாதகைப் பிராட்டியாராம் மீனும்பிகையின், மும்முலைக்கூட்டத்து - மூன்று தனங்களில், இரண்டு உற - இரண்டு தனம் நிலைபெற, மற்று ஒன்று இரியப் பார்த்தனை - மற்ருெரு தனம் மறையும்படித் திருக்கண் நோக்கருளினுய்;

ஒரு பரவெளியாய் - அளவிலடங்காத பரவெளியாயும், இருதிரு உருவாய் - உமையுடன் விளங்கும் திருவடிவும் கொண்டும், மூவித உயிர்கட்கும் ஆண் பெண் அலி என்ற மூவகைப்பட்ட உயிர்கட்கும், நாற்கதி அளிப்பான் - சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியமென்ற நான்குவகைப் பட்ட பதவியைத் தரும் பொருட்டு, ஐந்தொழில் நடவினை - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற பஞ்சகிருத்திய நடனம் ஆடினுய்;

ஆறு ஆதாரம் என்று - மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு நிலேகளே உடையவஞக, ஏழையர்க்கு அவிர்ந்திட்டு - உபாசனேயில் வலிமை பெருதவர்கட்கு விளங்கி, எட்டொரு மூர்த்தியும் - மண், நீர், நெருப்பு, காற்று, வெளி, சந்திரன், சூரியன், உயிர் என்ற எட்டு வடிவில் விளங்கியும், ஒன்பது பேதமுமாய் - ஐம்பெரும் பூதங்களுடன் சத்தி சிவம் விந்து நாதம் என்ற ஒ ன் ப து பேதங்களாயும், சிலர்க்கு ஒளிர்ந்தனே - அறிஞர் சிலர் அறியுமாறு திகழ்ந்தாய்; எண் தோளினன் - பிரமதேவன், முன் எழ - முன்பு உணரும்படி (நடமிடும்போது தாளம் போடும் பணியில் எழுமாறு), தாள் தூக்கினே - திருவடி ஒன்றைத் தூக்கி நடித்தாய்; ஆறு அமர் சடையுடன் - கங்கைநதி தங்கிய சடையுடன், ஐவாய் அரவும் நால - ஐந்தலே நாகமும் தொங்கி அசையும்படி, காட்டினே - காட்சியருளினுய்; நாட்டம் மூன்றும் - சூரியன் சந்திரன் அக்கினி என்ற கண்கள் மூன்றினேயும், முகந் தொறும் கொண்டனே - ஐந்து திரு முகங்களிலும் அமையப் பெற்ருய்;

முரண் இருள் நிலேயோர் - மாறுபட்ட அஞ்ஞானிகள், இகழ்வு ஒருங்கு அயிலும் - நிந்தனேயாவும் பெற்றுள்ள, எளியனேற்கும் - சிறியேனுக்கும், சித்தியாவும் தெரிதர அமைத்து - அட்டமா சித்திகளேயும் உலகறிய உதவியருளி, முத்தியில் சேர்க்க - சிறந்த வீடுபோற்றினில் சேர்த்திட இன்னே முன்னுதி - இப்பொழுதே திருவுளம் பற்ற வேண்டும். எ-று,

---

அப்பனே! என் குருவே! ஐந்து முகத்தானே !
கைப்பரசும் மானுமுடைக் காரணனே—துப்பனேய
மேனியனே! வெற்பாய வில்லானே ! நின்னடிக்கீழ்
ஞானியலு மாறு நவில்.

உ

அம்பிகை துணை

பராசக்தி எழுகூற்றிருக்கை

காப்பு - வெண்பா

தேவா திபர் முதலாச் சிற்றெறும்பீ றும் எவையும்
ஈவாட்(கு) எழுகூற் றிருக்கை சொல்லிப் - பாவாணர்
ஆனந்தம் எய்த அளவிலருள் ஆடல்பயின்(று)
ஈனம் தவிர்ந்திருப்பேன் யான்.

எழுகூற்றிருக்கை – அமைப்பு :

```
                  1
               1  2  1
            1  2  3  2  1
         1  2  3  4  3  2  1
      1  2  3  4  5  4  3  2  1
   1  2  3  4  5  6  5  4  3  2  1
1  2  3  4  5  6  7  6  5  4  3  2  1
```

எழுகூற்றிருக்கை :

ஒரு பெருந் தாயாய் உணர்ந்தோர் கூறும்
இருவகை உயிர்க்கும் இணையில் ஓர் துணையாய்
அருள்வடி(வு) ஒன்றாய் அபின்னை பின்னை
எனும் இரு பாற்றாய் இச்சை கிரியை
ஞானம் என்ன நவில்உரு மூன்றாய்
இரண்டென ஒன்றென எண்ணுவோர்கட்(கு)
இருமையிற் றோன்றும் யாவையும் ஆகி
மும்முறை யினராய் நானிலத் தவிர்ந்து
வாணி முதலா மூவர் ஆகி

இருவரொடு ஒருவர்க் கின்பம் நல்கி
ஒருமதன் இருபதம் வணங்கி முப்பொழுதும்
இறைஞ்சலி ஞல் அவற்(கு) ஐங்கணே நல்கி
நான்மறை யகத்து மூவிரு சமயமும்
ஒன்றெனத் தேறும் ஒருசங்கர னுக்கு
இரண்டு பேறும் இனிதருள் புரிந்து
மும் நால் நெறியும் முறைமையில் வளர்த்திட்டு
ஐந்துகைக் களிற்றை அறுமுகன் றனேத்தந்து
அஞ்சா நாற்படை முந்நவை அரக்கர்
இரத மங்கையர் ஓரிக்குலம் ஒத்து
ஒருங்கழப் புரிவான் இராப்பகல் முயல்வார்
மூன்றவத் தையினும் நால்வகை யிலக்கணத்து
ஐவேல் விழியார் ஆகக்கண் டுளம்
ஆறத் துலங்கி எழுவகைப் பருவமும்
தானே காட்டித் தனேத்தொழும் புலவற்கு
ஆறு மாதம் அடிசில் இட்(டு) அவன்
பின்னர் அஞ்சொற் பிடியென நடந்து
நான்கரு தியவா நடவமுன் னியதும்
இருவிதத் துணர்த்தும் எழிற்பரா சத்தி,
பெருமைநன் குணர்ந்த பெரியோர்க் கன்றித்
திருவருட் பெருக்கும் சிறப்பும் சீர்சால்
அருமை சேர் வீடும் அடைவரி தாமே.

பாடல் - பொருள் விளக்கம் :

ஒரு பெரும் தாயாய் - எல்லா உயிரினங்களேயும் தோற்றுவிக்கக்கூடிய பெண்மையில் ஒன்றேயான பெரிய தாயாய் விளங்கி, உணர்ந்தோர் கூறும் - அறிஞர்களாற் கூறப்பெற்ற, இருவகை உயிர்க்கும் - நிலேயுயிர் இயங்குயிர் (அசரம், சரம்) என்ற உயிர்கட்கும், இணேயில் ஓர் துணேயாய் - ஒப்பற்ற பேணிக்காக்கும் ஒரு துணேயாகி, அருள்வடிவு ஒன்ருய் - கருணேயே திருவுருவுடையவளாகி பின்னே அபின்னே எனும் - சிவத்துடன் வேறுபட்ட வளாயும், ஒன்றியுள்ளவளாயும் இருப்பவள் என்கின்ற,

இருபாற்ருய் - இருவகையாயும், இச்சை கிரியை ஞானம் என்ன - இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி என்பதாக, நவில் உருமூன்ருய் - கூறப்படுகின்ற மூன்று திருவுருவுடையவளாகியும், இரண்டெனு - சத்தி சிவம் வேறு வேறென்றும், ஒன்று என - ஒன்றே என்றும், எண்ணுவோர்கட்கு - கருதுவோர்களுக்கு, இருமையில் தோன்றும் யாவையும் ஆகி - இம்மை மறுமை என்ற இரண்டிலும் காணக்கூடிய எல்லாப் பொருளுமாகியும், மும்முறையினராய் - தாய், மகள், துணைவி என்ற மூன்று முறையில், நானிலத்து அவிர்ந்து - குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற நான்குவகை நிலங்களிலும் விளங்கியும்,

வாணிமுதலா மூவர் ஆகி - கலைமகள், அலைமகள், மலைமகள் என்ற மூன்று வடிவிலும் காட்சி தந்து, இருவரொடு - கணபதி முருகன் என்பவர்கட்குத் தாய் வடிவிலும், ஒருவர்க்கு - சிவபிரானுக்கு மனைவி என்ற முறையிலும், இன்பம் நல்கி - இன்பம் உதவுவளாயும், ஒரு மதன் இருபதம் வணங்கி - மன்மதன் உனது இரு திருவடிகளையும் வணங்கி, முப்பொழுதும் இறைஞ்சலினுல் - மூன்று வேளையும் துதி செய்தலால், அவற்கு - அந்த மன்மதனுக்கு, ஐங்கணை நல்கி - ஐந்து மலர்க்கணைகளை அளித்தும், நான்மறையகத்து - இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்ற நான்கு வேதத்துள் கூறப்பெற்ற, மூவிரு சமயமும் - சௌரம் முதலிய ஆறுசமயங்களும், (வெவ்வேருகக் காணப் படினும்), ஒன்றெனத் தேறும் - ஒன்றே என்பதாக அனுபவமாயறிந்த, ஒரு சங்கரனுக்கு - ஒப்பற்ற சங்கராச்சாரியருக்கு, இரண்டு பேறும் - கல்வி ஞானம், அனுபவ ஞானம் என்ற இரண்டையும், இனிதருள் புரிந்து - கருணையால் உதவியும், முந் நால் நெறியும் - அகச்சமயம் ஆறும், புறச்சமயம் ஆறும் - ஆகப் பன்னிரண்டு சமயங்களையும், முறைமையில் வளர்த்திட்டு - அந்தந்த நிலைக்கேற்பப் பேணியும், ஐந்துகைக் களிற்றை - கணபதியையும், அறுமுகன் தனைத்தந்து - முருகப்பெருமானையும் மக்களாகப்

பெற்று, அஞ்சா நாற்படை - போரில் அஞ்சாத நால்வகை, படை கொண்ட, முந்நவை அரக்கர்-கொடிய அசுரர்களது இரதமங்கையர் - மனைவிமார்கள், ஓரிக்குலம் ஒத்து - நரிக் கூட்டம்போல, ஒருங்கு அழப்புரிவான் - யாவரும் கூடி அழுமாறு செய்யும்படி, இராப்பகல் முயல்வார் - இரண்டு வேளையும் தவம் இயற்றும் உலகநலம் பேணுவோர், மூன்று அவத்தையினும் - சகலம், கேவலம், சுத்தம் என்ற மூன்று நிலைகளில் (சாக்கிர - சொப்பன - சுழுத்தி நிலைகளில்), நால் வகை இலக்கணத்து - நான்கு வகைப்பட்ட அங்க இலக்கண முடைய மகளிர் இனத்தை, ஐவேல் விழியாராகக் கண்டு - அழகிய வேல் போன்று கூர்மையான அம்பிகையின் இனமாக உணர்ந்து, உளம் ஆறத் துலங்கி - மனமானது அன்புகொள்ள விளங்கியும், எழுவகைப் பருவமும் - பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம் பெண் என்றுள்ள மகளிரது பருவம் ஏழும், தானே காட்டி - தனதாகவே காட்டியும், தனைத்தொழும் புலவற்கு - தன்னைப் பாடித்துதித்த கவிராச பண்டிதருக்கு, ஆறுமாதம் அடிசில் இட்டு - அவர் காசிக்குப் போய்த் திரும்புமளவும் ஆறுமாத காலம் மகளுருக்கொண்டு சோறு சமைத்து உண்பித்துப் அவன் பின்னர் அம்சொல் பிடி என நடந்து - அவர் பின்னே அழகிய சொற்களையுடைய பெண்யானை போல நடந்தும், நான் கருதியவா - அடியேன் எண்ணியுள்ளவாறு, நடவ முன்னியதும் - செயல் புரியும்படிதான் செய்ய இருப்பதான உண்மையை, இருவிதத்து உணர்த்தும் - நனவு கனவு என்ப வற்றில் நான் அறியுமாறு விளக்கியவளான, எழில் பராசக்தி - அருள் வடிவான உமையவளின், பெருமை நன்கு உணர்ந்த - திருவருட் சிறப்பை அனுபவமாயறிந் துள்ள, பெரியோர்க்கு அன்றி - அருளாளருக்கு அல்லாமல், திருவருட் பெருக்கும் - அவளது கருணைப் பெருக்கமும், சிறப்பும் - உலகம் புகழும் பெருமையும், சீர்சால் - உயர்வு மிக்க, அருமை சேர் - பெறற் கருமையான, வீடும் - முத்திப் பேறும், அடைவரிதாம் - பெறுவது மிக அருமையேயாம். (எ-று. ஏ-அசை)

... AND ...
A. No. 15765
LIBRARY, KOVIL COR

ஸ்ரீ :

ஸ்ரீமந் நாராயணாய நம :

திருமால் எழுகூற்றிருக்கை

காப்பு - வெண்பா

கூன்வாட்கை மங்கைமன்னன் கூறும்எழு
கூற்றிருக்கை
தேன்வார்த்த பைந்துளவத் திண்டோட்காம் -
யான் வாயாற்
சொல்வதும் ஆம் சொல்லோ நீ சொன்னபடி
சொல்கின்றேன்
நல்வரம்செய் நாராய ணா.

எழுகூற்றிருக்கை : அமைப்பு,

```
               1  2  1
            1  2  3  2  1
         1  2  3  4  3  2  1
      1  2  3  4  5  4  3  2  1
   1  2  3  4  5  6  5  4  3  2  1
1  2  3  4  5  6  7  6  5  4  3  2  1
1  2  3  4  5  6  7  6  5  4  3  2  1
```

எழுகூற்றிருக்கை

ஒருபெரு மாசுணத்து இருநில மடந்தையும்
ஒருமலர்த் தவிசின் ஓர் திரு மகளும்
இருமருங் கமைதர மூன்று காலமும்
இருமையும் உணரும் பொய்த் துயில் ஒன்றினை,


ஒருபேர் இரணியன் மூன்றுல கினுக்கும்
நான்கா ரணன் என நவின்ற நாளில்
முன்னி இருகை கூப்பும் ஓர் இளஞ் சேய்
ஓர்வரும் களிப்பென ஈர்ங்கடல் குளிப்ப
மூவலில் நான்மறை அஞ்சாது ஒலிதர
அவன்மனைத் தூணிடை ஆர்ப்பொடு நகைத்துத்
தோன்றித் தோள்கொடு நாலத் தூக்கி
மூன்றும் பொழுதிடை இருபிளப் பாக்கினை,
ஓரம் ஆர்தரும் ஒருபுன் சபையிடை
இரங்கொலி யொடுமுந் நாற்பெயர் இசைத்திட்டு
அஞ்சலித் தவள் நெஞ்சு ஆறும் வண்ணம்
அஞ்சுவன் னத் துகில்பல அளித்தனை,
நால்வாய் மும்மதத்து இருகோட்டு ஒருகளிறு
ஒருநீர் வாவியில் ஈரமிக்கு அன்று
மூலமென்று அரற்றுமுன் னுல்விட் டெழுந்தனை,
ஐம்முகச் சிவனுக்கு ஆறு தருவான்
ஏழு லோகமும் தாள்கொடு துளைத்தனை,
ஆறலைத் துவக்கும் அஞ்சன மேனி
நாற்கவி நம்பியை முத்தியிற் சேர்த்தனை,
இருமருது அட்டனை, ஒருபேய் கொன்றனை,
ஒருநாள் இரைதரும் முந்நீர்க் கடலில்
தேர்ப்பரி தூண்டினை, தெருளும்நான் முகனை
ஐங்கணைக் காளையொடு அளித்துவப் பாயினை,
ஆறதிற் கிடைத்த அடல்உற வினற்கா
எழுமரம் எய்தனை, இகலுறும் அறுவரும்
வழிபடப் பொருநை மாநதித் தென்பால்
அஞ்சம் துயில்வயல் அணிகிளர் குருகையில்
நாலுலகம் அறிந்த நளிர்புளி நிழற்கீழ்
விதிமறை தெளித்த வியன்றமிழ் ஆயிரம்
மொழிதரு முனிவோன் முண்டகப் புதுப்பூப்

புரையிரு கழலே புணையெனப் பற்றும்
ஒருமை யின்வலியார் உளந்தொறும் அமர்ந்தனை,
என்னை நீயன்று இனிதாண் டருளியது
உன்னைநம் பாரும் உணர்தரப் புரியின்
மாமுகங் கொடுநீ வரும்நாள் வருந்தாது
ஆடற்கு ஏற்கும் அவைசெய் குவனே.

பாடல் – பொருள் விளக்கம் :

ஒரு பெரு மாசுணத்து - பருமனில் ஒப்பற்ற (ஆயிரம் தலைகளையுடைய புலமையிற் சிறந்த) பாம்பான ஆதிசேடன் மீது, இருநில மடந்தையும் - விரிந்த பூமிதேவியும், ஒரு மலர்த்தவிசின் - பூ வகையில் உயர்ந்த தாமரை மலர்ப் பீடத்தில் உள்ள, ஒரு திருமகளும் – இலக்குமி தேவியும், இரு மருங்கு அமைதர - இரு பக்கமும் விளங்கும்படி, மூன்று காலமும் - காலை உச்சி மாலை என்ற மூன்று வேளையும், இருமையும் - நிகழ்காலமும் வருங்காலமும், உணரும் பொய்த்துயில் ஒன்றினை-அறியக் கூடிய யோக நித்திரையில் விளங்குகிறாய்;


ஒரு பேர் இரணியன் - ஆணவத்தில் நிகரற்ற இரணியன், மூன்று உலகினுக்கும் - மண் விண் பாதலம் என்ற மூவுலகினுக்கும், நான் காரணன் என - நானே தலைவன் என்பதாக, நவின்ற நாளில் - கூறி ஆட்சி செய்தபோது, முன்னி - உன்னையே தியானித்து, இருகை கூப்பும் - இரண்டு கைகளையும் குவித்து, ஓர் இளம் சேய் - பாலகனாகிய பிரகலாதாழ்வார், ஓர்வரும் களிப்புஎன – மிக்க மகிழ்வு என்பதான, ஈர்ங்கடல் குளிப்ப - குளிர்ந்த பேரின்பக் கடலில் மூழ்கும்படி, மூவலில் நான்மறை– கெடுதலற்ற நான்கு வேதங்களும், அஞ்சாது ஒலிதர-இரணியனது ஆணைக்கு அடங்காமல் முழங்குமாறு, அவன் மனைத் தூணிடை - இரணியனது அரண்மனைத் தூண் ஒன்றிலிருந்து, ஆர்ப்பொடு நகைத்து - வீரமுழக்கத்துடன் சிரித்தபடி, தோன்றி - நரசிங்க வடிவில் தோன்றி,




திருமால் எழுகூற்றிருக்கை

எழுகூற்றிருக்கை அமைப்பு.

1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1



திருவரங்கத் திருஎழுகூற்றிருக்கை


கண்ணன் உன் திருப்பேர் காசிலதாயின் என்துயர் கண்டே இருப்பாய் ஆதலின்
தந்துறத் தவத்து நலமுழுதருள்வாய் செச்சை ஆங்காங்குத் தெரிது நிவந்த பச்சை மால்வரையே
பார்த்தசாரதியே
வண்ணச்சரபம் ஸ்ரீதண்டபாணி சுவாமிகள்
அருளிச்செய்த
திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி
திருஎழுகூற்றிருக்கை

தோள்கொடுநாலத் தூக்கி-தன் தோள்களால் அவன் உடல் தொங்கும்படி எடுத்து, மூன்றும் பொழுதிடை - மாலை நேரத்தில், இருபிளப்பாக்கினை - இருகூறுகும்படி கொன்றாய்;

ஒரம் ஆர் தரும் - (நடுநிலையற்ற) ஒரு பக்கமான, ஒரு புன் சபையிடை - துரியோதனனது சபையில், இரங்கு ஒலியொடு - அழுகையுடன், முன்னால் பெயர் இசைத் திட்டு - முதலாயுள்ள திருப்பெயரான கோவிந்தா என்று கூவி, அஞ்சலித்தவள் நெஞ்சு ஆறும் வண்ணம் - கைகூப்பிய திரௌபதியின் மனம் அமைதியுறும் படி, அஞ்சு வன்னத் துகில் பல அளித்தனை - ஐந்து நிறமுடைய ஆடைகளை மிகுதியாக நல்கினாய்; நால்வாய் மும்மதத்து - தொங்கும் துதிக்கையுடன் மூன்று மதங்களை யும், இருகோட்டு ஒருகளிறு - இரண்டு கொம்புகளையும் உடைய கஜேந்திரன் என்ற யானை, ஓர்நீர் வாவியில் - ஒரு குளத்தில், ஈரம்மிக்கு அன்று மூலம் என்று அரற்றுமுன் - அன்பு மேலிட்டு 'ஆதிமூலமே' எனக்கதறிய உடனே, ஆல் விட்டு எழுந்தனை - ஆலிலையிற் பள்ளி கொள்வதை விட்டு ஓடிவந்து முதலையைக் கொன்று கஜேந்திரனைக் காத்தாய்;

ஐம்முகச் சிவனுக்கு - உருத்திர மூர்த்திக்கு, ஆறு தருவான் - கங்கையைத் தரும் பொருட்டு, ஏழு லோகமும் - ஏழு உலகங்களும், தாள்கொடு துளைத்தனை - முயற்சி கொண்டு துளைபடச் செய்தாய்;

ஆறலைத்து உவக்கும் - வழிப்பறி செய்து திருமால் கோயில் திருப்பணி செய்து மகிழும், அஞ்சன மேனி - கரிய நிறமுடைய திருமேனி கொண்ட, நாற்கவி நம்பியை - நால்வகைக் கவிப்புலமையும் மிக்க திருமங்கை ஆழ்வாரை, முக்தியில் சேர்த்தனை - வீடுபேறு எய்தச் செய்தருளினாய்;

இருமருது அட்டனை - இரண்டு மருத மரங்களையும் வீழ்த்தியருளினாய்; ஒரு பேய் கொன்றனை - பூதகியான பேயை உயிருண்டாய்; ஒருநாள் இரைதரும் முந்நீர்க்

கடலில் - முன்பொரு காலத்தில் ஆரவராமிகுந்து கடல் போன்ற படைகளைப் பாரதப் போரில் (வெல்லும் பொருட்டு), தேர்ப்பரி தூண்டினை - அருச்சுனனுக்காகத் தேர்ப்பாகனுகிச் செலுத்தினுய்; தெருளும் நான்முகனை - வேதவிற்பனுன பிரமதேவனை, ஐங்கணைக் காளையொடு - மலர்க்கணை ஐந்துடைய மன்மதனுடன், அளித்து உவப் பாயினை - மக்களாகப் பெற்று மகிழ்ந்தாய்;

ஆறதில் கிடைத்த அடல் உறவினற்கா - (சீதையைத் தேடிக் கொண்டு போகும்) வழியில் எய்தப்பெற்ற வலிமை யுடைய சுக்ரீவன் பொருட்டாக, எழுமரம் எய்தனை - ஏழு மராமரத்தையும் துளைத்தாய்; இகலுறும் அறுவரும் - மாறுபட்ட இராவணன், கும்பகர்ணன், இரணியன், இரணி யாக்கன், தந்தவக்த்ரன், சிசுபாலன் என்ற அசுரர்களும், (மாறுபடும் சமயவாதிகள் அறுவரும் எனினும் ஆம்), வழிபட - வணங்கும்படி, பொருநை மாநதித் தென்பால் - தாம்பிரபரணியாற்றின் தெற்கில் அமைந்ததான, அஞ்சம் துயில் வயல் அணிகிளர் குருகையில் - அன்னப்பறவைகள் உறங்கும் வயல்கள் நிறைந்து அழகுமிக்குடைய குருகூரி னிடத்து, நால் உகம் அறிந்த - கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஒன்ற நான்கும் அறிந்தவரும், நளிர் புளி நிழற்கீழ் - புளியமர நீழலில், விதிமறை தெளிந்த - பிரமனது வடமொழி வேதத்தைத் தமிழில் தெளிவுபடக் கூறியருளியதான, வியன்தமிழ் ஆயிரம் மொழிதரு முனிவோன் - தெய்வத்தன்மையுடைய திருவாய் மொழி ஆயிரம் பாசுரங்களைப் பாடியவருமான நம்மாழ்வா ருடைய, முண்டகப் புதுப்பூ - தாமரையின் புதிய மலர் போன்று, புரை இரு கழலே புணை என - மணம் வீசும் இரு திருவடிகளை பற்றுக்கோடு என்று, பற்றும் ஒருமை யின் வலியார் - நம்பிப் போற்றுகின்ற ஒருமைப் பாட்டில் சிறந்த உயர்ந்தோரது, உளந்தொறும் அமர்ந்தனை - மனங்களிலெல்லாம் நீங்காமல் திகழ்கின்ருய்;

என்னை நீ அன்று இனிது ஆண்டருளியது - அடியேனை அன்றொருநாள் தேவரீர் அன்புகூர்ந்து ஏற்றருளியதை, உன்னை நம்பாரும் - உம்மை நம்பாத நாத்தீகரும்கூட, உணர்தரப் புரியின் - உண்மையறியும்படித் திருவருள் செய்வீரானால், மாமுகம் கொடு-குதிரை முகங்கொண்டு ('கல்கி' அவதாரமாக), நீ வரும் நாள் - தேவரீர் எழுந்தருளப் போகும் எதிர் காலத்தில், வருந்தாது ஆடற்கு - உமக்கு அதிகமான வேலையில்லாதபடி அருளாடல் செய்தற்காக, ஏற்கும் அவை செய்குவன் - முன்னேற்பாடாகப் பல தீய செய்கைகளைச் செய்து வைப்பேன் (எ-று), ஏ-அசை.

மாலை மாற்று (கலி விருத்தம்)

நேத ஞரிவி கா துமு லாதகா
மாத தீயபி ஞசரி வாதசீ
சீத வாரிச நாபிய தீதமா
காத லாமுது காவிரி நாதனே

பொருள் : நே - பிரியமுள்ள, தன - திரவியத்துக்கு, அரி - பகையாகிய மிடி, விகாது - சர்வ விக்கினமாயும், முலா - மூலை சம்பந்தமாயும் இருக்கின்றது; தகா - அஃது தக்கதன்று; மாதது - உமது பத்தினியான செல்வத்தை, ஈ - கொடுத்தருள்வீராக; அ பி ஞ - எல்லாவற்றிலும் கலந்தவரே; சரிவா - சரி என்ற ஆபரணத்துடன் மோகினியானவரே; தசீ - தசாவதாரம் செய்தவரே; சீதவாரிச நாபி - குளிர்ந்த தாமரை போன்ற நாபியுடன் கூடியும்; அதீத - அக்கிர பரத்துவம் பெற்றவரே; மா - மகத்தான, காதலா - பிரியத்துக்குரியவரே; முதுகாவிரி - பழமையான காவிரியாற்றில் வசிக்கும், நாதனே - சீரங்கநாதனே

(திருவரங்கத் திருவாயிரத்தில் உள்ளது)

ஸ்ரீ :

ஸ்ரீமந் நாராயணாய நம :

திருவரங்கத் திருஎழுகூற்றிருக்கை

(திருவரங்கத் திருவாயிரத்தில் உள்ளது)

எழுகூற்றிருக்கை—அமைப்பு :

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

எழுகூற்றிருக்கை :

ஓர் ஒரு பொருளாய் இரண்டாய் ஒன்றி
ஒன்றிரண் டின்றி மூ இரு நெறியோர்க்(கு)
ஒகுமைகண்(டு) இருமையின் மூவா நாற்பயன்
முத்தமிழ் இருங்கட லோ(டு) ஒருங் குதவலும்,
ஒன்றுடன் இரண்டும் மூன்றும் நான்கு
கூடிய தொகைப்படு கோலம் கொளலும்
ஐவர் ஒற்றென நாற்றிசை பரவ
மூவரும் தானாய் இருப்பது மறைத்து ஓர்
ஓரன் இரும்சபை மூப்பினர் தம்முகம்
நால ஐந்(து)இல் ஆறி ஏற்றலும்
ஐந்நாற் றோளின் மூன்றுல(கு) எடுத்தோன்

இருகூ ருவிழ ஒருகணை ஏவலும்
ஓர்உருள் இரதனை முக்கணன் நான்முகன்
ஐயர்கோன் முதலினர் அறிய மறைத்தலும்
ஏழ்எரு திணையும் இளைப்பறப் பிணித்திட்டு
ஐம்பால் ஓதி அணங்க ருட்பெறலும்
நாற்கால் மும்மதத்து இருமருப்பு ஒருமா
உய்யக கானத்து ஓடிச் சேறலும்
மாமறை ஒலிசால் மணிமதில் அரங்கக்
கோயில் நாப்பண் கொடும்பற் பேழ்வாய்
ஆயிரம் காட்டும் அரவப் பாயலின்
மீத்துயில் குவியா விழிநெடு மாலே.

பாடல் – பொருள் விளக்கம் :

ஓர் - ஒப்பற்ற, ஒரு பொருளாய் - ஒரே கடவுளாயும், இரண்டாய் - சிவன், திருமால் என்ற வேறுபட்ட இரு தன்மையாயும், ஒன்றி - பொருந்தியிருப்பவனும், ஒன்று இரண்டு இன்றி - முத்தியில் உயிரும் இறையும் ஒன்றென்றும் இரண்டும் வேறு வேறு என்றும் கூறஇயலாதபடி ஒன்றே என்று கூறும்படியுள்ளவனும், மூ இரு நெறி யோர்க்கு - ஆறு சமயத்தோர்களும் வணங்கும்படி, ஒருமை கண்டு - ஒப்புள்ளவனும், இருமையின் - இம்மை யிலும் மறுமையிலும், மூவா - கெடுதலற்ற, நாற்பயன் - அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பயன்களையும், முத்தமிழ் - இயல் இசை நாடகம் என்ற முத்தமிழிலும் புலமையையும், இரும் கடலோடு - விரிவான கடல் போன்ற வடமொழிப் புலமையையும், ஒருங்கு உதவலும் - ஒரு சேர நல்குபவனும், ஒன்றுடன் இரண்டும் மூன்றும் நான்கும் கூடிய தொகைப்படு கோலம் கொளலும் - பத்து அவதாரத் திருவுருக் கொள்பவனும், ஐவர் ஒற்றென - பாண்டவர் தூதன் என்று, நாற்றிசை பரவ - நான்கு திசையில் உள்ள வர்களும் போற்றும்படி, மூவரும் தானாய் இருப்பது மறைத்து - திருமால் பிரமன் உருத்திரன் என்ற மூவரும்

தானே யான தன்மையை மறைத்து, ஓர் ஓரன் - ஒருதலைப் பட்ட கருத்தினனான துரியோதனனது, இரும் சபை - பெரிய சபையின்கண், மூப்பினர் தம்முகம் - வயது முதிர்ந்த பல சான்றோர் முகங்கள், நால - நாணித் தொங்கும்படி, ஐந்து இல் - ஐந்து வீடு தரும்படி, ஆறி - மனம் ஒப்பி, ஏற்றலும் - யாசித்தவனும், ஐந் நால் தோளின் - இருபது தோளுடைய வனாய், மூன்று உலகு எடுத்தோன் - மண் விண் பாதலம் என்ற மூவுலகும் போற்ற இருந்த இராவணன், இரு கூறுவிழ - இருபிளவாகி இறக்கும்படி ஒருகணை ஏவலும் - ஒப்பற்ற அம்பு ஒன்றை ஏவிய வீரனும் (கோதண்ட ராமனும்), ஓர் உருள் இரதனை - ஒற்றைச் சக்கரமுடை தேரினை உடைய சூரியனை, முக்கணன் நான்முகன் ஐயர் கோன் - சிவபிரான், நான்குமுகமுடைய பிரமன், தேவேந் திரன், முதலினர் அறிய - ஆதியோர் காணும்படி, மறைத் தலும் - இருள் சூழுமாறு தன் சக்கரத்தால் மறைத்தவனும், ஏழ் எருதினையும் - ஏழு காளைகளையும், இளைப்பறப் பிணித் திட்டு - இளைப்பு நீங்கும்படித் தன் வலிமையாற்கட்டி ஐம்பால் ஓதி அணங்கு அனாள் - ஐந்து வகையாக முடிக்கும் கூந்தலையுடைய தேவமாது ஒத்த நீளாதேவியை, பெறலும் - கைக் கொண்டவனும், நாற்கால் மும்மதத்து இருமருப்பு ஒருமா - நான்கு கால்கள், மும்மதம், இரு கொம்பு ஆகியவற்றைக் கொண்ட ஒப்பற்ற கஜேந்திரனை, உய்ய - முதலை வாயினின்றும் பிழைக்கும்படி, கானத்து ஓடிச் சேறலும் - காட்டில் விரைந்து சென்று காத்தவனும் யார் எனில்,

மாமறை ஒலிசால் - மாண்பமைந்த வேத ஒலிமிக்கதும், மணிமதில் - இரத்தினங்களாலான சுற்றுச் சுவர்களைக் கொண்ட, அரங்கக்கோயில் - திருவரங்கக் கோயிலின், நாப்பண் - நடுவில், கொடும்பல் பேழ்வாய் ஆயிரம் காட்டும் - கொடிய பற்களையுடைய அகன்ற ஆயிரம் வாயுடைய, அரவப் பாயலின்மீ - ஆதிசேடனான பாம்பணை

யின் மீது, துயில்குவியா விழி - யோக நித்திரை செய்பவனு மான, நெடுமாலே - திருமாலான திருவரங்கப் பெருமானே யாம். எ - று.

குறிப்பு : ஏறுதழுவல் என்பது ஆயர் குலக் காளையர் மணமுடிக்கும் பொருட்டுக் காளைகளைப் பிடித்தல் மரபு. கண்ணன் ஆயர்குலத்தில் வளர்ந்ததால் நடந்த வரலாறு. இன்னும் ஜல்லிக்கட்டு என நிகழும் விளையாட்டு இதன் தொடர்புடையது எனலாம். ஆண் மகனின் வீரத்தை விளக்கும் செயல் என்க.

ஒரு வருக்கப் பா (வெண்டளைக் கலிப்பா)

தீது தத்துத் தொத்தத்தே தித்தித்த தேதேது
தாதுதத்தத் தத்தத் ததி தாதா தாத்தாதா
தூதித்த தாதை துதித்துத் திதத்த தித்தா
தோது தைத்த துத்தத்தத் தாதூத் திதித்தீத்தே

பொருள் : தீது - பாவமான; தத்து - ஆபத்தின்; தொத்தத்தே - சம்பந்தத்தில்; தித்தத்தது - இனிமை யானது; ஏதேது - ஏது ஏது (இல்லையென்றபடி(; தாது - பொன், வெள்ளி முதலியன; தத்த - ததும்பி வழியும்படி; தத்த - பிரதி உபகாரம் விருப்பமின்றிக் கொடுப்பதற்கு; ததி - நல்ல சமயம் (ஆதலால்); தாதா - கொடுந்தருள் வீராக; தூது - உமது தூதுவரான அநுமன்; உதித்த - பிறத்தற் காரண; தாதா - பிதாவான (வாயு பகவானுல்); துதி - புகழப் பெற்ற; துத்தி - படப் பொறியுள்ள; தத்தி - பாம்பாகிய (ஆதி சேடனேடு கூடிய); தா - பள்ளமான காவிரியாற்றிடை சீரங்கத்தில் வசிப்பவரே; தோது - உவமையை; உதைத்த - ஏற்றுக் கொள்ளாமல் தள்ளும்; துத்தத்து - வயிற்றினை உடைய; அத்தா - சர்வ ஆன்ம பிதாவானவரே; தூ - பரிசுத்தமான; திதி - இரட்சிப்புத் தொழிலில்; தீ - புத்தியைச் (செலுத்துகின்ற) தே - தெய்வமான நாராயணனே (என்பது)

(திருவரங்கத் திருவாயிரத்தில் உள்ளது)

ஸ்ரீ :

ஸ்ரீமந் நாராயணாய நம :

திருவல்லிக்கேணி
திரு எழுகூற்றிருக்கை

காப்பு : வெண்பா :

ஏனோர் விதிதொட் டெழுகூற் றிருக்கை சொல்லி
யானோர் பதுகூற் றிருக்கையும் சொற்-றேன்ஓர
என் துணிவார் ஏழ்கூற் றிருக்கையும்சொல்
என்று கண்ணன்
இன்றுரைத்தான் ஈதறிவார் யார் ?

எழுகூற்றிருக்கை - அமைப்பு :

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

எழுகூற்றிருக்கை :

ஒருபெருங் கரத்தால் ஒருபெரு மலையெடுத்தன்(று)
இருமருப்(பு) ஆனினம் ஒருங்கு காத்தனை,
ஒருகா ரணத்தால் இருதாய் மகவாய்

மூவாப் பொதுவர் முல்லையில் இருநகர்
ஒன்றிடை வளர்ந்தனை, ஒருபேய் உயிருண்டு
எஞ்சலில் களியொடு மூன்று பொழுதினும்
நாலத் தூக்கிய உறித்தயிர் கவர்ந்தனை,
மூன்றுல(கு) அடத்தகும் இருமரு தழிப்பான்
ஒருநாற் கட்டுண்(டு) ஒருவா றழுதனை,
இருதிரு வடியால்சகடு கொன்றனை,
முந்நாற் புலவர்தம் ஐவகை நிறத்த
நாற்கவி சூடினை, மூவிரு சமயத்து
ஒன்றும் தேவரும் யான் ஒரு வனேயென
இரங்குபு மூன்றும் மைத்துனர் குணர்த்தினை,
நாற்பயன் விழைவார்க்கு அஞ்சல் நல்கி
ஆறமர் சடையான் ஆதியர் வழுத்த
அல்லிக் கேணிக்கு ஐயென அமர்ந்தனை,
நான்கூ றிடுமுத் தமிழ்க்கவி ஒலியும்
இருகா திடை கொளற்கு ஒருசிறிது வேட்டனை,
ஓரம் ஆர்ந்த இருமையில் கொடியார்
அவையிடை முத்தொத்து அறல் உகுத் தழுதாள்
உவகையி னூற்றன் உயரருள் விளக்கினை.
ஐவர்ஒற் றெனும்பேர் ஆறென ஏற்றனை,
எழுநிகர் பலதோள் வாணற் செற்றனை,
அறுவையிற் பலகொண்டு அணிமரம் ஏறினை,
ஐங்கணைக் கிழவனை மகவாப் பெற்றனை,
நாலொடு மூன்று நன்மகர்த் துணித்த
ஈர்வாள் ஏந்தும் ஒருபெரு மாமனைக்
கடற்படை யுடன்கெடக் காய்ந்தர சாண்டனை,
கண்ணன்என் திருப்பெயர் காசில தாயின்
எந்துயர் கண்டே யிருப்பாய், ஆதலின்
வந்துறத் தணந்து நலமுழ தருள்வாய்,
செச்சையாங் காங்கு தெரிதர நிவந்த
பச்சைமால் வரைநேர் பார்த்தசா ரதியே!

பாடல் – பொருள் விளக்கம் :

ஒரு பெருங் கரத்தால் - ஒப்பற்ற தனது கைச் சுண்டு விரலொன்ருல், ஒரு மலை எடுத்து அன்று - முன்பொரு நாள் கோவர்த்தனகிரியைத் தூக்கி, இருமருப்பு ஆனின்ம் ஒருங்கு காத்தனை - (இந்திரன் ஏவலாற் பெய்த பெருமழை யால் நனையாதபடி) இரண்டு கொம்பினையுடைய பசுக் கூட்டத்தைக் காத்தருளினுய்; ஒரு காரணத்தால் - கம்சனது ஆணைக்கு அஞ்சி, இருதாய் மகவாய் - தேவகியான பெற்ற தாயினை விட்டு, யசோதையான வளர்ப்புத் தாயினது மகனுகி, மூவாப் பொதுவர் - தீமையில்லாத யாதவர்களது, முல்லையில் - காடுகளிடையே சார்ந்த, இருநகர் ஒன்றிடை வளர்ந்தனை - கோகுலம், வடமதுரை என்ற இரண்டனுள் கோகுலத்தில் வளர்ந்தாய்.

ஒருபேய் - பாலூட்டுவாளாக வந்த பூதகியின், உயிருண்டு - பாலுன்பான்போல அவர் உயிரையே கவர்ந்து, எஞ்சலில் களியொடு - குறைவுபடாத மகிழ்வுடன், மூன்று பொழுதினும் - மூன்று வேளையிலும், நாலத்தூக்கிய உறித் தயிர் கவர்ந்தனை - தொங்கும்படித் தூக்கியமைத்த உறியில் வைக்கப் பெற்ற தயிரைத் திருடி உண்டாய்; மூன்று உலகு அடத் தகும் - மூவுலகையும் அழிக்கும் வலிமையுள்ள இருமருது - இரண்டு மருத மரங்களை, அழிப்பான் - அழிக்கும் பொருட்டு, ஓர் உரல் கட்டுண்டு - உரல் ஒன்றிற் கட்டப் பெற்றபோது, ஒருவாறு அழுதனை - அழுதவன் போன்று நடித்தாய்;

இரு திருவடியால் சகடு கொன்றனை - இரண்டு திருப் பாதங்களால் சகடாசுரனை வதைத்தாய்; முந்நாற் புலவர் தம் – பன்னிரண்டு ஆழ்வார்கள் பாடிய, ஐவகை நிறத்த – வெள்ளை, கறுப்பு, பச்சை, சிவப்பு, மஞ்சள் என்ற நிறமுடைய சொற்களாலான (இவற்றில் கறுப்புடன் பச்சையையும், சிவப்புடன் மஞ்சளையும் ஒடுக்கி மூவகையாக மொழிவது மரபு: இவ்விதமான ஐந்து நிறத் தமிழ்க்

கவிகளை), ஐந்துவகைப் பாவகைகளை நாற்கவி சூடினை—ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நால்வகைப் பாடல் களையும் சூடியருளினாய்;

மூஇரு சமயத்து - அறுவகைச் சமயங்களில், ஒன்றும் - பொருந்தப் பெற்ற, தேவர் - கடவுளர் யாவரும், யான் ஒருவனே என - என்னைத்தவிர வேறாக இல்லை என்பதாக, இரங்குபு - கருணையுள்ளத்துடன், மூன்றும் மைத்துனற்கு - அருச்சுனனுக்குக் கீதைமூலமாக, உணர்த்தினை - அறிவுறுத் தினாய்;

நாற்பயன் விழைவார்க்கு - அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பயன்களையும் விழையும் அடியவர்களுக்கு, அஞ்சல் நல்கி - அச்சம் போக்கி, ஆறு அமர் சடையான் ஆதியோர் - கங்கை தங்கும் சடையுடைய சிவபெருமான் முதலியோர், வழுத்த - போற்றுமாறு, அல்லிக்கேணிக்கு ஐ என அமர்ந்தனை - திருவல்லிக்கேணி என்ற தலத்துக்குத் தலைவனாக எழுந்தருளியுள்ளாய்;

நான் கூறிடும் - அடியேன் படுகின்ற, முத்தமிழ்க்கவி ஒலியும் - மூவிதத்தமிழ்ப்பாடலின் ஒலியும்: இருகாதிடை கொளற்கு - உனது இரு திருச்செவியிலும் ஏற்றருள்வதற்கு, ஒரு சிறிது வேட்டனை - சற்றே விரும்பியுள்ளாய்;

ஓரம் ஆர்ந்த நடுநிலையற்ற, கொடியார் அவையிடை - துரியோதனனது சபையில், முத்தொத்து அறல் உகுத்து அழுதாள் - முத்துக்களைப்போலக் கண்ணீரைக் கசியவிட்டுத் துன்புற்ற திரௌபதிக்கு, உவகையினால் - அவளது அன்பின் காரணமாக, தன் உயர் அருள் விளக்கினை - உனது மேலான கருணையை துகில் பல உடனுடன் உண்டாகச் செய்து காத்தருளினாய்;

ஐவர் ஒற்று எனும் பேர் - பாண்டவர் ஐவருடைய பெரிய ஒற்றன் என்ற பெயரையும், ஆறெண ஏற்றனை - உபாயமாக ஏற்றுக் கொண்டாய்;

எழுநிகர் - பரச்சாயுதம் ஒத்து, பலதோள் வாணன் செற்றனை – ஆயிரம் புயங்களையுடைய வாணசுரனைக் கொன்றருளினய்; அறுவை பற்பல கொண்டு - கோபியர் பலர் அணியவுள்ள சேலைகள் பலவற்றைக் கைக்கொண்டு, அணிமரம் ஏறினை - குருந்தமரத்தில் ஏறிக்கொண்டாய்; ஐங்கணைக் கிழவனை- ஐந்தும லரம்புகளையுடைய மன்மதனை, மகவாப் பெற்றனை - மகனுகப்பெற்றாய்;

நலொடு மூன்று – ஏழாகிய, நன் மகன் துணித்த அழகிய புதல்வர்களை வெட்டிக்கொன்ற, ஈர்வாள் ஏந்தும் ஒரு பெரு மாமனை - கூரியவாளேந்திய பெரிய மாமனை கம்சனை, கடற்படையுடன் கெடக்காய்ந்து - கடல் போன்ற சேனை பலவற்றுடன் அழியும்படி கொன்று, அரசு ஆண்டனை - மன்னனுக ஆட்சி செய்தாய்;

கண்ணன் என் திருப்பெயர் காசு இலதாயின் - கண்ண பிரான் என்ற திருப்பெயர் குற்றமற்றதானல், எம் துயர் கண்டே இருப்பாய் - எமது வருத்தமான நிலையை அறிந்து (கண்ணுடையவன் ஆதலின் நன்கு அறிந்தே) இருப்பாய்; ஆதலின் - ஆதலால், நந்துறத் தணந்து - துன்பம் தீரும்படி, நல முழு தருள்வாய் - நன்மை என்பன யாவையும் பெறத் தந்தருள வேண்டும்; செச்சையாம் காங்கு - நீல நிறமான திருமேனி, திருவாய், திருவடி ஆதியன, தெரிதர - விளங்கும்படி, நிவந்த பச்சைமால்வரை நேர் - உயர்ந்துள்ள பச்சைமாமலைபோல எழுந்தருளியுள்ள, பார்த்தசாரதியே - பார்த்தசாரதிப் பெருமாளே ! (அருள்வாய் என்றவாறு.)

அப்பனே ! என்குருவே ! ஆளி முகத்தானே !
கைப்பணிலம் ஆழியுடைக் காரணனே !—துப்பனைய
மேனியுடைச் செந்திருமின் வேட்கையனே !
நின்னடிக்கீழ்
நானியலு மாறு நவில்

—வண்ணச் சரபம்

ஸ்ரீ:

ஸ்ரீமந் நாராயணாய நம:

திருமால் ஒருபது கூற்றிருக்கை

காப்பு : வெண்பா

இருபது தோளானை ஈடழிக்க வந்தாற்(கு)
ஒருபது கூற்றிருக்கை ஓத- வரு பதின்மர்
தந்தா மரைத்தாளும் சங்காழி யங்கை மலர்ச்
செந்தா மரையும் விழைந்தேன்.

ஒருபது கூற்றிருக்கை அமைப்பு :

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 9 8 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 9 10 9 8 7 6 5 4 3 2 1

ஒருபது கூற்றிருக்கை :

ஒன்றே பொருளென்(று) உரைக் கின் றோர்க்கும்
இரண்டே உளவென்(று) இசைக்கின் றோர்க்கும்
ஒன் றுடன் இரண்டாய் மூவா தொளிரும்


இருந்தகை யினதென்(று) இயம்பு வோர்க்கும்
ஒரு பொது முதலாய் இருமுந் நெறிசார்
நான் மறைப் பயனாய் மூன்று குணமாய்
இருவகை வடிவாய் அவை ஒன்றி ஒன்றாய்
அரியுமாகி அயன் அரன் என்னும்
இருவரும் முன்ன நான்கு தோளிடை
ஐம்படை ஏந்தி அவர்நடு நிலவி
நாரா யணன் எனும் நற்பெயர் புனைந்து
நால்வாய் மும்மதத்(து) இரு கோட்(டு) ஒரு கைக்
களி(று) ஒன்று இரங்கி மூல மென் றதனால்
அஞ்சல் நல்கி அரற் புரந் திட்(டு)
அஞ்சா தருளி நாலொடு மூன்றும்
இரண்டும் ஒன்று மால் புணரிய வடிவாய்ப்
புவி முழு தளித்துத் தக்கோர் பலர்க்கும்
இருமைச் சார்பாய் மூன்று தமிழ்க்கும்
நால்வகைக் கவிக்கும் ஐத்திலக் கணந்தெரி
ஆறும் புலமையன் எழுந்தருள் எனலும்
அவன் போ மாறே ஐயம் நாற் குண
முத்துறழ் நகைய இருவர் தம்மொடும்
ஒருக்காற் சென்றனை ஓரத்தினன் போன்(று)
இருந்து மூன் றுலகும் அன்பினால் இறைஞ்ச
ஆறு எழு நாக் கனலுறழ் சினத்தோ(டு)
எண் ஏழ் தேயமும் அறுகுறு கொடுங்கோல்
ஐவாய் அரவப் பதாகை நால
மும் முர சாற்ற இராப்பகல் ஓச்சும்
ஒருவன் றன்குலம் ஒருங்கறக் கறுவி
இருபத மலர்க்கே மூன்று பொழுதினும்
நாலு கரணமும் நல்கய ஐவர்
அறு மகிழ்வு எய்த அளித்தினி தாண்டனை !
எழுத் தெட் டாகினை ஒருபதிற் றெண் பாற்

பகுதியா மிசைப் பாதம் மிக் குவந்தனே !
ஏழ்மரம் எய்தினே ஆறு கடத்தும்
அஞ்சனக் குகஞெடு நாற்றுணே மேயினே !
மூக்குடன் இருமுலே இழந்த ஒருத்தி
மொழுவழி விளந்த முரணுறு போரில்
ஒருவில் ஏந்து இருதோள் கொண்டு
மூன்று தா னவரை முருக்கி நின்றனே !
நாலேந் திண்டோள் நரலே வேந்தன்
அறுவது செயுமுன் ஏழ்கடல் கலக்கினே !
எண்டிரு மகளிர்க்(கு) இன்பம் ஈந்தனே !
ஒன்பது நாதத் துச்சியில் அமர்ந்தனே !
பத்து பாவலர் பாடலும் அணிந்தனே !
ஒன்பது கோளும் எட்டுத்திசையும்
ஏழுவாரமும் ஆரு தாரமும்
ஐந்து பூதமும் நான்கு கதியும்
மூன்று சுடர்களும் பிறவும் ஆயினே !
இருஞ்சிறை ஒருபுள் ஏறி என்பால்
வந்தினி தாளும் மனமுனக் குண்டேல்
இன்னே அருள் கூர்ந்(து) ஏடணக் கயரார்
நன்னே யத்தினர் நடுவிருத் துழியே.


பாடல்-பொள் விளக்கம்


ஒன்றே பொருளென்று உரைக்கின்ரோர்க்கும் - கடவுள் ஒன்றே என்பவர்க்கும்; இரண்டு உள என்று இசைக்கின்ரோர்க்கும் - சக்தி, சிவம் என இரண்டு என்பவர்க்கும்; ஒன்றுடன் இரண்டாய் மூவாதொளிரும் இருந்தகையின தென்று இயம்புவோர்க்கும் - ஒன்றே எனினும் இரண்டே எனினும் அவரவர் எண்ணப்படி தன்னிலே கெடாமல் எங்கும் மேலான தன்மையில் உள்ள தென்பார்க்கும்; ஒரு பொது முதலாய் - ஒப்பற்ற பொது நிலேயினதாய்; இருமுந் நெறி சார் நான்மறைப் பயனுய் - ஆறு சமய நெறிப்பட்ட


நான்கு வேதப் பயனதாய்; மூன்று குணமாய் - பொங்கும் பரிவு, எளிமை, சீலம் என்ற மூன்று குணங்களாய்; இருவகை வடிவாய் - நரன், சிங்கன் என்ற இரண்டு வடிவாய்; அவை ஒன்றி - அவ்விரு வடிவும் பொருந்தி; ஒன்றாய் - ஏகமாய் (நரசிங்க மூர்த்தியாய்) அரியுமாகி - ஹரி என்ற திருநாமத்தை உடையவனாகி, அயன் அரன் என்னும் இருவரும் முன்ன - பிரமன் சிவன் என்ற இரண்டு பேரும் எண்ணித் தியானிக்குமாறு; நான்கு தோளிடை ஐம்படை ஏந்தி - நான்கு புயங்களில் சங்கு, சக்கரம், கதை, வில் வாள் என்ற ஐம்படைகளைத் தாங்கி; அவர் நடுநிலவி - அந்த பிரமன், சிவன் என்ற இருவரின் நடுவே (பிரம்மா - விஷ்ணு - சிவன்) நின்று; நாராயணன் எனும் நற்பெயர் புனைந்து - நாராயணன் என்ற நல்ல பெயரை ஏற்று; நால்வாய் மும்மதத்து இருகோட்டு ஒருகைக் களிறு ஒன்று இரங்கி மூலமென்றதனால் - தொங்கும் வாயினையுடையதாய் மூவகை மதத்தொடு இரண்டு தந்தம் உள்ள ஒப்பற்ற துதிக்கையையுடைய கஜேந்திரனான யானை அஞ்சி 'ஆதி மூலமே' என்ற வாறு கதறியபோது, அஞ்சல்நல்கி - அபயம் கொடுத்து; அரற்புரந்திட்டு - நீர்நிலையில் காப்பாற்றி; அஞ்சாதருளி - (அது) பயப்படாதபடி காத்து; நாலொடு மூன்றும் இரண்டும் ஒன்று மால் புணரிய வடிவாய் - (4+3+2+1 என்ற) பத்து அவதாரம் கொண்டு; புவி முழுதளித்து - உலகைக் காத்தருளி; தக்கோர் பலர்க்கும் - அறிஞர் பலருக்கும்; இருமை சார்பாய் - இம்மை மறுமைக்கும் உரித்தாய்; மூன்று தமிழ்க்கும் - இயல், இசை, நாடகம் என்ற தமிழ் மூன்றுக்கும்; நால்வகைக் கவிக்கும் - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நாற்கவிக்கும்; ஐந்திலக்கணம்தெரி - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற இலக்கணம் ஐந்துக்கும்; ஆறும்புலமையன் எழுந்தருள் எனலும் அவன் போமாறே - அதற்குரிய புலமை என்ற ஆறும் இலக்கணம் அறிந்த செந்நாப்புலவரான திருமழிசை ஆழ்வார் 'எழுக' என்று பாடியபடி;




திருமால் ஒருபது கூற்றிருக்கை




சூரியன் எழுகூற்றிருக்கை


பொதுக்கடவுள்



ஐயம்நாற்குண முத்துறழ் நகைய இருவம் தம்மொடும் ஒரு காற் சென்றனே - அழகுடன் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நாற்குணமும் முத்துப் போன்ற பல் வரிசையினை உடைய சீதேவி, பூதேவி என்ற இரண்டு சக்தி களுடன் ஒருதடவை சென்றாய்; ஓரத்தினன் போன்று இருந்து - அதன்றி ஒரு சார்புடையவன் போல் இருந்து; மூன்றுலகும் அன்பினுல் இறைஞ்ச - மேல், கீழ், நடு என்ற மூவுலகினரும் அன்புடன் வணங்கும்படி; ஆறு எழுநாக் கன லுறழ் சினத்தோடு-எரிகின்றதும், எழுநாக்கினதுமான தீ ஒத்த சினமுடன்; எண் ஏழ்தேயமும்-ஐம்பத்தாறு தேசமும்; அறுகுறுகொடுங்கோல்-அருகில் உள்ள தீய அரக்கர்களோ டுள்ள; ஐவாய் அரவப் பதாகை நால-ஐந்தலை நாகக் கொடி வீரமற்றுத் தொங்கும்படி; மும்முரசாற்ற - வெற்றி முரசு, கொடை முரசு, மணமுரசு மூன்றும் ஒலித்து அலறும்படி; இராப்பகல் ஓச்சும் - இரவும் பகலும் அரசு புரிந்த; ஒருவன் தன்குலம் ஒருங்கறக் கறுவி - துரியோதனன் குலமுற்றும் அழித்தும்; இருபத மலர்க்கே மூன்று பொழுதினும்- இரண்டு திருவடிகளில் காலை, பகல், இரவு என்ற முப்போதும்; நாலுகரணமும் நல்கிய ஐவர் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு கரணமும் ஒருமைப்பட்ட பஞ்ச பாண்டவர்; அருமகிழ்வு எய்த அளித்தினி தாண்டனை - மனமகிழும்படி ஆட்கொண்டாய்; எழுத் தெட்டாகினை - எட்டெழுத்தின் (ஓம் நமோ நாராயணுய) வடிவமாகி உள்ளாய்; ஒருபதிற்று எண்பால் பகுதியாமிசைப் பாதம் மிக்குவந்தனே - பதினெட்டுவகைப்பட்ட மொழி களின் இசைக்கேற்ப நடிக்கும் திருவடி யுடையாய்; ஏழ்மரம் எய்தினே - மராமரம் ஏழினை முறித்தாய்; ஆறுகடத்தும் அஞ்சனக் குகனெடு நாற்றுணை மேயினை - கங்கையை தாண்டிக் கருப்பனான குகவேடனேடு நான்கான துணைவருடன் சென்றாய்; மூக்குடன் இருமுலை இழந்த ஒருத்தி மொழிவழி விளைந்த முரணுறு போல் - மூக்கையும் தனங்களையும் இழந்த சூர்ப்பணகையின் சொற்கேட்டு ஏற்பட்ட ராவணன் போரில்; ஒருவில் ஏந்து இருதோள்

கொண்டு மூன்று தானவரை முடுக்கி நின்றனே - ஒப்பற்ற ஒரு வில்லை ஏற்றுள்ள இரண்டு தோள்களுடன் ராவணன், கும்பகர்ணன், இந்திரஜித் என்ற மூன்று அசுரருடன் போரிட்டு வென்றாய்; நால் ஐந்து திண்தோள் நரலை வேந்தன் அறுவது செயுமுன் - இருபது தோள்களை யுடைய இராவணனைக் கொல்லுமுன்; ஏழ்கடல் கலக்கினை - கடல் ஏழினையும் கலக்கினாய்; எண்திரு மகளிர்க்கு இன்பம் ஈந்தனை - எட்டு விதமான செல்வங்களும் உடையதானாய்; ஒன்பது நாதத்து உச்சியில் அமர்ந்தனை - மண்; நீர், தீ, காற்று, வெளி, சக்தி, சிவம், விந்து, நாதம் என்ற மேல் நிலையில் விளங்குகின்றாய்; பத்து பாவலர் பாடலும் அணிந்தனை - ஆழ்வார்கள் பதின்மர் பாடிய பாடலை ஏற்றருளினை; ஒன்பது கோளும் எட்டுத்திசையும் ஏழு வாரமும் ஆருதாரமும் ஐந்து பூதமும் நான்கு கதியும் மூன்று சுடர்களும் பிறவும் ஆயினை - நவக்கோள்களும், எட்டுத் திசைகளும், ஏழுகிழமைகளும், ஆதாரம் (மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், விசுத்தி, ஆஞ்ஞை, அநாகதம்) ஆறும், மண், நீர், தீ, காற்று, வெளி என்ற பூதம் ஐந்தும், சரியை கிரியை, யோகம், ஞானம் என்ற முத்தி வகையும், சூரியன், சந்திரன், அக்னி என்ற சுடர் மூன்றும் ஆகிய எல்லாம் நீயேயாகியுள்ளாய்; இருஞ்சிறை ஒருபுள் ஏறி என்பால் வந்தினிதாளும் மன முனக் குண்டேல் - விரிந்த இரண்டு சிறகுடைய கருடன் மீது ஏறி அடியேன் முன் சேவைதந்து அருளத்தக்க திருவுள்ளம் இருக்குமானல்; இன்னே அருள் கூர்ந்து ஏடணைக்கயரார் நன்னேயத்தினர் நடுவிருத்துழியே - இக்கணமே மண், பெண், பொன் என்ற மூன்று ஆசையிற்புகாதபடி அன்புடன் காத்து, உனது மெய்யடியார் குழுவில் மத்தியில் 'இருக்கு மாறு செய்தருள்வாயாக.

உ

சூரிய மூர்த்தி துணை

சூரியன் எழுகூற்றிருக்கை

காப்பு - வெண்பா

கரவிலுண்மை ஞானத்தோர் கைகுவித்துப் போற்றும்
இரவி எழுகூற் றிருக்கை—பரவிடற்கு
நேய மிகுத்து நிசமாய தொண்டு செய்வோர்
தூயமலர்த்தாளே துணை.

எழுகூற்றிருக்கை அமைப்பு :

						1						
					1	2	1					
				1	2	3	2	1				
			1	2	3	4	3	2	1			
		1	2	3	4	5	4	3	2	1		
	1	2	3	4	5	6	5	4	3	2	1	
1	2	3	4	5	6	7	6	5	4	3	2	1

எழுகூற்றிருக்கை :

ஒருபரஞ் சுடராய் ஓரா தாரும்
இருவிழித் துணையென் றிசையும் பொருளாய்
எங்கிலே யோர்க்கும் ஒருகரி யாய்மற்(று)
இருசுட ரினுக்கும் மும்மூர்த் திகட்கும்
இருநிலத் துள்ளோர் இயம்பும் இமையோர்
எவர்க்கும் இடமாய் இருள்தீ வினைதோய்

முப்பிணி அலைக்கையி னுல்மரு ளாமல்
பொழுதுமுன் றினுக்கும் இருகை குவிப்போர்
ஒருமை யில்லார் என்னினும் இரங்கும்
மூவா மருந்தாய் நால்ஐந் திண்டோள்
அரக்கன் ஆதியர் அநீதி யதனுல்
மூன்றுல காட்சியும் இருநிதி முதலவும்
ஒருங்கிழந் திட்டதும் ஒருபே ரரையன்
மனைவி மகவெனும் இருவரொடு தானும்
ஆய மூவரும் விலைப்பட் டதனுல்
ஐம்பொறி அடங்கும் முனிவனை வெல்லல்
ஆதிய பிறவும் அறியும் அறமாய்
ஐயம் பெருக்கி நால்நிலத் தலைந்து
மூவகைக் காசும் இருகரத் தேற்று
நல்லோர்க் கறுவித் தீயோ ரொடு கலந்(து)
இருமையும் மறக்கும் மூன்று குற்றத்து
நான்கரு துபவும் நல்கும் ஐந்தினதாய்
ஆறு வானுக ஏழுவா ரத்தும்
அறுவரும் வழிபட ஐம்மலி வையத்து
நாலொடு புணரிய மூன்றும் தொகைய
இருசிறைப் பரிமாத் துணைக்கொடு நாள்செய்(து)
ஒருவரும் புகழ்தோய் பொருவில்சூ ரியனே !
திருமலை முகட்டிற் சென்று வீழ்கால்
உருஅழி வெய்தா(து) உய்யக் காத்ததும்
சூர்கெடத் தடிந்த சுடர்வடி வேலான்
மேய ஊர்வழி வேலையில் அமிழப்
போயநாள் புரந்துஓர் புத்துணர் வளித்ததும்
அனையன பிறவும் அசத்தியம் அன்றே
எனையருட் சித்தி யாவும் ஒன்றப்
பரிந்(து) அவா முழுதும் போக்கிஉண் டருளே !

பாடல்-பொருள் விளக்கம் :

ஒரு பரஞ்சுடராய்-ஒப்பற்ற ஒளிப்பிழம்பாகி, ஓராதாரும்-உணர்வற்றவர்களும், இரு விழித்துணை என்று, இரு கண்களுக்கும் ஒளி தருவதென்று, இசையும் பொருளாய்-ஒப்பக் கூடியதாகி, எந்நிலையோர்க்கும்-எத்தகைய மக்களுக்கும், ஒரு கரியாய் - ஒப்பும் சாட்சியாகி, மற்று - அதுவன்றியும், இரு சுடரினுக்கும் - சந்திரன் அக்கினி என்ற இரு ஒளிப் பொருள்களுக்கும், மும்மூர்த்திகட்கும்-சிவன் பிரமன் திருமால் என்ற முக்கடவுளர்களுக்கும், இரு நிலத்துள்ளோர்-விரிந்த இப்பூவுலகிலுள்ளோர், இயம்பும் இமையோர்-சொல்லப்பட்ட தேவர்கள், எவர்க்கும் இடமாய்-அனைவருக்கும் வாழ்வளிப்பதாகி, இருள் தீ வினை தோய் - இருண்ட கொடிய தன்மையுடைய, முப்பிணி - ஆணவம் மாயை கன்மம் என்ற தீராப்பிணியால், அலைக்கையில் - உழலும் போது, நான் மருளாமல்-அடியேன் மயங்காதபடி, பொழுது மூன்றினுக்கும்-காலை உச்சி மாலை என்ற மூன்று வேளையிம், இருகை குவிப்போர் - இரண்டு கைகளையும் குவித்து வணங்குவோர், ஒருமை இல்லார் என்னினும்-மன ஒருமைப் பாடு அமையாராயினும், இரங்கும்-அவர்க்கும் கருணையுடன் அருள் புரிவதாகிய, மூவா மருந்தாய் - கெடுதலற்ற அமுதமாகி, நால் ஐந்து திண்தோள் - இருபது வலிய தோள்களையுடைய, அரக்கன் ஆதியர் - இராவணன் முதலிய கொடியோர், அநீதியதனல் - கொடுங்கோலாட்சியால், மூன்றுலகாட்சியும் - மண் விண் பாதலம் என்ற மூன்று உலகின் ஆளுகையையும், இருநிதி முதலவும் - பெருஞ் செல்வம் முதலியவற்றையும்- ஒருங்கிழந்திட்டதும் - ஒரு சேர இழந்ததும், ஒரு பேரரையன் - ஒப்பற்ற சத்தியம் திறம்பாத அரிச்சந்திரன், மனைவி மகவெனும் இருவரொடு தானும் - மனைவி சந்திரவதி மகன் லோகிதாசன் ஆகிய இருவரோடு தானும், ஆய மூவரும் - என்னும் இவர்கள் மூவரும், விலைப்பட்டதனல் - விலைப் பொருளாகி விற்கப் பட்டதனல், ஐம்பொறி அடங்கும் முனிவனை - மெய் வாய்

கண் மூக்கு செவி என்ற ஐம்பொறிகளையும் அடக்கிய விசுவாமித்திர முனிவனை, வெல்லல் ஆதிய பிறவும்-வெற்றி கொள்ளல் முதலிய பல வீரச் செயல்களையும், அறியும் அறமாய் - கண்டறிந்த உண்மை அறமாக்கியதும், ஐயம் பெருக்கி- சந்தேக விபரீதங்களை மிகைபடக் கொண்டு, நால் நிலத்து அலைந்து - உலகில் திரிந்து, மூவகைக் காசும்-பொன் வெள்ளி செம்புகளாலான பொருள்களையும், இருகரத் தேற்று- இரு கரங்களாலும் யாசித்துப் பெற்று, நல்லோர் கறுவி தீயோரொடு கலந்து-அறிஞர்களைச் சினந்து பேசியும் மாறுபட்ட கொடியவருடன் கூடியும், இருமையும் மறக்கும் மூன்று குற்றத்து - இம்மை மறுமைப் பயன்களை மறந்து மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற மூவகைக் குற்றங்களையும் உடைய, நான் கருதுபவும் - நான் எண்ணு கின்ற செயல்கள் பலவற்றையும், நல்கும் - கொடுத்தருள வல்லவஞ்சி, ஐந்தினதாய் - ஐம்பூதங்களிலும், ஆறுவான் ஆக - செல்லும் வழி வானவெளியதாக, ஏழுவாரத்தும் - ஏழு கிழமைகளிலும், அறுவரும் - ஆறு சமயத்தவரும், வழிபட - வணங்குமாறு, ஐமலி - அழகுள்ள, வையத்து - தேரில், நாலொடு புணரிய மூன்றும் தொகைய - ஏழு, இரு சிறை பரிமா - இரண்டு சிறகுகளையுடைய குதிரைகளின், துணை கொடு - துணை கொண்டு, நாள் செய்து - ஒவ்வொரு நாளையும் உண்டாக்கி, ஒருவரும் புகழ்தோய் - நீக்கமற்ற புகழ் வாய்ந்த, பொருவில் சூரியனே - இணையற்ற சூரிய மூர்த்தியே !

திருமலை முகட்டில்-(திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள) திருமலை என்ற மலையின் மீது, சென்று வீழ்கால் - அடியேன் சென்று திருவருட்காட்சி காணவேண்டி உருண்டபோது, உரு அழிவு எய்தாது - எனது உடல் அழியாத வண்ணம் (யான் இறவாமல்), உய்யக் காத்த‌துதும்-உய்வடையுமாறு காத்தருளியதும், சூர்கெடத் தடிந்த-சூரபதுமன் அழியுமாறு செற்ற, சுடர்வடி வேலான் - கூரிய வேலணிந்த முருகப் பெருமான், மேய - எழுந்தருளியுள்ள, ஊர்வழி - திருச்

செந்தூரினிடத்து, வேலையில் அமிழப் போயநாள் - கடலில் விழுந்து அழுந்தி யான் உயிர்விடப் போனபோது, புரந்து ஓர் புத்துணர்வு அளித்ததும் - பாதுகாத்து ஒப்பற்ற சமரச ஞான அறிவாகிய புத்துணர்வைக் கொடுத்தருளியதும், அனையன பிறவும் அசத்தியம் அன்றே - அது போன்ற மற்றைய பல அனுபவங்களும் வெறும் கற்பனை அல்லவே. ஆகவே, எனை - அடியேனை, அருட்சித்தி யாவும் ஒன்ற - திருவருளாடல் பலவும் பொருந்தும்படி செய்து, அவாமுழுதும் போக்கி-உலக வேட்கைகள் அனைத்தையும் போக்கி, உண்டு அருளே - உன்னிடமே ஒன்றும்படி செய்வாயாக. எ-று.

அப்பனே! என்குருவே! ஆதித்த நாயகனே!
கைப்பருவம்வே தாகமத்தின் காரணனே!—துப்பனைய
மேனியனே! யாவரினும் மிக்கோனே! நின்னடிக்கீழ்
நானியலு மாறுநவில்

முருகன் முகங்கள் ஆறும்
ஆறுசமயத்தைக் காட்டுவன என்பது

குருவும் கணபதியும் கொற்றமழு வானும்
திருமடந்தைக் காவலனும் சேணில்—வருசுடரும்
தேவினத்தின் தாயான சிற்சத்தி யும்முருகோன்
மூவிரண்டாக் காட்டும் முகம்.

உ

குருவே துணை

பொதுக்கடவுள்
தசாங்கக் கூற்றிருக்கை

காப்பு - வெண்பா

பத்துத் திசையும் பரந்த பரஞ்சுடர்க்கா
முத்துப்போற் றேன்றும் முழுப்புலவோர்—நத்தும்
இயற்றசாங் கக்கூற் றிருக்கையென்னும் பாடல்
செயற்கும் அதே காப்பெனத்தேர்ந் தேன்.

தசாங்கக் கூற்றிருக்கை அமைப்பு :

1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 9 8 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 8 9 10 9 8 7 6 5 4 3 2 1

தசாங்கக் கூற்றிருக்கை :

ஒன்றி ஒன்று(து) இருமையும் ஓர்வது
ஒன்றெனும் வேதம், இரண்டெனும் ஆகமம்,

மூன்றெனும் சோதிட முதல்இரு நிலத்து
நூலெலாம்கூடி நுவல்ஒரு நுட்பம்
ஒருநால் லறிவும் இருவகை வினையும்
மூன்று குணமும் நாலு கரணமும்
மலத்தொகை மூன்றும் இருதிறத்து உயிர்க்கும்
அமைத்தொருங்கு ஆள்வது, அருளோர் இருமுச்
சத்தி யாகி நால்வயிற் சூழ
ஐயெனக் குலவுவது, அகற்றரும் சரிதை
ஆதிய நான்கின் மூன்று காண்டமும்
இருள்கெட உணர்ந்தோர் ஒருமையுள் இருப்பது,
முந்நான்கு சமயத்து ஐயமும் இன்றி
ஆறிதே எனநன்கு அஞ்சாது ஒழுகும்
நானிலத் தினர்தம் மூவலில் விரதத்து
இரங்கொரு மெய்ப்பொருள், இளையோர் விரும்பும்
இருமுலை முத்தென் வாள்நகை நாற்குணம்
ஐவணச் செங்கை அறுபதம் முரல்குழல்
வடம்ஏழ் கோத்த மாண்கலை பொதியும்
ஆருக் காமத்து ஐவேற் கடிதடம்
நாற்றியற் சுட்டி நகுநுதல் முந்நீர்
இரண்டுறழ் கருங்கண் ஏய்ந்தோர் சில்லோர்
தாமும் இருதயந் தனிற்கொள விழைவது,
முத்தி நான்காய் ஐந்தொழிற் பொலிவாய்
ஆறுந் தானத்து எழுபே ரொலியாய்
எண்ணரும் எழுத்தாய் ஆரு தாரமும்
ஐங்கோ ணத்தில் நாலினை அடக்கும்
முப்பொறி யிருந்த பொறியொன்றும் ஆகி,
ஒருகை ஈர்ங்கவுள் மும்மதம் நால்வாய்
அஞ்சனக் கரிமுதல் எறும்பீருகும்
ஆறேழ் பெருக்கம் இனைய இலக்கம்
என்னும் எண்படும் யோனிப் பகுதியின்

உயிர்முழு தாகி, ஒன்பது கோளும்
எட்டுச் சித்தியும் எழுவகை உலகும்
ஆறுபற் பலவும் ஐந்தரு நிழலும்
நாற்கோட்டு இபமிசை முக்கோட்குலிசம்
இருகரத் தேந்தி வருமன் முதலோர்
ஒருவா தாகி ஒளிர்வது, நாளும்
இருபொழு தாகி மூன்று சுடராய்
நாலாம்விதத்து ஐஞ்ஞிறம்பெருக் கினவாய்
அறுக்கரும் ஏழ்பவத்து அருவருப் புற்ருர்க்கு
எட்டு மூர்த்தியும் ஒன்பது பேதமும்
ஆகிப் பத்துத் திசையினும் அவிர்பரம்,
ஒன்பது எட்டு ஏழ் வயதுறும் இளமைப்
பருவமும் இன்றிப் பசுமுலைக்(கு) அறுவை
போர்த்தாள் அஞ்சலி யினுல்மகிழ் வெய்தி
முருக்கலர் பொரும்வாய் இதழ்இரண் டுடுஒன்று
ஒரீஇப் பருகி ஈரமொடு முத்தி
நாற்றிசை உணர ஐங்கணைத்துயரம்
ஆறப் புணர்ந்துடன் ஏழையர் வேண்டற்(கு)
எண்மடங் குதவும் மகற்பயந்(து) ஒன்பான்
தொகையார் தம்மில் எண்மரும் நாண
எழுபரித் தேரில் அறுநெறி யோரும்
அஞ்சிநால் நலனும் மூன்று பொழுதும்
இரப்பத் தினம்வரும் எறிகதிர் ஒன்றும்,
ஓர்மை மிக்குறும் இருபிறப் பாண்மை
முத்தமிழ் அமைச்சனுல வாயின்
ஐவேற் செழியன் அனுப்பு மாறு
கழிவுறச் செல்கால் எழுகுருந் தைக்கீழ்
எண்ணெழுத் திண்டோள் ஆறமர் சடைக்காடு
ஐவாய் அரவணி நாற்கரன் மான்மழு
மூவிலைச் சூலம் இருந்தைநேர் களம்ஒன்று

ஓருரு மறைத்திட்டு இருதோள் ஆதி
காட்டிய சிவனும், கதிர்மதி கனலாம்
முக்கண் நாற்றேள் அஞ்சு வன்ன
மயில்நிகர் சாயல் ஆருத் தழல்உறழ்
கட்புலி வாகனம் எழில்மிகை அருக்கயிறு
அஞ்ச மென்நடை அமைதரு பரையும்,
நால்மூன் றன்பர் ஈர்ங்கவி ஓர்வார்க்கு
ஒருவை குந்தத்து இருக்கை நல்கி
மூவரிடையில் நான்முகற் பயந்தாண்டு
ஐம்படை தாங்கி நின்றநா ரணனும்
ஆறில்ஐங் கரத்தில் நால்பெரும் பனேநேர்
கையால் மூப்புறு காரிகை தன்னை
இருவர்கண்டு ஒல்க ஒருவரை ஏற்றிய
ஒற்றைக் கொம்பனும்; இரைபெருங் கடலில்
மூன் று தானவர் நால்விதப் படையொடு
அஞ்சி மாய்வுற அயிலால் அழித்து
நாலாங் கரணம் நசித்த முத்தரும்
இருங்கக னத்தினர் எல்லோர்களும் அங்கு
ஒருகணத் துய்யச் செய்வ துன்னி
இரதம் ஓச்சிய முத்தொடைக் குகனும்,
நான்மறை வியாசன் நலந்திகழ் சங்கர
முனியெனும் இருவர் முதலோர் உளத்தில்
ஒன்ரு விளங்கிய உண்மையை உணர்த்தித்
தானே யாகி ஆகா இருநிலே
முந்நிலே யாய முறைமையும் காட்டி
இரண்டென் பவர்க்கும் ஏகம்என் போர்க்கும்
ஒருபொ துவாகி இருக்க வைத்தும்
சித்தி ஒன் றும் திரும்பிப் பிறவா
முதல்வீ டொன் றும் முறையின் எய்தக்
கருணே யாதிய கவின்பல வாய்ந்த

பெரியார் தாள்மலர்ப் பிரசம் சூடி
ஏன்றமட் டாசான் இணைப்பதம் நாடித்
தவித்துளேன் அந்தச் சகளமாகிப்
புவித்தலை வரிலென் புழுக்கம் போமே.

பாடல் பொருள் விளக்கம் :

ஒன்றி - எல்லாவற்றூடும்தான் கலந்தும், ஒன்ருது வேருயிருந்தும், இருமையும் ஓர்வது - இம்மை மறுமை என்ற இரண்டையும் அறிவது, ஒன்று எனும் வேதம் - முத்தியில் உயிர் இறையருளுடன் வேருயிராமல் பாலில் நீர் போல் ஒன்றுபடுவது என்று கூறுவது வேதம்; இரண்டு எனும் ஆகமம் - இறையுடன் ஒன்ருமல் வேருயிருக்கு மென்பது சிவாகமம்; மூன்று எனும் சோதிடமுதல் - சோதிட நூலோ பதி, பசு, பாசம் என்ற மூன்றையுடைய தாகக் கூறும்; இவையாவும், இருநிலத்து - இப்பெரிய உலகத்தில், நூல் எலாம் கூடி - வேத ஆகம சோதிட முதலான இவையெல்லாம் கூடி, துவல் ஒரு நுட்பம் - கூறும் ஒரு நுட்பம் யாதெனில், ஒரு நல்லறிவும் - ஒப்பற்ற நல்லறிவும், இருவகை வினையும் - நல்வினை, தீவினைகளும், மூன்று குணமும் - சத்துவம், ராசதம், தாமதம் என்ற மூன்று குணபேதமும், நாலுகரணமும் - மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற அந்தக் காரணங்களும், மலத்தொகை மூன்றும் - ஆணவம் மாயை கன்மம் என்ற மும்மலங்களும், இருதிறத்து உயிர்க்கும் - நிலையுயிர், இயங்குயிர் என்ற இருவகை உயிரினங்களுக்கும், அமைத்து ஒருங்கு ஆள்வது - பொருந்தச் செய்து தன் ஆணைக்குள் அமைய நடத்துவது,

அருள் - கருணையால், ஒரு இரு முச்சத்தியாகி - திருவருட்சக்தி என்ற ஒன்ருயும், அருள்மாயை என்ற இரண்டாயும், இச்சை கிரியை ஞானம் என்ற சக்திகள் மூன்ருயும், விளங்கி, நால்வயிற்சூழ - அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கிடத்தும் பொருந்தி, ஐ எனக் குலவுவது - தலைமைப் பொருளாக இருப்பது;

அகற்றரும், விலக்க முடியாத, சரிதை ஆதிய - சரியை கிரியை யோகம் ஞானம் என்ற, நான்கின் - நாற்பாதங் களில் நின்று, மூன்று காண்டரும் - கருமம், பக்தி, ஞானம் என்ற மூன்று பகுதிகளிலிருந்து, இருள்கெட உணர்ந்தோர், அஞ்ஞானம் நீங்கத் தன்னையறிந்த பரமஞானிகளிடம், ஒருமையுள் இருப்பது - நீங்காமல் நிற்பது;

முந் நான்கு சமயத்து - அகம் புறம் என்ற பன்னிரண்டு சமயங்களில், ஐயமும் இன்றி - வேறு வேறுகக் கடவுளிருப்ப தாக எண்ணுமல் ஒன்றே எல்லாம் என்று சந்தேகமறும் படியாக, ஆறு இதே என - உண்மையான நல்வழி இதுவே என்பதாக அறிந்து, நன்கு - உறுதியுடன், அஞ்சாது ஒழுகும் - நாத்திகர் மொழிகட்கு அச்சப்படாமல் தவம் புரியும், நானிலத்தினர் தம் மூவலில் - உலகத்தன்பரது கெடுதலில்லாத, விரதத்து இரங்கு தவமுயற்சியில் மனமிரங்குகின்ற, ஒரு மெய்ப்பொருள் - ஒப்பற்ற அழிவற்ற வஸ்துவாயிருப்பது;

இளையோர் விரும்பும் - திடமனமற்றவர் விரும்புகின்ற, இருமுலை - இரண்டு தனங்கள், முத்துஎன் வாள் நகை - முத்துப்போன்ற ஒளிபொருந்திய பற்கள், நாற்குணம் - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்கள், ஐவணச் செங்கை - மருத்தோன்றி பூசிச் சிவந்த கைகள், அறுபதம் முரல் குழல் - ஆறு கால்களையுடைய வண்டுகள் பூக்களிலிருந்து ரீங்காரம் செய்கின்ற கூந்தல், வடம் ஏழ் கோத்த - ஏழு எண்கொண்ட மணி கோர்க்கப் பெற்ற மாண்கலை பொதியும் - உயர்ந்த ஆடை அணிந்து, ஆருக் காமத்தை - மிகுந்த இச்சையை விளைக்கத்தக்க, வேற் கடிதடம் வேல்போன்ற மறைவிடத்தையும், நாற்றியற் சுட்டி - தொங்குமாறு அணியப் பெற்ற சூளாமணியை உடைய, நகுநுதல் - ஒளி வீசும் நெற்றியையும், முந்நீர் இரண்டுறழ் கருங்கண் ஏய்ந்தோர் - கடல் இரண்டு கூடியது போன்று மைதீட்டிய கண்களையுமுடைய மகளிருள்

சில்லோர்தாமும் – சிலரும்கூட, இருதயந்தனிற் கொள விழைவது - தமது மனத்துள்கொள்ள விரும்புவது;

முத்தி நான்காய்- சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய மென்ற பதமுத்தி நான்காய், ஐந்தொழில் பொலிவாய் - படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்துசெயலினதாய், ஆரும் தானத்து - ஐம்பெரும் பூதங் களுக்கும் அப்பாற்பட்ட நாதமாய், எழு பேரொலியாய் - ஏழு பெரிய ஒலிகளாய் (சப்த ஸ்வரங்களாய்), எண்ணரும் எழுத்தாய் - எண்ணுதற்கரிய பிரணவமாய், ஆருதாரமும் - மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்களாய், ஐங்கோணத் தில் - ஐந்துவரையுள்ள கோணங்களில், நாலினே அடக்கும் - மூச்சுக்காற்றில் கழியப் பெற்ற நான்கு கலைகளை உட்செலுத்துகின்ற நிலையில், முப்பொறி இருந்த பொறி யொன்றும் ஆகி - அகரம் உகரம் மகரம் என்றவற்றுள் ஒரு எழுத்தான அகரமுமாகி இருப்பது;

ஒருகை - தும்பிக்கை ஒன்று, ஈர்ங்கவுள் - மத நீருடைய கன்னங்கள், மும்மதம்-மூன்றுமதங்கள், நால்வாய்-தொங்கு கின்றவாய், அஞ்சனக்கரி - கறுப்பு நிறம் ஆகியன உடைய யானை, முதல் - முதலாக, எறும்பு ஈருகும் - எறும்புவரை யுள்ள, ஆறு ஏழு பெருக்கம் இனைய இலக்கம் என்னும் எண் படும் - நாற்பத்திரண்டை இரண்டால் பெருக்க வரும் எண்பத்து நான்கு லட்சம் என்று கூறும், யோனிப் பகுதி யின் - யோனி பேதங்களின், உயிர் முழுதாகி - உயிர்க் கூட்டம்அனைத்தும் தானேயாகி;

ஒன்பது கோளும் - நவக்கிரகங்களும், எட்டுச் சித்தியும்- அட்டமா சித்திகளும், எழுவகை உலகும்-ஏழு உலகங்களும், ஆறுபற்பலவும்-நதிகள் பற்பலவும், ஐந்தரு நிழலும்-கற்பகம் முதலிய தேவ மரங்கள் ஐந்தின் நிழலும் உடைய, நாற் கோட்டு இபமிசை - நான்கு தந்தங்களுடைய ஐராவதத்தின் மீது, முக்கோட்குலிசம் - மூன்று மூன்முன கூர்மையுடைய

வச்சிரப் படையை, இருகரத்தேந்தி - தன் இரு கைகளிற் கொண்டு, வரு மன் - பவனி வருகின்ற தேவேந்திரன், முதலோர் - முதலியவானவர்கள், ஒருவாதாகி ஒளிர்வது - விட்டு நீங்காததாகி விளங்குவது;

நாளும் - ஒவ்வொரு நாளும், இரு பொழுதாகி - பகல் இரவு என்ற இரண்டு பொழுதாகி, மூன்று சுடராய்-சூரியன் சந்திரன் அக்கினி என்ற மூன்று ஒளிவடிவாகி, நாலாம் விதத்து - நான்கு நிலைகளிலும் (நெறி/மார்க்கம்/வருணங் களிலும்), ஐஞ்ஞிறம் பெருக்கினவாய் - வெள்ளை, கறுப்பு' சிவப்பு, பச்சை, மஞ்சள் என்ற ஐந்து நிறங்களையும் கொண்டு, அறுக்க அரும் ஏழ்பவத்து - நீக்கமுடியாத எழு வகைப் பிறப்பில், அருவறுப்புற்றோர்க்கு - வெறுப்படைந்த உத்தமர்களுக்கு, எட்டு மூர்த்தியும் - மண், நீர், நெருப்பு, காற்று, வெளி, சூரியன், சந்திரன் ஆன்மா என்ற அட்ட மூர்த்தங்களின் வடிவாயும், ஒன்பது பேதமும் ஆகி - ஐம் பெரும் பூதங்களுடன், சக்தி, சிவம், விந்து, நாதம் என்ற ஒன்பது பேதங்களும் கொண்டு, பத்துத்திசையிலும் அவிர் பரம், எட்டுத்திசைகளுடன் மேல், கீழ் என்பதும் சேர்ந்த பத்துத் திக்குகளிலும் பொருந்தி விளங்கும் பரம் பொருள்,

ஒன்பது எட்டு ஏழ் வயதுறும் இளமைப் பருவமும் - ஒன்பது எட்டு, ஏழு வயதுடைய இளமைப் பருவமும்- இன்றி - இல்லாமல், பசு முலைக்கு அறுவை போர்த்தாள் - இளநகில்களை மறைக்க வேண்டி ஆடையை அணிந்த குந்தி தேவியின், அஞ்சலியினால் மகிழ்வெய்தி - மந்திர ஜபவலிமை கண்டு மனமுவந்து, முருக்கு அலர் பொரும் வாய் - முருக் கம்பூவை ஒத்துச் சிவந்த வாயினது, இதழ் இரண்டுடு ஒன்று ஒரீஇ - உதடுகள் இரண்டில் மேலுதட்டை விடுத்து- பருகி - கீழ் இதழைச் சுவைத்து, ஈரமொடு முத்தி, அன்புடன் முத்தமிட்டு, நாற்றிசை உணர - உலகம் அறியும்படி, ஐங்கணைத் துயரம் ஆறப்புணர்ந்து - மன்மதனது மலரம்புகளால் ஏற்பட்டத் துயரம் தரும் காம இச்சையானது மாறுமாறு கூடிப் புணர்ந்து, உடன் ஏழையர்

வேண்டற்கு - உடனே வறியவர்கள் விரும்பியவாறு, எண் மடங்கு உதவும் மகற் பயந்து - ஒன்றுக்கு எட்டு மடங்காகக் கொடையுதவும் கர்ணனைப் பெற்று, ஒன்பான் தொகையார் தம்மில் எண்மரும் நாண - நவக்கிரகங்களில் ஏனைய எட்டுப் பேர்களும் நாணும்படி, எழுபரித் தேரில் - ஏழு குதிரைகள் பூட்டிய தேரொன்றில், அறுநெறியோரும் - அறுவகைச் சமயத்தோரும், அஞ்சி - அச்சமுற்று, நால் நலனும் - அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பயன்களையும், மூன்று பொழுதும் இரப்ப - மூன்று வேலைகளிலும் வேண்டும்படி, தினம்வரும் – நாள்தோறும் வருகின்ற, எறிகதிர் ஒன்றும் - சூடுகின்ற கிரணங்களைக் கொண்ட **சூரியமூர்த்தி** ஒன்றும்;

ஓர்மை மிக்குறும் - மன ஒருமைப்பாடு அதிகம் பெற்ற, இருபிறப்பான்மை - இருபிறப்பாளராம் அந்தணர் மரபில், முத்தமிழ் அமைச்சன் - முத்தமிழ் விற்பன்னராகிப் பாண்டியனது அமைச்சராய்த் தென்னவன் பிரமராயன் என்ற சிறப்புடன் விளங்கிய மாணிக்கவாசகர், ஆலவாயின் - மதுரையம்பதியில், ஐவேற் செழியன் - அழகிய வேற்படையுடைய பாண்டிய மன்னனால், அனுப்பு மாறு - குதிரை வாங்குவதற்கு அனுப்பப்பட்டபோது, கழிவுறச் செல்கால் - வினை நீங்கும்படி சென்ற இடை வழியில், எழுகுருந்தைக் கீழ் - வளர்ச்சியுற்ற (திருவருளை எழுப்புகின்ற) குருந்த மரத்தின் கீழ், எண்ணெழுத் திண்டோள் - எட்டு வலிய தோள்களுடன், ஆறு அமர் சடைக்காடு - கங்கை தங்கிய சடைக்கற்றையும், ஐவாய் அரவு அணி - ஐந்துதலை நாகத்தையும் புனைந்துள்ள, நாற்கரன் - நான்கு திருக்கைகளையும், மான்மழு மூவிலைச் சூலம் - மான், மழு, சூலம் ஆகியவற்றையும், இருந்தைநேர் களம் ஒன்று - கரிய நீலகண்டத்தையும், ஒருரு மறைத் திட்டு - கொண்டதனது ஒப்பற்ற வடிவினைக்காணுவாறு மறைத்து, இருதோள் ஆதிகாட்டிய - இரண்டு கைகள் முதலியகொண்டு குருவடிவில் எழுந்தருளிக்காட்சியளித்த சிவனும் – **சிவபிரானும்**;

கதிர்மதி கனலாம் - சூரியன் சந்திரன் அக்கினி என்ற, முக்கண் - மூன்று கண்களையும், நாற்றோள் - நான்குபுயங்களையும், அஞ்சுவன்ன மயில் நிகர் சாயல் - ஐந்து நிறங்களோடமைந்த மயில் போன்ற தோற்றத்துடன், ஆருத்தழல் உறழ் - எரியும் தீப்போன்ற, கட்புலி வாகனம் - கண்களையுடைய புலிவாகனத்தில், எழில்மிகை அருக்கயிறு - அழகுமிக்கப் பாசக்கயிறுடன், அஞ்சம் என்நடை - அன்னப் பறவை போன்ற நடையுடன், அமைதரு பரையும் - பொருந்தப் பெற்ற உமாதேவியும்;

நால் மூன்று அன்பர் - பன்னிரண்டு ஆழ்வார்கள் பாடிய, ஈர்ங்கவி ஓர்வார்க்கு - இனிய தமிழ்ப் பாசுரங்களைப் படித்தறியும் அன்பர்கட்கு, ஒரு வைகுந்தத்து இருக்கை நல்கி - ஒப்பற்ற பரமபதத்தில் வைகும் பேரின்ப வாழ்வை உதவி, மூவர் இடையில் - பிரமன் திருமால் உருத்திரன் என்ற மும்மூர்த்திகளின் நடுவில், நான்முகன் பயந்து ஆண்டு - பிரமனைப் பெற்று ஆட்கொண்டு, ஐம்படை தாங்கி - சங்கம், சக்கரம், கதை, கட்கம், சார்ங்கம் என்ற ஐந்து ஆயுதங்களை ஏந்தி, நின்ற நாரணனும் - விளங்கும் நாராயணனாகிய திருமாலும்;

மாறில் ஐங்கரத்தில் - ஒத்த இயல்புடைய ஐந்து கைகளுள், நால்பெரும் பனைநேர் கையால் - தொங்குகின்ற பெரிய பனைமரம் போன்ற துதிக்கையால், மூப்புறு காரிகை தன்னை - முதியவளான ஒளவையாரை, இருவர் கண்டு ஒல்க - சுந்தரரும் சேரமானும் ஒதுங்கும்படி, ஒரு வரை ஏற்றிய - ஒப்பற்ற கயிலை மலைக்கு ஏற்றிவிட்ட, ஒற்றைக் கொம்பனும் - ஒற்றைத் தந்தமுடைய கணபதியும்;

இரைபெருங் கடலில் - ஆரவாரிக்கும் பெரிய கடலில், மூன்று தானவர் - சூரன், சிங்கமுகன், தாருகன், என்ற மூவரையும், நால்விதப் படையொடு - இரத கஜ துரக பதாதி என்ற நாற்சேனைகளோடு, மாய்வுற – அழியுமாறு, அயிலால் அழித்து - வேலால் அழித்து, நாலாங்கரணம் - மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்ற நான்கு அந்தக் கரணமும், நசித்த முத்தரும் - அழிந்த தவசிகளும், இருங் ககனத்தினர் எல்லோர்களும் - பெரிய் தேவருலகத்தவர்

யாவரும், அங்கு - அப்போரில், ஒரு கணத்து உய்ய - சிறிது நேரத்தில் உய்வடையுமாறு, உன்னி - கருதி, இரதம் ஓச்சிய - தேரைச் செலுத்திய, முத்தொடைக் குகனும் - வெட்சி, கடம்பு, குராமலர் மாலைகளையணிந்த முருகப் பெருமானும்.

நான்மறை வியாசன் - நான்கு வேதங்களிலும் விற்பன்னரான வியாசமுனிவர், நலம் திகழ் சங்கர முனி எனும் இருவர் - ஞான நலம் திகழ்ந்து விளங்கிய சங்கராசார்யர் என்னும் இரண்டு அருளாளர், முதலோர் - போன்ளுேர், உளத்தில் - மனத்தின் கண்ணே, ஒன்ரு விளங்கிய - பொருந்திக் காணப்பெற்ற, உண்மையை உணர்த்தி - சமரச ஞானத்தை அறியும்படி திருவருள் புரிந்து, தானே ஆகி - எல்லாம் தானேயாகியும், ஆகா - புறம்பாயும் உள்ள, இருநிலை - உருவம் அருவம் என்ற இரு நிலையையும், முந்நிலையாய - உருவம் அருவம் உருவருவம் என்ற மூன்று தன்மைகளையும் கொண்டமைந்த, முறைமையும் காட்டி - முறைகளையும் காட்டி, இரண்டு என்பவர்க்கும் - முத்தியில் இறை வேறு உயிர் வேறு என்ற துவைத வாதிகளுக்கும், ஏகம் என்போர்க்கும் - ஒன்றே என்பவர்களுக்கும், ஒருபொதுவாகி - அவ்வவர் பக்குவத்திற்கேற்ப பொதுப்படியாக விளங்கி, இருக்க வைத்தும் - இருக்கச் செய்தும், சித்தி ஒன்றும் - திருவருட் சித்தியும், திரும்பிப் பிறவா - மீண்டும் பிறப்பில்லாத, முதல் வீடு ஒன்றும் - பேரின்ப வீடும், முறையின் எய்த - படிமுறையில் பெற்றுய்ய, கருணை ஆதிய கவின்பல வாய்ந்த பெரியார் - சீவகருணை முதலாகிய அழகு பல வாய்க்கப் பெற்ற அருளாளர்களது, தாள் மலர்ப் பிரசம் சூடி - திருவடித்தாமரைத் துணைகளைத் தரித்து, ஏன்ற மட்டு - கூடியவரையில், ஆசான் இணைப் பதம் - குருநாதரது பாதமலரை, நாடி - தியானித்து, தவத்துளேன் - தவம் செய்து கொண்டிருக்கிறேன்: அந்தச் சகள மாகி - அத்தகைய திருவடிவங்கொண்டு, புவித் தலை வரில் - உலகினிடத்து அவதாரம் செய்வாராயின், என் புழுக்கம் - என் மனவேதனை, போம் - நீங்கிவிடும். எ-று, ஏ-அசை.

மாலை மாற்று (முருகன் மீது)

[மேலே இருந்து தொடர்ந்து பாதிவரை படித்து அப்படியே திருப்பிக் கீழே இருந்து படிக்க ஈறு முதல் மேலே ஒரே மாதிரியாக உள்ளது. மேலிருந்தும் கீழிருந்தும் மாலை போல அமைவதால் மாலை மாற்றெனப் பெயர் பெற்றது. திருஞானசம்பந்தர் சீகாழிப்பதிக்குரிய தேவாரப் பதிகங்களில் மாலைமாற்று என ஓர் பகுதியமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

KOVILOOR ANDAVAR * LIBRARY, KOVILOOR
A. No. 15765

பாடல் : 1 வாகா வீரா காசா காமோ
தாகா சீரா போகா காரா
ராகா காபோ ராசீ காதா
மோகா சாகா ராவீ காவா.

வா வா
கா கா
வீ வீ
ரா ரா
கா கா
சா சா
கா கா
மோ மோ
தா தா
கா கா
சீ சீ
ரா ரா
போ போ
கா கா
கா கா
ரா ரா

உரை :

வாகா - அழகுடையவனே; வீரா - வீரமுள்ளவனே; காசா-நாணற் குளத்தவனே; காமோ - வள்ளியிச்சையனே தாகா - அன்பர் விருப்பினனே; சீரா - சிறப்புடையோனே; போக - இன்பத்தின்; ஆகாரா - வடிவமானவனே; ராகா -

செந்நிறமேனியனே; கா - கற்பகம் ஒத்தவனே; போர் - யுத்த காலத்தில்; ஆசீ - திருமால் துதி ஏற்ற; காதா - செவிகளையுடையவனே; மோகா - அன்பர் விருப்பினனே; சாகார் - மரணமற்ற மேலோரது; ஆவீ - உயிரொத்தவனே; கா - என்னைக் காத்தருளும்படி, வா - நேரிற்காட்சி தருதல் வேண்டும்.

பாடல் : 2 நேச கேருமு தாரவி மாசமோ
தாச ரானக லானிச வாசரா
ராச வாசனி லாகன ராசதா
மோச மாவிர தாமுரு கேசனே.

நே நே
ச ச
கே கே
ரு ரு
மு மு
தா தா
ர ர
வி வீ
மா மா
ச ச
மோ மோ
தா தா
ச ச
ரா ரா
ன ன
க க
லா லா
னி னி
ச ச
வா வா
ச ச
ரா ரா

உரை : நேசகு - தயை செய்தற்கு; ஏர் - அழகாயிருக்கின்ற உம் - உம்முடைய! உதார - ஈகைத் தன்மையுடைய; வி - அருள் விழிகள்; மாசமோ - குற்றமுடையாங்களோ: தாசர் - தொண்டர்களாக; ஆனகலால் - அமைந்ததுமட்டுமின்றி; நிச - சத்தியத்தை: வாசரா - கைக்கொண்டோமில்லே; ராச - அரசர்களால் உண்டாகிற; ஆசு- குற்றமான அல் - இருளேப் போக்க; நிலாகன - சந்திரன்போல் ஒளி செய்கின்ற; ராசதா - ரசோகுணமுடையவரே; மோசமா - மோசம் செய்யலாமோ? விரதா - அடியவரைக் காக்கும் நெறியுடையவரே; முருகு - இளமையும் அழகுமுடைய; ஈசனே - தலேவஞகிய கடவுளே.

அருள் விழிகள் மோசம் செய்யலாகுமோ என இயைக்க.

ஏகபாதம் — கலிவிருத்தம்

[நான்கு அடிகளும் ஒரே விதமாய் அமைந்து, நான்குவித கருத்தைத் தருவது]

முருக வேடன் முதற்குரு நாதனே
முருக வேடன் முதற்குரு நாதனே
முருக வேடன் முதற்குரு நாதனே
முருக வேடன் முதற்குரு நாதனே.

முருக - (சமணரை வாதிற் செயித்த) அழகிய; ஏடன் - பனேயேட்டினே உடையவர்; முதற்கு - இறைவஞன பரம சிவனேக் குறித்து; உரு - யாவரும் உருச் செபிக்கத்தக்க - நாதன் - பண்ணேடு கூடிய பதிகங்களேப் பாடியவர்; ஏ; பூவாகிய கணேகளேக் கொண்டு; முருகு - பெருவிழா நடத்துகின்ற; அவ்வேள்தன் - அந்த மன்மதஞல் உண்டாகும்; முது - முதிர்ந்த; அற்கு - அல்லுக்கு, (மோக இருளே) நீக்குதற்கேற்ற; உரு - ஒப்பற்ற ஒளி வடிவினே உடையவர்; நாதன்- எல்லா உலகங்கட்கும் முதல்வர்; ஏம் - கண்டாரது இறுமாப்பு; உருகு - கரையும்படியான; அ - அழகுமிக்க, வேடன் - திருவுருவுடையவர்; முதல் - ஊதியந்தரும் முதற்பொருள் போன்ற; குரு - வியாழனது சம்பந்தமுடைய; நா, தனேம் - நாவின்தன்மையுடைய எங்களது, முருக வேடன் - முருகக் கடவுளான வேடகுமாரர்; முதல் - முதன்மை பெற்ற; குருநாதன் - எமது குருநாதராவர் என்பது, ஏ - அசை

மாலைமாற்று வெண்பா

காருமுல வாதரவி காமருடு நேருவவு
மோருதவி யாகி யோவா நீ—வாரவா
நீவாயோ கியாவிதரு மோவுவரு நேடுரும
காவிரத வாலமுரு கா-

கா கா
ரு ரு
மு மு
ல ல
வா வா
த த
ர ர
வி வி
கா கா
ம ம
ரு ரு
டு டு
நே நே
ரு ரு
வ வ
வு வு
மோ மோ
ரு ரு
த த
வி வி
யா யா
கி கி
யோ யோ
வா வா
நீ நீ
வாரவா

உரை: காரும்-மேகங்களும்; அ - அனைத்தையும் இயக்கு கின்ற ஆற்றலுள்ளவனான அந்த; ரவி - சூரியனும்; காமர்- அழகிய; உடு - நட்சத்திரங்களும்; நேருவவும் - நவக்கோள் முதலிய பிறவும்; உலவாது - (உமதருளின்றேல்) தத்தம் நெறியில் நடவாது, ஆதலால்; ஓர் - ஒப்புயர்வற்ற; உதவி யாகி - உறுதுணையாகி; ஓவா - உயிர்கள் வருந்தாவாறு; நீ - தேவரீர்; வார - அருள் உள்ளம் கொண்டு; வா - முன் வந்தருள வேண்டும்; நீவா - தன் துயரையே துடைக்க முடியாத; யோகி - சிறுதவமுடையவவனால்; ஆவி - பிற உயிர்கட்கு; தருமோ - இன்பம் தரமுடியுமோ; உ வரும்- வள்ளி, தெய்வானை என்ற இருவரும்; மகாவிரத - கடுந்தவ முள்ளவரும்; நேடுரும் - விரும்பத்தக்க; வால - இளமையும் அழகுமுடைய, முருகா - முருகப்பெருமானே ! (எ.று)

(கு-பு) உலவாது, மகாவிரத என்ற இரு சொற்களை அன்வயப்படுத்தியும், உ - வரும் இடத்தில் இருதேவியரை யும் பொருள்கொள்ளப்பட்டது. உ, தமிழெண்ணில் இரண்டு. ஆகவே, இருதேவியரைக் கொள்ளநேர்ந்தது.

தனிக் குறில் வெண்பா

குமர ! குழக ! குமரி உதவு(ம்)
அமர ! எயின ரதிப !—எமது
தகவு புவிய தனிலொ ளிரள (ன்)
அகமு ளுறுக ! அணி.

தனி நெடில் வெண்பா

வேலோனே ! வானோவா ! மேலோனே ! வீடேஈ
காலோனே ! மாயோனே ! காணாதே—மாலானே(ன்)
நீவாவா வாராதே(ன்) நேரீதோ? ஆகாதே
பாவாதீ தா ! மாகோ பா.

சதுரங்க பந்தம்

(திருவரங்கத் திருவாயிரத்துள் உள்ளது)

வெண்பா

மாய வயனமையா வானரிதன் றேர்பரிமா
வாய முகஞ்சேர்மாத ராடல்சொல்வாய்-தூயதவத்
தாயரங்க னேமத் தகுவன்வத மாரிநய
மாய னரிமாத வன்.

மா	ய	ன	ரி	மா	த	வ	ன்
ய	வ	வா	த	ர்	ரா	கு	வ
ன	மை	யா	ன்	சே	ட	த	த
ரி	ப	ர்	றே	ஞ்	ல்	த்	மா
மா	வா	ய	மு	க	சொ	ம	ரி
த	ய	தூ	ய்	வா	ல்	னே	ந
வ	த்	தா	ய	ர	ங்	க	ய
ன்	வ	த	மா	ரி	ன	ய	மா

[அறுபத்து நான்கறையுள்ள சித்திரம் அமைத்து செய்யுளின் கடைசி நாற்புறத்தும் மதில்போல் திகழ அமைத்து முதலில் துவக்கி இரண்டாம் அறையினின்று கீழிறங்கி அங்ஙனம் முறைப்படி மடித்து மடித்து வாசிப்பது. இங்ஙனம் ஓர் ஆட்சியுண்டு]

பொருள் :-

ஐயா !

பரிமாவாய முகம் சேர் மாதர் - குதிரை முகமுடைய கின்னரிகள், ஆடல் – பாடும் கீதங்களை (தெய்வீகப் பாடல் களை) சொல்வாய் - (நீரும்) சொல்வீர்! [சொல்வீரானல்] வயனம் மாய - பழிச் சொற்கள் ஒழிய; தூய தவத்தாய - மாசற்ற தவத்தினல் அடையத்தக்க; ரங்கன் - திருவரங்க நாதன், ஏமம் தகுவன் வதம் ஆரி - ஹிரண்யாசுரனது வதத்தைச் செய்த மேன்மையுடைய; நய மாயன் - (யாவராலும்) விரும்பத்தக்க ஆச்சரிய பூதன்; அரி - விஷ்ணு; மாதவன் - இலக்குமிக்குக் கணவன் ஆகிய ஸ்ரீமந் நாராயணனது; வான் - வைகுண்டம்; அரிது அன்று - (எய்துதற்கு) அரிய தொன்றன்று; ஓர் - (இதனை) அறிவீராக (எ-று)

கின்னரர் எனப்படும் தேவ சாதியர் மனிதவுடலும் குதிரை முகமும் உடையவர், இவர்கள் மாதர் கின்னரிகள். இவர்கள் பாடும் இசை 'கின்னர கீதம்' எனப்படும். இவை தெய்வீகப் பாடல்கள், (Celestial Songs) ''கீதங்கள் பாடினர் கின்னரர்'' என்ருர் தொண்டரடிப் பொடியாழ் வாரும் (திருப்பள்ளியெழுச்சி-9) ஆடல் - சொல்லுதல் (சொல்லாடல்), தெய்வீகப் பாடல்களைப் பாடினல் வைகுண்டம் எளிதில் பெறலாம் என்றபடி. ஏமம் - பொன், தகுவன் - அசுரன்; ஹிரண்யன், பொன்னிறமுடைய அசுரன். அரங்கன், வதமாரி, நயமாயன், அரி, மாதவன் – இவை ஒருபொருள் குறித்த பல பெயர்கள்; ஆரி - மேன்மை, வான் - ஆகாயம்; வைகுந்தத்தைக் காட்டும். ஓர், சொல் வாய் - முன்னிலை ஏவல்வினைமுற்றுக்கள். வயனம் - பழிமொழி.

(உரை - பேராசிரியர் ஸ்ரீ C. ஜகந்நாதாசார்யர்)

மும்மண்டில வெண்பா

அரங்கமே போற்றுவா யாடரவிற் பூத்த
வரங்கமழ் காற்றுணைநேர் வாடல்—கரங்கூப்பு
வீற்றுவகைப் பாடல்களால் வீழகமே பாழாகா
மாற்றுயர்ந்த வீடதென வாழ்.

(இச் செய்யுளின் இரண்டாஞ்சீர் மூன்ருஞ்சீர்களை முதலாகக் கொண்டு கடைக்குறைக்கு முதலைக்கூட்டி வாசிப்பினும் இரண்டு செய்யுட்களாய் முடிதலின் இயல்பாயுள்ளதோடு கூட்டி மும்மண்டிலம் என ஆன்ருேராற் கூறப்பட்டது)

போற்றுவாய் ஆடரவிற் பூத்த வரங்கமழ்
காற்றுணை நேர்வாடல் கரங்கூப்பு—வீற்றுவகைப்
பாடல்களால் வீழகமே பாழாகா மாற்றுயர்ந்த
வீடதென வாழ்அரங்க மே.

ஆடரவிற் பூத்த வரங்கமழ் காற்றுணைநேர்
வாடல் கரங்கூப்பு வீற்றுவகைப்—பாடல்களால்
வீழகமே பாழாகா மாற்றுயர்ந்த வீடதென
வாழ்அரங்க மேபோற்று வாய்.

பொருள் :-

அகமே - மனமே! ; அரங்கமே - திருவரங்க நகரினையே; போற்றுவாய் - துதிப்பாய்; ஆடு அரவில் பூத்த - படமெடுத்தாடும் ஆதிசேடனுகிய பாம்பின் மேல் மலர்ந்தருளிய; வரம் கமழ் கால்-வரங்களைப் பரிமளித்தளிக்கும் திருவடிகள்; துணை - காப்பாகும்; நேர் - (அத்திருவடிகளை) நெருங்குவாய்; வாடல் - வாடாதே (வாட்டமுருதே, மெலிவுருதே, வருத்தமடையாதே) கரம்கூப்பு - கைகளைக் குவித்து வணங்குவாய்; வீற்று - வேறுபடுகின்ற; வகைப்பாடல் களால் - பலதிறப்பட்ட பாவினங்களால்; வீழ் - விரும்பிப்

போற்றுவாய்; அது - அந்தத் திருவரங்கமே; பாழாகா - என்றும் அழியாத; மாற்று உயர்ந்த - வலிமையில் மேன்மையான (தரமுயர்ந்த); வீடு - வீடாகும் (மோட்சமாகும்; வைகுந்தமாகும்) (அது - பகுதிப் பொருள்விகுதி) ; என - என்று கொண்டு வாழ் - (நீ அங்கே) வாழ்ச்சி பெறுவாயாக. (எ-று)

[திரு அரங்கம் - பூலோக வைகுண்டம் எனப்படும். நீ அங்கு வாழ்வாயாக என்று நெஞ்சுக்கு உபதேசிக்கின்றூர், ''கோயில் வாசம் போலே'' எனச் சிறப்பிப்பதும் உண்டு.[நேர், கூப்பு, வீழ் - முன்னிலை ஏவல். வாடல் - அல்லீற்று எதிர்மறை வினைமுற்று பாழாகா -ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். வாழ் - வியங்கோள்.

(உரை - பேராசிரியர் ஸ்ரீ. C. ஜகந்நாதாசார்யர்)

எண் வகைச் சந்தமும் இயைந்த பாடல்

தன, தான, தத்த, தாத்த, தந்த, தாந்த, தன்ன, தய்ய என்பவை எட்டுச் சந்தங்கள் எனக் கூறப்படும். இசைத் துறையில் ஸ, ரி, க, ம, ப, த, நி என்ற ஏழினையும் ''ஸ்வரங்கள்'' என்பர். இதைக் கொண்டு பல ராகங்கள் அமைப்பர். அது போல இவ்வெட்டுச் சந்தங்களைக் கொண்டு தம் தம் புலமைத் திறத்திற்கேற்ப விரிவுபட வண்ணப் பாடல்களைப் பாடுவது அருட் புலமையாளர் இயல்பு. இம்முறையில் அறுபத்து நான்கு கலைகளைக் கொண்டு முதல் ஒலியந்தாதி, நடு ஒலியந்தாதி, பேரொலியந்தாதி என்ற அரிய நூல்களும், வண்ணப்பாடல்களும், திருப்புகழ்ப் பாடல்களும் பிறயாப்புகளில் சந்தங்கள் அமைந்த பாடல்களும் இவர் பாடியுள்ளார். இருப்பினும் ஒரே பாடலில் எட்டுச் சந்தங்களை வரிசைப்பட அமைத்துப் பொருளமைதியுறப் பாடியிருப்பது கற்றூர்க்குக் களிபேருவகை தருவதாகும்.

பசு765

தய்ய தான தத்த தாத்த தாந்த
தந்த தன்ன தன—தய்யாறு

நெய்ய ருது விட்ட பூக்கள் ஆர்ந்த
கஞ்ச மன்னு புனல் மல்லோவா
நெல்லை யூரும் மெச்சு பாட்டு வேந்தர்
தங்கள் மென்மை யினை எள்ளாதோர்
செய்ய தாளை பற்று மாக்கம் ஏய்ந்த
தொண்டர் உண்மை நிலை கொள்வேனே
தில்லை வாழும் அத்தர் கேட்ட தாஞ்சொல்
ஒன்றை இன்ன தென விள்வாயே
பைய ராவி ரித்த மூர்த்தி ஈன்ற
பெண்கள் வன்ன முலை புல்வாகா!
பௌவ நீர்கு டித்த கீர்த்தி பூண்ட
நம்பன் ஒன்ன லரை வெல்வேலா!
கைய மாமு கந்த னார்க்கு நேர்ந்த
தம்பி யென்ன வரும் வல்வீரா
கள்வ ராம்அ ரக்கர் வாழ்க்கை பேர்ந்த
பின்பு விண்ணி லுறை செவ்வேளே!

முருகனுக்கு மூவாறு, முன்புதொட்டுக் காத்தல்
உருகு மயல் ஈதல், உறுபூண்—பெருகுசெவி
உண் மகிழ்ச்சி சேர்ப்ப(து), உலகதனைக் சூழவிடல்
கண், விண், பெண், பொன், பண், கனி,

(முருகனுக்கு 18 கண், காத்தல் விண், மயல் ஈதல் பெண், ஆபரணம் பொன், மகிழ்ச்சி தருதல் பண், உலகைச் சூழ விட்டது கனி – எனநிரல்நிறைப் பொருள் கொள்க. (அருள்விழி 12, அக்கினிக்கண் 6 ஆக 18.)

வேதம் ஆகமம் வாழி! வி யன்தமிழ்
பூத லத்தொடு பொன்னகர் வாழி! நல்
ஆத ரத்துடன் ஆண்டருள் சற்குரு
பாதம் வாழி! மெய்ப் பத்தரும் வாழியே!